Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 11 | சௌமிய புரட்டாசி 17 | றஜப் 20 | (3-10-69) | வெள்ளிக்கிழமை | இதழ் 233




# "உலகத்தின் தலைவிதியை மாற்றியமைத்த மகான்

## சிறு பகுதியையாவது பின்பற்றுவோம்"

### காந்தி நூற்றுண்டு விழாவில் பிரதமர்

கொழும்பு, வியாழன்

**மகாத்மாவின் போதனைகள், தியாகங்கள் வெளிநாட்டு ஏகாதிபத்தியங்களை எதிர்த்து இந்தியாவை பலம் வாய்ந்த ஒரு நாடாக்கியதுடன் மட்டுமல்லாமல் இலங்கை உட்பட பல உலக நாடுகளுக்கு சுதந்திரத்தையும் பெற்றுத்தருவதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தந்ததென்று பிரதமர் டட்லிசேனநாயக்கா இன்று கூறினர்.**

காந்திமகான் காட்டிய பாதையில் ஒரு சிறுபகுதியையாவது பின்பற்றிச் செல்வோம் என்றும் அவர் கூறினர்.

கொழும்பு சுகததாசா ஸ்டேடியத்தில் நடைபெற்ற காந்தி நூற்றுண்டு விழா வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்

பிரதமர் டட்லி சேனநாயக்கா பேசுகையில் கூறியதாவது:—


"உலகத்தின் தலைவிதியை மாற்றியமைக்கக்கூடிய விதத்தில் வாழ்க்கை நடாத்திய விரல் விட்டு எண்ணக்கூடிய மகான்களில் மகாத்மாவும் ஒருவர் மக்களோடு மக்களாகப் பழகி, அவர்கள் நெஞ்சில் சுதந்திர வேட்கையை ஏற்படுத்தி பெரிய மாற்றத்தை ஏற்படுத்திய காந்தி மகான் இந்தியாவுக்குமட்டுமல்லாமல், ஆசிய ஆபிரிக்க நாடுகள் விடுதலைபெற வழிவகுத்தார் மாபெரும் இந்தியனுக வாழ்ந்ததுடன்மட்டுமல்லாமல், உலகத்தின் கௌரவப் பிரஜையாகவும் அவர் வாழ்ந்திருக்கிருர் என்பதனைப் பாராட்டாமல் இருக்க முடியாது

மகாத்மா காந்தி நமக்குக் காட்டிய வழிகளில் ஒரு பகுதியையாவது நாம் பின்பற்றினுல் அதுவே போதுமானதாகும் மகாத்மா நூற்றுண்டு விழா கொண்டாடும் இந்நேரத்தில், எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழ சங்கற்பம் பூண்டு கொள்ளவேண்டும்

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திருமதி பண்டிட் விஜயலட்சுமி பேசுகையில் கூறியதாவது:

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பலதுறைகளிலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்பு இருந்துவருகிறது. மகாத்மா எமக்குக் காட்டிச் சென்ற 'சத்தியாக்கிரகம்' பெரியதொரு வரப்பிரசாதமாகும். விஞ்ஞானரீதியில் உலகம் இன்று விண்ணையும் வெற்றி கொள்ளும் அளவுக்கு வளர்ந்துவிட்டது. ஆனுலும் விஞ்ஞானம் எம்மை அடிமைப் படுத்தாமல், நாம் விஞ்ஞானத்தை ஆளக்கூடியவிதத்தில் அதனை நாம் ஆளவேண்டும். வெறுப்பு, பொருமை, சந்தேகம் ஆகியவற்றை ஒழித்து காந்தி பாதையில் சென்று சகல இனமக்களும் சகோதரத்துவமாக வாழ வேண்டும் இலங்கை-இந்திய மக்கள் ஒன்று சேர்ந்து காந்திய வழியில் செல்லவேண்டும்

(16-ம் பக்கம் பார்க்க)



பல இனங்கள், பல மொழிகள், பல மதங்கள், என்று பல்வேறுபட்ட பிரச்னைகளுக்கும் ஈடு கொடுத்து பாரத நாட்டை இன்று பவ்வியமாக வழி நடத்திச் செல்லும் பிரதமர் இந்திரா காந்தியை சிறுமியாக இருக்கும் போதே இதற்கெல்லாம் ஆற்றல் இருக்கின்றதாவென்று மகாத்மா, அவர் கையைப் பிடித்து நாடி பார்த்திருப்பார் போலிருக்கின்றது அண்ணலின் அன்புக்கு பாத்திரமான அன்றைய சிறுமி இன்று உலகமே வியக்கும் விதத்தில் ஆட்சிபுரிவதைக் காணும் போது அவர் ஆத்மா சாந்தி கொள்ளும் என்பது திண்ணம்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 269-வது சுவீப் சிட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

**1-ம் பரிசு**

09 K 0935 100,000

**2-ம் பரிசு**

30 D 0502 40,000

**3 ம் பரிசு**

07 V 0622 10,000

ரூ. 519-00 ஆறுதல் பரிசு பெறும் விபரம் வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | Z | 0562 | 26 | X | 0869 |
| 34 | T | 0855 | 09 | B | 0415 |
| 39 | Y | 0279 | 41 | T | 0286 |
| 43 | G | 0907 | 02 | B | 0871 |
| 16 | U | 0358 | 07 | P | 0702 |
| 35 | C | 0135 | 25 | Q | 0740 |
| 18 | L | 0341 | 40 | A | 0662 |
| 23 | L | 0551 | 19 | K | 0634 |
| 41 | G | 0877 | 44 | S | 0185 |
| 35 | O | 0488 | 10 | A | 0073 |
| 02 | A | 0710 | 23 | E | 0250 |
| 10 | G | 0402 | 29 | Q | 0471 |
| 09 | R | 0413 | 41 | V | 0850 |
| 33 | M | 0240 | 14 | W | 0345 |

(16-ம் பக்கம் பார்க்க)

## எல்லை காந்தியின் பாதங்களை தொட்டு வணங்கினர்

புதுடில்லி, அக். 2

**ராஜ்காட்டிலுள்ள காந்தி சமாதிக்கு அஞ்சலி செலுத்தி விட்டு எல்லைக்காந்தி கான் அப்துல் கபார்கான் வெளியே வந்த போது ஆயிரக்கணக்கான மக்கள் குழுமிநின்று அவர் பாதத்தைத்தொட்டு வணங்கினுர்கள்.**

மக்களின் முகங்களில் உற்சாகமான மகிழ்ச்சிப்பிரவாகத்தை அப்போது காணக் கூடியதாகவிருந்தது.

ராஜ்காட்டில் ஆலமரக் கன்றுக்கு எல்லைக்காந்தி முன்னதாக நீர் ஊற்றினுர். இந்த ஆலங்கன்று ராஜ் காட்டில் நடப்படும்.

எல்லைக்காந்தியை டாக்டர்கள் இன்று சோதனை செய்தபோது அவர் உடல் நிலை நன்ருக இருப்பதாகத் தெரிவித்தனர். இன்றுமாலை புதுடில்லியில் நடக்கும் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்வார் என்றும்அறிவிக்கப்பட்டது.

### காந்தி முத்திரை

ராஜ்காட்டில் நடந்த நிகழ்ச்சியில்ராஜ்டிரபதி திரு வி வி கிரி காந்தி நினைவு முத்திரையொன்றையும் வெளியிட்டார்.

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் அண்ணுமலை இசைத்தமிழ் மன்றத் தமிழிசை விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்:-

மாலை 5-30மணி- இசைக் கல்லூரிமாணவிகள் பாட்டு, 6-00மணி- செல்வி குணபூஷணம் நாகலிங்கம் பாட்டு, 7-30 மணி - சோமசுந்தரம் பாட்டு, 9-30—10-30வரை சத்தியலிங்கம் பாட்டு.

இன்றைய விழாவில் உடுவில் ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு வி தர்மலிங்கமும் திரு. எஸ். தியாகராஜாவும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தலைமையுரையும் ஆசியுரையும் வழங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# இ. தி. மு. கழகத்துக்குகிடைத்த இலவச பிரசாரம்

## உல்லாசப் பிரயாணமும் சீதாவும்

### வேலை நிறுத்தம் பலப் பரீட்சையா?

'பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதை' என்பார்கள் இதுபோலத்தான் இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகம் சம்பந்தமாகச் சில பத்திரிகைகளும் சில அரசியல்வாதிகளும் சில கட்சிகளும் எடுத்த முயற்சிகள் முடிவடைந்திருக்கின்றன.

எவருக்குமே அதிகம் தெரியாமல் எங்கோ மூலைகளில் அங்குமிங்குமாக ஆளுக்கொருவராக சிலர் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் சில கூட்டங்களையும் பத்திரிகைகளுக்கு அறிக்கைகளையும் இடையிடையே விடுத்துவந்தனர். இந்த இயக்கங்களையும் இவற்றின் தலைவர்களையும் தெரியாதவர் பலர் இருந்திருக்கிறார்கள். ஆனல் அமரர் அண்ணுதுரைமீதும் நடிகர் எம். ஜி. ஆர் மீதும் மானசீக அன்பு கொண்டோர் பலர் நாட்டின் மூலை முடுக்குகளிலு முள்ளனர். அரசியல் ஆதாயத்தைக் கருதி இங்கு தி. மு. க பூச்சாண்டியைச் சிலர் கிளப்பி வந்தனர் இது 'ஓநாய், ஓநாய்' என்ற கதையாகியிருக்கிறது. உண்மையாகவே இப்போது தி. மு. க. வந்துவிட்டது. அதைப் பூதாகாரமாக்க முனைந்தவர்கள் அது வளர வழிவகுத்து விட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகாநாட்டில் அதன் தலைவர் இளஞ்செழியனும் வேறு சிலரும் கொரிலா யுத்தம் என்றும்; ஆயுதக்கடத்தல் என்றும் ஏதோ பேசியதாக சில ஆங்கிலப் பத்திரிகைகளும் சிங்களப் பத்திரிகைகளும் பெரிதுபடுத்திச் செய்திகள் வெளியிட்டதுடன் இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டுக்குப் பெரும் தீங்கென்றும் தேசத்துரோகமான இந்தக் கழகத்தை இனியும் வைத்திருக்காமல் தடைசெய்ய வேண்டுமென்றும் கோரித் தலையங்கங்களும் தீட்டின. இ. தி. மு. க தலைவர்கள்மீது வழக்குத் தொடரப்பட வேண்டுமென்றும், அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்கத்தைத் கோரும் கடிதங்களையும் இந்தப் பத்திரிகைகள் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றன. முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமா பசநாயக்கா மற்றும் சில அரசியல் தலைவர்களும் தீவிரவாதிகளும் அறிக்கைகள் விடுத்து வருகின்றனர் இவர்கள் தவிர மற்றொரு இ. தி. மு. கழகத்தின் தலைவரான மணவைத்தம்பியும், இன்னொரு இ. தி. மு. கழகத்தின் தலைவரான அந்தோனிமுத்துவும் இ. தொ. கா. ஐ. தொ. கா. மற்றும் தமிழ் அரசியல் வாதிகளும்கூட இளஞ்செழியனின் இ. தி. மு கழகம் பற்றியும் அதன் மாநாட்டுப் பேச்சு பற்றியும் கண்டனம் தெரிவித்தும் அது ஒரு கழகமா என்றும் அறிக்கைகள் விடுத்தனர். சென்றவாரம் முழுக்க இலங்கைப் பத்திரிகைகளில் இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகம் பற்றிய செய்தி வராத நாளில்லை என்றே சொல்லலாம். இரகசியப் பொலிசாரும் என்னென்னவோ விசாரணைகள் நடத்தி வருகின்றனர். யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கொழும்புக்கு விரைந்து சென்று இ. தி, மு. கழக மகாநாடு பற்றி யாருக்கோ விளக்கமும் கொடுத்துத் திரும்பினர். வடபகுதி பொலிஸ் அதிபர் அறிக்கை தயாரித்து அனுப்பினர்.

இந்தப் பரபரப்பையும், சுறுசுறுப்பையும் பார்த்தால் யாழ்ப்பாணத்தில் நடந்த இ. தி. மு. கழக மாநாட்டைத் தொடர்ந்து ஆயுதங்கள் வந்து இறங்குவது போலவும், கொரிலா யுத்தம் எச்சமயத்திலும் ஆரம்பிக்கப்படவிருப்பது போலவும் அத்தனை படபடப்பு. இதுதான் 'நிழலுடன் சண்டை பிடிப்பது' என்று ஆங்கிலத்தில் உள்ள பழமொழி

இளஞ்செழியன் பத்திரிகை நிருபர்களின் மகாநாடு ஒன்றைக் கூட்டி இ. தி. மு. கழகத்தின் கொள்கை பற்றியும் யாழ்ப்பாண மகாநாடு பற்றியும் விளக்கம் தெரிவித்தார். சகல பத்திரிகைகளும் அவை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முதல் பக்கத்தில் சிறிய அளவிலாவது அந்த விளக்கத்தைப் பிரசுரித்துத்தான் ஆகவேண்டிய நிலை ஏற்பட்டது. அவை பிரசுரித்தன.

இளஞ்செழியன் பலேஆள் தான். தேர்தல் நெருங்கி வரும் சமயத்தில் பழம் பெருங் கட்சிகளுக்கே கிடைக்காத பிரசாரத்தை யாழ்ப்பாணத்தில் மகாநாடு நடத்தியதைத் தொடர்ந்து சுலபமாகச் செய்துவிட்டாரே. எந்த அரசியல்கட்சிகளுக்கும் இந்த அளவுக்கு எடுத்த எடுப்பில் 'பேப்பர் பப்ளிசிட்டி' என்று சொல்லப்படுகின்ற பத்திரிகைப் பிரசாரம் கிடைத்ததில்லை.

தேர்தல் நெருங்க நெருங்க இன்னும் பல் வேடிக்கைகளைக் காணலாம்.

பலாத்காரம், புரட்சி, யுத்தம், போராட்டம் என்ற பேச்சுக்கள் இலங்கையில் இதுவரை யாருமே பேசியதில்லையா? இளஞ்செழியன் தான் இளைத்தவர் என்று நினைத்தார்கள்; ஆனல் அவரோ இதுவரை பேசியவர்கள்எடுத்த 'பப்ளிசிட்டி'யைவிட அதிகமாக எடுத்து எல்லோருக்கும் 'பெப்பே' சொல்லிவிட்டார்.

0 0 0

#### முதல் உல்லாசப் பிரயாணி சீதா

இலங்கைக்கு வெளிநாட்டிலிருந்து முதல்முதலில் வந்த உல்லாசப் பிரயாணி யார்? ஆட்சி மன்றத்தில் இதுபற்றி இரண்டுவிதமான கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இதுபற்றி ஆராய்ச்சியாளர்களிடம் விட்டுவிடலாம். ஆனல் இப்போது இங்குள்ள ஆராய்ச்சியாளர்கள் வேறு கண் கொண்டல்லவா ஆராய்கிறார்கள். அது எப்படியாவது போகட்டும்.

(15-ம் பக்கம் பார்க்க)

---

# அல் - அக்ஸாவும் - ஆமதாபாத்தும்

## உலக மேடை

'மொட்டந் தலைக்கும் முழந்தாளுக்கும் முடிச்சுப் போடுகிறது போல' என்ற பழமொழி சரியோ தவறோ தெரியாது. ஆனல் அல் அக்ஸாபள்ளிவாசல் தீப்பிடித்த சம்பவத்தையும் ஆமதாபாத் இனக்கலகத்தையும் சம்பந்தப்படுத்தி ரபாத்தில் நடைபெற்ற இஸ்லாமிய உச்சிமகாநாட்டில் இந்தியாவக்கு முகத்தில் கரி பூசி பழி தீர்த்துக் கொண்டதில் பாகிஸ்தான் அதிபர் யாஹ்யா கான் வெற்றி பெற்றுவிட்டார். இதற்கு வஞ்சம் தீர்த்துக்கொண்டதுபோல நியுயோர்க்கில் நடந்த நடுநிலைமை நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மகாநாட்டில் பாகிஸ்தான் கலந்து கொள்வதற்கு எடுத்த முயற்சியை இந்தியா தடுத்துவிட்டபோதிலும் இஸ்லாமிய உச்சிமகாநாட்டுக்கு இந்தியத் தூதுக் குழுவை அழைத்துப்பின்னர் அந்த மகநாட்டில் கலந்து கொள்ளாமல் தடுத்து அவமானப்படுத்தியதுபோல பாகிஸ்தானுக்கு ஏற்படவில்லை.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமுள்ள தகராறு இப்படி எதிரொலித்ததால் அரபுநாடுகளுக்கு நன்மையோ அல்லது நடுநிலைமை நாடுகள் மேற்கொள்ளும் உலகஅமைதிகான முயற்சிகளுக்குவெற்றியோகிடைத்துவிடமாட்டாது. மொரோக்கோவின் தலைநகரான ரபாத்தில் இஸ்லாமியநாடுகளின் உச்சி மகாநாடு கூட்டப்பட்டபோது இந்தியா அழைக்கப்படவில்லை. இந்தியா ஓர் இஸ்லாமிய நாடு அல்ல. அங்கு ஆறு கோடி முஸ்லிம்கள் வாழுகின்றனர் என்பது உண்மை. இந்தியாவின் ஜனதிபதியாக ஓர் இஸ்லாமியர் பதவிவகித்தாரென்பதும் இன்று பிரதம நீதியரசராக ஓர் இஸ்லாமியர் கடமையாற்றுகிறார் என்பதும், அமைச்சர்களாகவும் மற்றும் முக்கியபதவிகளிலும் இஸ்லாமியர்கள் இருப்பதுவும்உண்மைதான். ஆனுலும் இந்தியாமதச்சார்பற்ற நாடு. அதன் அரசியல் அமைப்பிலேயே இது தெளிவுபடுத்தப் பட்டிருக்கிறது. அங்கு சகலமதங்களுக்கும் சுதந்திரம் இருக்கிறது. இஸ்ரேல்-அரபு யுத்தத்தின் போது இஸ்ரேலியர்கள் கைப்பற்றிய அரபுப்பகுதியான ஜெருசலத்திலுள்ள முஸ்லிம்களின் புனிதஸ்தலமான அல் அக்ஸா பள்ளிவாசலின் ஒரு பகுதியில் ஏற்பட்ட தீவிபத்து சம்பந்தமாக இந்தியாவும் கவலையும் கண்டனமும் தெரிவித்தது. இலங்கையும் கவலையும் கண்டனமும் தெரிவித்ததுடன் பள்ளிவாசலின் புனரமைப்புக்கு உதவுவதற்கு இலங்கை தன்னுலான பங்கைச் செலுத்தத் தயாராக இருப்பதாக பிரதமர் திரு டட்லிசேனநாயகா உடனடியாகவே அறிவித்திருந்தார். அல்அக்ஸா பள்ளிவாசல் தீச்சம்பவத்துக்கு [illegible] களிலுள்ள முஸ்லிம்களுடன் இலங்கை வாழ் முஸ்லிம்களும் தங்கள் கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துக்கொண்டனர். இஸ்ரேலியரின் பிடியிலுள்ள பகுதிகளிலிருக்கும் முஸ்லிம்களின் புனித ஸ்தலங்களைப் பாதுகாக்கவும் பாலஸ்தீனமக்களின் விடுதலைக்குப் போராடுவதற்கும் அடுத்து என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது பற்றி ஆராய்வதற்காக இஸ்லாமிய நாடுகளின்உச்சிமகாநாடுரபாத்தில்கூட்டப்பட்டபோது மதச்சார்பற்ற இந்தியா பேசாமலிருந்திருக்கலாம். இந்த மகாநாட்டை பாகிஸ்தான் தனதுஅரசியல்

**எஸ். எம். ஜி.**

நோக்கத்துக்காகப்பயன்படுத்திக்கொள்ளுமே என்ற அச்சத்தினுலும் இந்தியாவிலுள்ள ஆறுகோடி முஸ்லிம்களின் அனுதாபமும் ஆதரவும் இந்தியஅரசிடம்இருக்க வேண்டுமென்பதற்காகவும் இந்த மகாநாட்டுக்கு இந்தியா அழைக்கப்படாததற்காகக்கவலையும்கண்டனமும் தெரிவித்து ரபாத் மகாநாட்டின் கவனத்தை ஈர்த்தது. இந்தியா ஓர் இஸ்லாமிய நாடல்லவாயினும் உலகில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மூன்ருவது பெரிய நாடு என்ற வகையில் இஸ்லாமிய உச்சி மகாநாட்டில் இந்தியாவும் கலந்துகொள்ளலாம் என்ற வகையில் ரபாத் மகாநாடு இந்தியாவைக் [illegible] விடுத்தது. இது ஏகமனதான அழைப்பு என்றும் கூறப்பட்டது இந்திய அமைச்சர்களில் ஒருவரான பக்ருதீன் அலி அகமத் தலைமையில் இந்தியா ஒரு தூதுக் குழுவையும் ரபாத் மகாநாட்டுக்கு அனுப்பிவைத்தது. இத்தூதுக்குழு ரபாத் மகாநாட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும்வட இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஏற்பட்ட இனக்கலகத்தைச் சுட்டிக் காட்டி இஸ்ரேலில்மட்டுமல்ல இந்தியாவிலும் முஸ்லிம்கள் கொடுமைப்படுத்தப்படுகின்ருர்களென்றும் இந்நிலையில் இஸ்லாமிய உச்சி மகாநாட்டில் இந்தியா கலந்துகொள்வதற்குத் தகுதியில்லையென்றும் கூறி, பாகிஸ்தான் அதிபரும் மற்றும் சில அரபு நாடுகளின் பிரதிநிதிகளும் எதிர்ப்புக் காட்டினர் பாகிஸ்தான் அதிபர் வெளிநடப்புச் செய்யப்போவதாகவும் பயமுறுத்தினர். அவரது மிரட்டல் பலித்தது. இந்தியத் தூதுக்குழுவை அழைத்த ரபாத் மகாநாட்டினர், அந்த மகாநாட்டில் இந்தியத் தூதுக்குழு கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை. அழைத்தபடியால் அதை அனுமதிக்கத்தான் வேண்டுமென்ருே இல்லையேல் தாங்கள் வெளிநடப்புச் செய்வோமென்ருே எந்த நாடும் அங்கு கூறவில்லை. மொரோக்கோவில் இஸ்லாமிய உச்சி மகாநாடு நடைபெற்றதால்அந்த நாட்டுடன் ராஜீயத் தொடர்பை முன்னரே துண்டித்துக்கொண்டிருந்த ஓர் அரபு நாடான ஈராக்கூட கலந்துகொள்ளாத இஸ்லாமிய உச்சி மகாநட்டில், இலங்கை உட்பட உலக நாடுகள் பலவும் அல் அக்ஸா பள்ளிவாசல் சம்பவத்துக்கு கவலையும் கண்டனமும் தெரிவித்தும் இஸ்லாமிய உச்சி மகாநாட்டுக்குத் தங்களை அழைக்கவில்லையே என்று கவலை தெரிவிக்காமலிருந்தும், இந்தியா வலுவில் இந்த அவமானத்தைத் தேடிக்கொண்டிருக்கிறது.


இந்தியாவைப் பொறுத்தவரையில் அது தனது வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் செய்யத்தான் வேண்டும். நேருவின்காலத்தில் வெளி உலகில் இந்தியாவுக்கு இருந்த செல்வாக்கு இப்போது இல்லை. உலகில் எந்தப் பிரச்னையானுலும் நேரு என்ன சொல்லப்போகிருர் இந்தியாவின் நிலை என்ன என்று வல்லரசுகள் முதல் சிறிய நாடுகள்வரை ஆவலுடனும் அச்சத்துடனும் இருந்த நிலை இன்று இல்லை.

எந்த வல்லரசுக் கோஷ்டியிலும் சேராமல் இந்தியா நடு நிலைமை வகித்து வந்தாலும், 'சியாட்டோ', 'சென்டோ' எனப்படும் இராணுவக் கூட்டுக்களில் சேர்ந்து அமெரிக்க உதவியைப் பெற்று வந்துள்ள பாகிஸ்தான், சீனவுடனும் சோவியத் யூனியனுடனும் நட்புறவு கொண்டு அந்த நாடுகளின் உதவியையும் பெற்றுவருவது அதன் ராஜதந்திரத்துக்கும் அதன் வெளியுறவுக் கொள்கையின்

[16ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மாவின் போதனைகள் சாதனைகளாக உருவெடுக்க வேண்டும்



— ஸி. ராஜகோபாலாச்சாரியார் —

தீய செயல்களையும் தவறுகளையும் எதிர்த்துப் போராடுவதற்கு அஹிம்சை அடிப்படையில் புதியதொரு 'நுட்ப சக்தியை' உருவாக்கியவர் மகாத்மா காந்தி எனக்கூறி உலகத் தலைவர்கள் அவரைப் புகழ்கிறார்கள். அம் மகாத்மாவால் போதிக்கப்பட்ட இந்த அஹிம்சையாகிய 'நுட்ப சக்தி' அவர் பயன்படுத்திய வகையில் பயன்படுத்தப்படாது தவறான கருத்துக்களையும், ஏமாற்றத்தையும் தரத்தக்கவகையில் பயன்படுத்தப்படுகின்றன. கரி போன்ற எரிபொருளுக்குப் பதிலாக மின் சக்தியிலிருந்து எரிபொருள் சக்தியைப் பெறுவது போன்று காந்தி வாழ்ந்த காலத்துக்கு முன்னர் ஹிம்சை மூலமும் குழப்பங்களாலும் பெற்றவைகளைப் பெறுவதற்குப் பயன்படுத்தும் ஒரு கருவியல்ல அஹிம்சை. தீயவைகளை நேருக்கு நேர் நின்று எதிர்ப்பதற்கு சத்தியத்தையும் அன்பையும் கடைப்பிடிப்பதே மகாத்மா காந்தியின் 'நுட்பமாகும்'. ஆனால் சத்தியமும் அன்பும் சந்தையில் கிடைக்கக் கூடியவையல்ல. துவக்குகளை வாங்கி நாம் சேகரிப்பது போன்று அஹிம்சை, சத்தியம் ஆகிய இரண்டையும் நாம் வாங்கிச் சேகரிக்க இயலாது. கடவுள் நம்பிக்கையின் மூலமே இவ்விரண்டையும் பெறலாம்.

எதிரியின் நேர்மையின்மை, வெறுப்பு, ஹிம்சை ஆகியவற்றிற்கு மகாத்மாவால் அளிக்கப்பட்ட சத்தியம், அன்பு ஆகிய ஆயுதங்களால் விளக்கமாகச் சக்திவாய்ந்த, பதிலளித்தல் இலகுவானதாகும். அன்பு, சத்தியம்ஆகிய இந்தச் சக்திகளைக் கொண்டே உலகில் நிலவும் அரசியல், பொருளாதார, சமூக முரண்பாடுகளை இலகுவாக நீக்கலாம். இப்பிரச்னைகளுக்குத் தீர்வு காணுவதற்கு இச்சக்திகளால்மாத்திரமே முடியும் ஆனால் நடைமுறையில் இது சாத்தியமாகுமா என்பது கேள்விக்குரிய விஷயமாகும். எனக்கு வெறுப்பேற்படத் தக்கவகையில் நடந்து கொண்ட ஒருவன்மேல் நான் எவ்வாறு அன்பு செலுத்த முடியும்? வெள்ளையனிடத்தில் எவ்வாறு ஒரு நீகிரோ அன்பாகவிருப்பான்? நாட்டுப் பற்றுள்ள ஒரு பாகிஸ்தானியன் எப்படி இந்தியர்களின்மேல் அன்புசெலுத்துவான். அதே வேளையில் நாட்டுப்பற்றுள்ள இந்தியர்கள் பாகிஸ்தானியர்களை விரும்புவார்களா? அன்புச் சக்தியானது அதற்கு எதிரான பகையுள்ள இடத்திலிருந்து ஒரு பொருளும் தோன்ற முடியாது. காந்திஜியின் மார்க்கத்தை ஒரு வெற்றுக் கோட்பாடாக அல்லது ஏமாற்றமளிக்கும் சக்தியாகப் போகவிடாது நாம் அதைக் காப்பாற்ற விரும்பின் அன்பானது இறைவனிடத்தில் நாம் வைக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையிலிருந்து தோன்றவேண்டும்.

உலகிலுள்ள சகல உயிர்களின் இதயங்களிலும்



இறைவன் வீற்றிருக்கிறான் எனவும் இந்த இறைவனின் சக்தியினால் எல்லா உயிர்களும் சூத்திரத்தால் ஆட்டப்படும் பொம்மைகள் போன்று அசைகின்றன என பகவத்கீதை கூறுகிறது. எல்லா ஆன்மாக்களின் இதயத்திலும் இறைவன் இரகசியமாக இடம்பெற்றிருப்

(13-ம் பக்கம் பார்க்க)

# கொஞ்சு தமிழ் பேசிய சுவாமி விபுலானந்தர்

பாலா

**1938**-ம் ஆண்டில் ஒரு நாள் கல்லூரி லீவுக்காக வவுனியாவிலிருந்த ஓர் உறவினர்வீட்டில் இருந்தபோது ஒரு பரபரப்பான செய்தி கிடைத்தது. யாரோ ஒரு சாமியார் அங்கே பிரசங்கம் செய்யவருகிறார் என்பதே அந்த நற்செய்தி.

வவுனியா அப்பொழுது வெறும் காடு. நாலைந்து கடைகள் மட்டுமே இருந்தன. பட்டினத்தில் வசித்தவர்களில் முக்கால்வாசிப் பேர் அரசாங்கஊழியர்கள். பட்டினத்திலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள ரம்பைக்குளம் என்னும் இடத்தில் நான் இருந்த உறவினர்வீட்டில்தான் அந்தச் சாமியார் தங்குவதாக ஏற்பாடாகியிருந்தது

சாமியாரைக்கண்ட அந்த க்ஷணத்திலேயே நான் அவர்பால் கவரப்பட்டுவிட்டேன். நான்மட்டுமென்ன அங்கே கூடியிருந்தவர்கள் எல்லோருந்தான். அவருடைய தேகத்தில் ஏதோ ஒருவித காந்தசக்திஇருப்பதைஉணர முடிந்தது. கரியமேனி என்றாலும் வட்ட வடிவமான அந்தப்பெரிய விழிகளில் சாந்தமும் இரக்கமும் உறைந்துகிடந்தன. பிரமச்சரியத்தினால் உண்டான தேகத் தூய்மையும்! ஆழ்ந்த அறிவினால் உண்டான உள்ளத் தூய்மையும் சேர்ந்து, அஜானுபாகுவான அந்த சரீரத்துக்கு ஒருதேஜஸையும் பிரபையையும் அளித்தன.

அவர்தான் முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் என்று பின்னால் அறிந்து கொண்டேன்.

அடிகளார் கல்கத்தாவிலிருந்து ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாரால் வெளியிடப்பட்ட 'பிரபுத்த பாரதம்' என்ற உயர்ந்த ஆங்கில சஞ்சிகைக்கும் 'இராமகிருஷ்ண விஜயம்' என்ற தமிழ் சஞ்சிகைக்கும் ஆசிரியராய் இருந்துவிட்டு, ஸ்ரீ கைலாயத்துக்குப்போய் தரிசித்த பின்னர் தாயகம் திரும்பிவந்து பல இடங்களில் தமதுயாத்திரையைப்பற்றி சொற்பொழிவாற்றிக்கொண்டிருந்தார். அன்றிரவுதமதுயாத்திரைகளில் ஏற்பட்ட கஷ்டங்களைப்பற்றியும், இமயமலை உச்சியில் அமைந்துள்ள மானஸ்ஸரோவர் ஏரியின் அழகைப்பற்றியும், ஸ்ரீ கைலாயக்கோயிலைப்பற்றியும், பளிங்கு போன்ற பனிக்கட்டி குவிந்த வெள்ளியங்கிரியைப்பற்றியும் எங்களுக்குச் சொன்னார். தமிழில்தான்சொன்னார். ஆனால் அது தமிழா! பால்வடியும் பச்சிளம் பாலகன் கொஞ்சும் மழலையில் குலவியது போலிருந்தது அந்ததமிழ்; எங்கள் தமிழ்மொழுக்குஇத்தனை இனிமையும் கவர்ச்சியும் இருக்கும்என்று அன்றுவரை எனக்குத் தெரியாது!

## தமிழர் அனைவருக்கும் அவர் சொந்தமானவர்

அதிகாலை அடிகளாரே எங்கள் எல்லோரையும் எழுப்பிவிட்டார். காலைக் கடன்களை முடித்துவிட்டு வந்தோம். வேஷ்டியை வாரி இழுத்துக்கொடுக்குக்கட்டும்படிசொன்னார். யோகாப்பியாசம்ஆரம்பித்தது நாலைந்து யோகாசனப் பயிற்சிகளைச் [illegible] பிராணாயாமம் செய்யும் முறையையும் சொல்லித்தந்தார். நாலைந்து நாட்கள் எங்களுடன் தங்கிவிட்டுப் போய்விட்டார்

மறுபடியும் அவரைச் சந்திக்கும்பாக்கியம் எனக்குப் பலவருடங்களுக்குப் பிறகுதான் கிடைத்தது. இதற்கிடையில் அவர் ராஜா சேர் அண்ணாமலைச் செட்டியாரின் அழைப்பின் பேரில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும், கீழைத்தேச கலைப் பிரிவின் தலைவராகவும்(பின்) கடமையாற்றிவிட்டு, பின்பு இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்ப் பேராசிரியராக இருந்துவிட்டு, ஓய்வெடுத்துக்கொண்டு வெள்ளவத்தை ராமகிருஷ்ண மடத்தில் வந்து தங்கினார். இக்காலத்தில் தான் அவருடைய 'யாழ்நூல்' உருவெடுத்தது. எத்தனையோ வருடத்துஆராய்ச்சியின் பலனாக அவர் எழுதிய இந்த இசைநூலின் 'புறூவ்' அப்பொழுது வந்துகொண்டிருந்தது. தவறாமல் நான் அவரிடம் போகும்போது அதை எனக்குக் காண்பித்து தமது ஆராய்ச்சிகளைவிளங்கப்படுத்துவார். அதில் பொல்லாத பெரிய பின்னங்களும் கணித சூத்திரங்களும் இருக்கும். ஐன்ஸ்டீனின் தத்துவங்களை விளங்கிக்கொண்டாலும் கொள்ளலாம். எனக்கென்னவோ விபுலானந்தரின் கணக்குகளைப்பார்த்தபோது தலையைச் சுற்றியது. இது என் சிறுமையைத்தான்காட்டியது.

சிலப்பதிகாரக் காலத்தில் தமிழ்மக்கள் உபயோகித்த பேரியாழ், சீறியாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ், மயூரயாழ் முதலியவற்றை நன்றாக ஆராய்ந்து அவற்றை மீண்டும் உயிர்ப்பிக்கவேண்டுமென்று அடிகளாருக்குப் பெரும் அவா. சகோடயாழின் வெளிக்கூடு (பிரேம்) ஒன்றை மரத்தில் செய்வித்து வைத்திருந்தார். அதற்கு திலவு, சோடு, பத்தர் முதலிய உறுப்புக்களைப் பொருத்தி நரம்புகளையும் பூட்டி அதை முழுமையாக்குவதற்குமுன்பு அவரது உடல்நலம் குன்றிவிட்டது.

விபுலானந்தர் தமிழ் மக்கள் எல்லோருக்கும் சொந்தமானவர். யாழ்ப்பாணத் தமிழரோடு அவருக்கு மிகுந்த ஈடுபாடு. மயில்வாகனராய் இருந்தகாலத்தில்அவர் சிலநாட்கள் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபராக இருந்தது பலருக்குத் தெரியாமலிருக்கலாம். அன்னாரது சிலை அவர் பிறந்த ஊரான மட்டக்களப்பு காரைதீவில் பிரதிஷ்டை செய்யப்படுவது சாலப் பொருத்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதகீதம்

இராமநாதன் இசைக்கழகத்தில் நாதஸ்வரம், தவில் பயிற்சிவகுப்புகளுக்கு இடம் ஒதுக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டா? என்று ஓர் இசைப்பிரியர் வினவுகிருர். இந்துப் பல்கலைக் கழகமோ அல்லது தமிழ்ப் பல்கலைக்கழகமோ பெற்ருல் அதன்பின்னர் இதுபோல இன்னும் பல விஷயங்கள்—

## பசுந்துளிர்

கலை வளர்வதற்கான அம்சங்கள் எல்லாம் ஆலோசிக்கப்படும். பல்கலைக்கழக விஷயமாகத்தான் இன்னும் ஓர் 'முற்று' ஆகுமாப்போ லில்லையே. தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டும் என்ற கட்சியாரும் இந்து பல்கலைக்கழகம் வேண்டும் என்ற கட்சியாரும் ஒன்று சேர்ந்து ஒருமுகமாக ஒரு தீர்வு காண்பதற்கான அறிகுறிகள் தென்படக்கூடுமென்பது ஓர் அரசியல் முக்கியஸ்தரின் பேச்சில் சில வாரங்களுக்கு முன்பதாக அவதானிக்கக்கூடியதாயிருந்தது. ஆகவே பொறுத்திருந்து பார்ப்போமே. இப்போதைய இசைக்கழகத்தில் நாதஸ்வரம், தவிலுக்கு ஆதரவு கிடைக்குமென நான் நம்பவில்லை.

இந்தியாவில்நாதஸ்வரம், தவில் பயிற்சி வகுப்புகள் அரசாங்கஉதவிபெற்று பல ஊர்களில் நடைபெற்றுவருகின்றனவாம். நாதஸ்வரம், தவில் வாத்தியங்களில் இரண்டுவருஷ ஆராய்ச்சிப் படிப்பு அதாவது பட்டபிற்கால மேல்பயிற்சிக்கானவகுப்பு சென்னை கர்நாடக சங்கீதக்கல்லூரியில் 1961-62-ல் ஆரம்பிக்கப்பட்டது. அதில் 18 பேருக்குப் பயிற்சி அளிக்க வசதிசெய்யப்பட்டது. அவர்களுக்கு மாதம் ரூ. 30 உபகாரச்சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்வாண்டு இறுதியில் 11 பேர் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். இவர்களில்மூவர் பாதியில் படிப்பை நிறுத்தி விட்டனர். 1963-ல் நடைபெற்ற இறுதிப் பரீட்சையில் மீதி எட்டுப் பேரும் தேருமல் போய்விட்டனராம்.

இந்தநபர்கள் சங்கீத சாத்திரம்பற்றி ஒன்றுமே தெரிந்துகொள்ளவில்லையென்றும் அரசாங்கச்செலவில்இரண்டு ஆண்டுகாலம் சுகமாகப் பொழுது போக்கியிருக்கிருர்கள் என்றே சொல்லக்கூடியதாயிருந்ததென்றும் பரீட்சாதிகாரி கூறியதாக அரசாங்க அறிக்கையும் வெளியாயிற்று. ஆராய்ச்சிப்படிப்பில் சேருவதற்கான குறைந்தபட்ச யோக்கியதாம்சம் அவர்களுக்கு இருந்ததில்லையாம்.

இரண்டாவது கோஷ்டியின் ஆராய்ச்சிப் படிப்பிலும்இதுமாதிரியே.. பலனில்லாமல் பணம் விரயமானதால் சென்னை கல்லூரியில் இந்த ஆராய்ச்சி வகுப்பு மூடப்பட்டுவிட்டதாம்? ஆசிரியர்களுக்குச் சம்பளமாகவும் இரண்டு கோஷ்டியினருக்கு உபகாரச் சம்பளமாகவும் ரூபா 25 ஆயிரம் மட்டில் செலவாகியதெனக் கணக்குக் காண்பிக்கடப்பட்டது.

நம்மூரிலெல்லாம் நாகசுரத்தை நாயனம் நயினம் என்று சொல்கிருர்களே. அது எதுபற்றியோ? ஒருவேளை அதன் உருவமைப்பு நாகபாம்புபோல் நீண்டிருப்பதால் நாகபாம்பு இனத்தைச் சேர்ந்த வாத்தியமாக அதனைக் கணித்து நாகசின்னம் என்று பெயரிடப்பட்டு நாளடைவில் நாகசினம் ஆகி 'நாயினம்' ஆக இன்று பேச்சுவழக்கில்வந்துவிட்டதோ? நாகசினம் அதாவது நாகபாம்பின் சின்னம் என்றுகூட அவர்கள் எண்ணியிருக்கலாம். அல்லது பழையநாள் நாகர்களுக்கும் இந்த வாத்தியத்திற்கும் ஏதும் தொடர்பு தொந்தம் இருந்திருக்குமோ? இரண்டுமில்லையென்ருல், தொடக்கத்தில் நாதஸ்வரமாக இருந்தது தான் பின்பு நாதசுரமாகி, நாகசுரமாகி, நாகசின்னமாகி முடிவில் இன்று நம்மவர்நாவில் நாகேனம் நாயேனம் நாயீனம் என்று சுலபமாகப் புரளுகிறதோ?

ஆனல், நாகேனம்வாசிப்பது அத்தனை சுலபமான காரியம் அல்லவே அண்ணே! நாகவராளி என்று ஓர் இராகமிருக்கிறது. நாகசின்னம் என்று ஓர் இராகமிருக்கிறது. நாகசின்னம் என்று ஓர் இசைக்கருவி பற்றி பழைய சங்கநூல் ஒன்றிலும் கூறப்பட்டிருக்கிறதாம். சிவசுப்பிரமணியம் என்ற

## மணிப்புறவம்

பெயர்சிவா, சிவம், சுப்புடு, சுப்ரி, சுப்பு, மணி, மணியம் என்றெல்லாம் மாறி உருக்குலைந்து நம்மவர் நாவில் புரளும்போது நாகசுரமும்நாகசின்னமும் நாகேனமோ நாயினமோ ஆகியிருக்கலாம்.

நாதஸ்வரமா. நாகசுரமா? நாகசின்னமா அது எதுவாயிருந்தாலென்ன, சுபசுரமாகமட்டும் அது நம்காதில் படாதிருந்தால் போதும். அப்புறம் வயலிலே நெல் விளைச்சல் அதிகரிக்காமல் போய்விடக்கூடுமல்லவா? திருவிழாப்பந்தலிலே கட்டும் வாழைக்குலை கூட பொழுதுவிடியப் பொன்நிறமேறி நம் கண்குளிர மனங்குளிரக் கனியாமல் போய்விடும்.

செடிகொடியும் பயிர் பச்சையும் நல்ல சங்கீதத்தைக் காதுகுளிரக் கேட்டபோது வழக்கத்துக்கு அதிகமானவிளைச்சலை நம் கண்குளிரவாரிவழங்கும் கனிந்த இதயம்படைந்திருக்கின்றனவாம். செடிகொடியை வசப்படுத்தும் அந்தச் சிறப்பு நாதஸ்வரகானத்துக்குஇருந்ததை அண்ணமலையில் ஆராய்ச்சி திருஷ்டமாக கண்டறிந்தார்களாம். அப்பொழுதெல்லாம் நாதஸ்வரத்தில் சாருகேசி இராகம் இசைக்கப்பட்டதாம். இது செய்தி தமிழ்நாடு சட்டசபையில் தெரிவிக்கப்பட்டபோது ஒருவர், தண்டவாளத்தில் ரயில்ஓடும் ஓசையைக்கேட்டும் அக்கம் பக்கமாகவுள்ள வயலில் நெற்பயிர் நல்லவிளைச்சல்கொடுத்திருக்கும் செய்தி இந்நாள் வரை தெரியாதா என்று அமைச்சரிடம் வினவினுர்.

''கானத்தின் மகிமையை எடுத்துக் கூறுவதல்ல என் நோக்கம். நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் முடிவைத் தெரிவித்தேன். அவ்வளவுதான்'' என்றுகூறி அதுவிஷயமாகப்பேச்சு மேலே வளராதபடி முற்றுப்புள்ளிவைத்தார் அமைச்சர்.

ஓசைநயம் ஜீவசத்து. செடிகொடிகள் உலக ஜீவராசிகள் எழுப்பிய ஓசையும் ஜலஜலப்பும் கீதம் நாதமுமே இன்னிசை இராகங்களாக உருப்பெற்றன. உற்றுக்கவனித்தோமானல் அலை ஓசையிலேகூட ஓர் ஓசை நயம் எழுவதை உணரலாம். சப்பாத்துக் கால்களில் நடக்கும்போது எழும் 'டக்டக்' ஓசைமுதலாகக்குதிரையின் குளம்பொலி, அருவியின் சலசலப்பு, மழைத்தாரை, நீர்வீழ்ச்சி, இடிமுழக்கம், [illegible] சிரிப்பொலி, துயர முனகல், சலங்கைஒலி, மணிநாதம், முரசம். சங்கம், ரீங்காரம், நாணொலி, ஒலம், அவலஒப்பாரி ஈருக அனைத்துமே இராகமும் தாளமும்தான். ஓசைதான் — இந்த ஓசை நயம்தான் இசைஆயிற்று.


தண்டவாளத்தில் ரயில் ஓடும் ஓசையை அவதானித்து வந்த ஒரு தவில்காரர் அப்பொழுது அவர் கிரகித்த ஓர் ஓசை நயத்தை தமதுதவிலில்தாளத்துடனே வாசித்தாராம்.

நம் தேசத்துக்கப்பால் வசிக்கும் சரசப்பறவை ஒரு மரக்கிளையிலே உட்கார்ந்து பாட ஆரம்பிக்கும். அதன் தொனி படிப்படியாகமேலே உயரும் போது அப்பறவையும் ஒவ்வொரு கிளையாக ஆரோகணித்துமேலேதாவிப் போய்க்கொண்டிருக்குமாம்.

### ஒரு கிராமியவழு

'பறவைகள் கூட்டை அடைந்தன. விளக்கேற்றும் சமயம் நானும் வீட்டை அடைந்தேன்' — என்று இன்றெல்லாம் நம்மில் பலர் எழுதுகிருேம். பறவைகள் கூடு திரும்பின, கூடு சேர்ந்தன, கூடுநோக்கிப் பறந்தன என்று எழுதுவதுதான் சுத்தமான வசன அமைப்பு. பறவைகள் கூட்டுக்குள்ளே முட்டைஇடும், முட்டையை இடுவதில்லை. கூட்டைக் கட்டும், கூட்டைவிட்டு வெளியேறும், மாலையில் அவை கூடு நோக்கிப்பறக்கும். கூடு திரும்பி குஞ்சுகளுக்கு இரை கொடுக்கும். கூட்டை அடைவது வைக்கோலையும் புல்லையும் கொண்டுதான். அதுபோலத்தான் நாமும் வீட்டைக் கட்டலாம், கட்டிய வீட்டைக் காவல் செய்யலாம்; மெழுகலாம், கழுவலாம். வீட்டைவிட்டு வெளியேபோய் நண்பகலோ மாலையோ வீடுதிரும்பலாம். கட்டிய வீட்டை இடித்துவிட்டுப் போனல் பின்பு வீட்டை அடைவதற்கு பால்ய துரியோதனுதியரைப் போல வைக்கோலும் புல்லும் தான் தேடவேண்டும். வீட்டை போய்ச்சேரவோ வேறுயார் வீட்டையும் போகவோ கூடாது. அது நன்ருயிருக்காது

மங்கையர் அங்கங்களுக்கு அதித அழகைக் கொடுப்பது
நவ நாகரிக அமைப்பு வாய்ந்தது.
உத்தரவாதமுள்ளது
தெய்வா நகை மாளிகையின்
தங்க வைர நகைகள்...
இன்றே விஜயஞ்செய்யுங்கள்



தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

# நாவலர் பெருமானின் துறவு

நாவலர் பெருமானின் தியாகம், துறவு, தொண்டுகள் அளப்பரியன. அவை எழுத்திலும், பேச்சிலும் அடங்கா.

பெருமான் முதற்செய்த தியாகம் விவாகம் செய்ய மறுத்ததேயாம்.

## ஐந்தாங் குரவர் ஆறுமுகநாவலர்

கல்வி அறிவு ஒழுக்கத்தில் தமக்கொப்பாரும் மிக்காரும் கிடையாதவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் மூன்றும் தெரிந்தவர். அவர் காலத்தில் மூன்றுமொழிகளும் தெரிந்தவர்கள், அவரைத்தவிர கிடையாதென்று தைரியமாகக் கூறலாம். தமிழ் இலக்கண இலக்கியமும் சைவசித்தாந்த அறிவும் அவரளவு வேறெவர்க்கும் கிடையாது. கலாநிதி பீற்றர் பார்சிவல் துரைமகனுக்கு தமிழ்பண்டிதராயிருந்தும், அவர் ஸ்தாபித்து நடத்திய கல்லூரியில் ஆசிரியராயிருந்தும் தகுந்தசம்பளம்பெற்றிருந்தார்- தமிழை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதிலும் ஆங்கிலத்தைத் தமிழில் மொழி பெயர்ப்பதிலும் அவருக்கு இணை அவரேதான். விவிலிய (பைபிள்) நூலின் மொழி பெயர்ப்பின் மூலம் புகழடைந்தவர்.

பெண்தான் அவரைமணந்து கொள்ள மறுக்கப்போகிருள்? விளைநிலம், தோட்டம், வீடு, பணம் ஆபரணம் முதலியனவுடன் அழகு வாய்ந்த உயர்குடிக்கன்னி ஒருத்தியைத் திருமணம் செய்ய, எல்லாவிதமான தகுதியுமிருந்தும் இடம், பொருள், ஏவல், முதலிய வசதிகளிருந்தும், பெருமான் இல்லறத்திலிறங்க ஏன் மறுத்தார்? இந்தக்கேள்விக்கான பதில் நான்கே எழுத்துக்களில் அடங்கிவிடும். அதுதான் தியாகம்.

பெருமானின் மற்ருெரு தியாகத்தையும் இங்கு நோக்குவோம். இந்த இரு தியாகங்களுமே பெருமானின் துறவு எத்தகையது என்பதை விளக்குவனவாம்.

பெருமானுக்கு கலாநிதி பீற்றர் பேர்சிவல் துரைமகனுர் ''நீர் எனக்குப்பண்டிதராயிருந்தும் எங்கள் கல்லூரியில் ஆசிரியராயிருந்தும் நாங்கள் செய்கிறபணிகளுக்கு இடையூருகவிருப்பது நியாயந்தானு'' வென்று கேட்டது பெருமானின் மனத்தை மிக்கஉறுத்தியது. அவர் பாதிரியாருக்குத் தகுந்தபதிலளித்தார். அவர் அளித்த பதில் இதுதான்:

''நான் எனது கடமைகளில் கடுகளவுதவறினேனு? அப்படியாயின் உடனேவிலகிக் கொள்ளுகிறேன். ஆனல் மெய்ச்சமயமாகியசித்தாந்த சைவத்தில் தோன்றி வறுமையினுலும் அறியாமையினுலும் சற்சமயத்தை

அறநெறிக் காவலர்

## முதலியார் செ. முத்துத்தம்பி

பெருமானின் குடும்பத்திற்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் நீண்டகாலமாக ஆதிக்கமிருந்தது பெருமான்விரும்பினுல் கச்சேரிஉத்தியோகம் எந்த வேளையிலும் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்தது.

பெருமான் கண்டாரெல்லாம் விரும்பக்கூடிய தோற்றமும் அழகும் வாய்க்கப் பெற்றவர். முருகனை உபாசனமூர்த்தியாகக் கொண்டவர். திருமுருகாற்றுப்படையை நித்தியம் பாராயணம் பண்ணுகிறவர். முருகனை வணங்கினுல் முருகனுடைய தோற்றம்தானே வரும்.

பெருமான் மானஉணர்ச்சியும் வீரமும் மிக்கவர். குலத்திலும் குணத்திலும் சிறந்தவர். இப்படி எல்லாச் செல்வமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பெருமானுக்கு பெண் கொடுக்க யார் தான் விரும்பமாட்டார்? எந்தப்

விட்டு, கிறித்துசமயத்துக்கு மாறுவதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க எனக்கு முடியவேமுடியாது. அதுவுமல்லாமல் எனது சமயத்தைக்கிறித்தவர் தூஷிக்க நான் பேசாமலிருக்கமுடியாது. பேசுவதைத் தடுக்கவும் முடியாது'' இப்படிக் கூறித் தலைப்பாகையைக் கையிலெடுத்துக் கொண்டு பெருமான் புறப்படும் சமயம் பாதிரியார் அவர் கரங்களைப்பற்றி, 'விஷயத்தை அறிவதற்காக கேட்டேனேயல்லாமல்வேருென்றுமல்ல. நீங்கள் என்னைவிட்டுப்போகலாகாது' என்று இரங்கிக் கேட்டாரென்று முன்னே கூறினுர்.

பெருமான் தமது உத்தியோகத்தை உதறித்தள்ளத் துணிந்தமைக்கு இரண்டு முக்கிய காரணங்களிருந்தன. பாதிரிமார்களிடம்

14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘ஈழநாடு’ பத்தாவதாண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் பாராட்டுப் பெறும் சிறுகதைகளில் இதுவுமொன்று.

# பிரவாகம்

“யாழ்வாணன்”

வானில் உருளும் நிலவுக்குப் போட்டியாக ஆஸ்பத்திரி வளவினுள் மின்விளக்குகளும் இரவைப் பகலாக்க முயல்கின்றன.

‘வார்ட்’டுகளில் நோயாளர்களின் சம்பாஷணைகள் இன்னும் ஓயவில்லை மணி ஒன்பதைத் தாண்டிவிட்டதை ஞாபகப்படுத்தி ‘லைற்’றை அணைத்து அமைதியை நிலைநாட்ட ஓடலிமார் பிரயத்தனம் செய்கின்றனர்; ஆனால் அமைதி இழைவதாகக் காணேம்.

மின்விளக்குகள் அணைக்கப்பட்ட பின்பும் அங்கு சலசலப்பு ஓயவில்லை கட்டில்களில் படுத்திருக்கும் வாலிப நோயாளர்களில் சிலர் அரட்டையடித்துக்கொண்டிருக்கின்றனர்.

அவன் கட்டிலில் படுத்துக் கண்ணயர முயற்சிக்கிருன் முடியவில்லை; ஆஸ்பத்திரிக்கு வந்து மூன்றுநாட்கள் கழிந்துவிட்டன. அவனதுநோய் ஓரளவு தணிந்துவிட்டபோதிலும், பூரணசுகம் ஏற்படவில்லை

அரட்டை அடித்துக்கொண்டிருந்தவர்களும் அடங்கிக் கட்டிலில் முடங்கிவிட்டார்கள்

நிசப்தமான சூழ்நிலை ... ...

மனம் மரந்தாவும் மந்தியாகின்றது.

வாழ்நாளில் இப்போதுதான் அவன் நோயாளியாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். ஆஸ்பத்திரி அனுபவம் புதிது. அங்கு தங்கியிருப்பது சிறைச்சாலையில் இருப்பதுபோன்றதுதான் என்றாலும் அவனுக்குப் பலவித அனுபவங்களை — படிப்பினைகளை ஏற்படுத்தியதென்னவோ உண்மைதான்.

முதல்நாள் மாலை அவனுக்குப் பொழுது போவது பெரிய பிரச்னையாக இருந்தது. ஆனால் அன்று பின்னேரம் அந்த ‘வார்ட்’டைச் சுற்றிப் பார்வையிட வந்த டாக்டர் அவனுக்குப் பரிச்சியமுடையவர். அவர் அவனைப்பற்றி அங்குள்ள ஊழியர்களுக்குக் கூறியிருக்க வேண்டும். அதன்பின் அவர்கள் அவனுடன் அன்னியோன்யமாகப் பழகினர். அதனையடுத்து சகநோயாளர்களும் மதித்தனர். அவனுக்குத் தேவையான பத்திரிகைகள், புத்தகங்கள் ஆகியனவற்றை வாங்கிக்கொடுப்பதற்குத் தங்களுடன் தங்கிநிற்கும் உறவினர்களை அனுப்பி உதவினர்கள்.

அங்குள்ள நோயாளர்களுக்கிடையில் எந்தவிதமான ஏற்றத்தாழ்வுகளையும் அவன் காணவில்லை. ஒரே குடும்பத்தினர் போன்று அன்னியோன்னியமாகப் பழகுவதைக் காண அவனது மனம் களிப்படைந்தது.

ஆஸ்பத்திரிக்கு வெளியேயும் இந்நிலை நிலவினுல் ...

அவனது படுக்கைக்கு வலப்புறமாக மூன்றுவது படுக்கையிலுள்ள தொய்வு நோயாளி ‘லொக்’ ‘லொக்’ என இருமுகின்றுன் இருமலை அவனுல்தாக்குப்பிடிக்க முடியவில்லை. படுக்கையிலிருந்து எழுந்து இருந்தபடி இருமுகின்றுன் மூச்சுத் திணறலுடன் வரும் இருமலினுல் அவஸ்தையுற்று வாந்தியெடுக்கின்றுன்.

அந்த நோயாளியின் அவஸ்தையைக் கண்டு இரக்கப்படவேண்டிய சகநோயாளிகளில் சிலர், தங்கள்நித்திரைக்குக் குந்தகம் விளைந்துவிட்டதே என்ற மன உளைச்சலினுல் முணுமுணுக்கின்றனர். ஆமாம், எத்தனைதான் அன்னியோன்யமாகப் பழகியபோதிலும் தனது சுகத்திற்குச் சகமனிதன் இடைஞ்சல் தரும்போது அவனை மனிதன் சபிக்கத்தான் செய்கிருன்.

அங்கு கடமையாற்றிய தாதி, ஓடலி ஆகியோர் பொறுமையாக அந்நோயாளிக்கு உதவிசெய்து படுக்கவைக்கின்றனர். அவர்களது செய்கை அவனது மனதில் ஆஸ்பத்திரி ஊழியர்களைப்பற்றி அவன் இதுவரை கொண்ட கருத்தை மாற்றிவிடுகின்றது.

எந்தவிதமான அருவருப்போ, வெறுப்போ இன்றி மனிதாபிமானத்துடனும், கடமையுணர்ச்சியுடனும் ஆம், அவன் அப்படித்தான் நம்பினுன் — அங்குகடமையாற்றிய அவர்களின் சேவை அவனது உள்ளத்தைத் தொடுகின்றது.

இவர்களைப்போல எல்லா ஊழியர்களுமே கடமையுணர்ச்சியுடன் சேவைபுரிந்தால் ஆஸ்பத்திரி நோயாளிகளின் சொர்க்கமாகிவிடாதா?

‘கிறீச் ... .. கிறீச் ... ...’

தாதி வார்ட்டைச்சுற்றி ‘‘ரோட்ச்’’ லைற் பிடித்த வண்ணம் நோயாளர்களைப் பார்த்தபடி வருகின்றுள்.

எனது கட்டிலுக்கருகில் வந்ததும், ‘‘என்ன நீங்கள் இன்னமும் தூங்கவில்லையா?’’ என்கின்றுள், கனிவான குரலில்.

அவன் சிந்தனை அறுகிறது.

‘‘இல்லை, நித்திரை வரவில்லை’’.

அவள் அப்பால் செல்கிறுள், சிந்தனை அலைகள் மீண்டும் அவனைச் சுற்றிக்கோலமிடுகின்றன.

அவன் ஆஸ்பத்திரிக்கு வரும்போது, அங்கு தங்கியிருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் வரவில்லை, ஆனல் டாக்டரின் ஆலோசனையை அவனுல் மறுக்கமுடியவில்லை.

அவனுக்குப் பிள்ளைகள் என்றுல் உயிர். ஆம், அவன் பிள்ளைகுட்டிக்காரன். அவர்களைப் பிரிந்திருப்பது அவனுக்கு வேதனையாயிருந்தது. இரவில் அவனது அணைப்பிலேயே நித்திரைசெய்பவர்கள் அவர்கள்.

அவர்களுக்கு அதீத செல்லம் கொடுத்துக் கெடுப்பதாக அவன் மனைவி அடிக்கடி குறைப்பட்டுக்கொள்வாள். அவனது கருத்து எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை அவனுல் இப்போது உணர்ந்து கொள்ளமுடிந்தது. தன்னைப் பிரிந்து இவர்கள் எப்படி உறங்குவார்களோ என இரக்கப்பட்டான். அதைப் பற்றி யோசித்துப் பயன்......?

‘வார்ட்’டில் இருந்த நோயாளிச் சிறுவனெருவன் நோயின் அகோரம் தாங்கமாட்டாமல் ‘‘ஐயா, ஐயா!’’ எனத் தனது தந்தையை விளித்து அலறுகின்றுன்.

அச்சிறுவனது குரல் அவனது இதயத்தைப் பிழிகிறது. அன்று மாலை, தாயுடன் ஆஸ்பத்திரிக்கு வந்த மூத்த புதல்வன் கூறியவை திரைப்படம்போல அவன் முன்னே வருகிறது.

‘‘அப்பா! நீங்கள் இங்கு இருக்கவேண்டாம். இப்பவே எங்களுடன் வீட்டிற்கு வாருங்கள்.’’

‘‘நான் நாளை வருகிறேன். நீங்கள் வீட்டிற்குப் போங்கள்’’ எனக் கூறி அவர்களை அனுப்ப முயற்சிக்கின்றுன்.

‘அப்படியானுல் அம்மா வீட்டிற்குப் போகட்டும். நான் உங்களுடன் இருந்துவிடுகின்றேன். அம்மா வந்து கூட்டிப் போகட்டும். நீங்களில்லாமல் இரவில் நித்திரை வரமாட்டுதாம்

மகனது வார்த்தைகள் அவனது இதயத்தைப் பிழிகின்றது. விழிகளிலிருந்து நீர் கொப்பளிக்க, நாளை கட்டாயம் வருவதாகப் பொய் கூறி மகனைத் தாயுடன் ஒருவாறு அனுப்பிவிடுகின்றுன்.

‘‘ஐயா ஐயா!’’ எனக் கூப்பட்டுபோடும் நோயாளிச் சிறுவனின் குரல் அவனை மீண்டும் ஆஸ்பத்திரிச் சூழலுக்கு இழுத்துவருகின்றது.

அச்சிறுவனுக்கு ஏதாவது ஆறுதல் வார்த்தைகள் கூறித் தேற்றலாம் என்ற எண்ணத்துடன் எழுந்து அச்சிறுவனின் படுக்கையை நோக்கிச் செல்லுகின்றுன்.

அங்கே.........

சிறுவனின் தந்தை சோகமேயுருவாக, படுக்கையில் அமர்ந்து, மகனை ஒரு கையால் அணைத்தபடி இருக்கின்றுர். ஆனல் அச்சிறுவனே, தந்தை அருகில் இருப்பதைக்கூடப் புரிந்துகொள்ளமுடியாத மயக்க நிலையில், பிதற்றியபடி கிடக்கின்றுன்.

அக்காட்சியைப்பார்க்கச் சகிக்காத அவன், திரும்பி வந்து தாதியிடம் அச்சிறுவனின் நிலைபற்றிக் கூறுகின்றுன்.

அச்சிறுவன், அபாயக்கட்டத்தைத் தாண்டிவிட்டானென்றும், இன்னும் சில நாட்களில் பூரண சுகமடைந்துவிடுவானென்றும் தாதி அவனிடம் தெரிவித்தாள். அவளது கூற்று அவனது உள்ளத்தை ஓரளவு அமைதியை அடையச்செய்தது. திரும்பவும் தனது படுக்கையை நோக்கிச் செல்கின்றுன்.

புதிய சிறுவனெருவன் எரிகாயங்களுடன் அங்கு கொண்டுவரப்படுகின்றுன். வேதனையைத் தாங்கக்கூடிய வயதில்லை. காயங்களின் எரிவு தாங்கமுடியாமல் ‘‘அம்மா, ஐயா!’’ எனக் குழறுகின்றுன். அச்சிறுவனைத் தாதி படுக்கையில் படுக்கவைத்து மருந்து பூசுகின்றுள். அவன்-ஆம், அவனும் அவர்களுக்கு உதவுகின்றுன். ஓடலி டாக்டரைக் கூட்டிவரச் சொல்லுகின்றுன்.

நிம்மதியற்ற நிலையில் காலையில் டாக்டரைக் கெஞ்சியாகுதல் ஆஸ்பத்திரியைவிட்டு வெளியேறவேண்டும் என்ற தீர்மானத்துடன் படுக்கையில் சரிகின்றுன், அவன்.

ஆஸ்பத்திரியில் ஒளிகுறைந்த மின்விளக்குகள் விம்மல் இருட்டைக் கலைக்கமுடியாது கிடப்பதுபோன்று மனத்தில் இருள் கவிய அவன் கட்டிலில் கிடக்கின்றுன்,

‘எப்போது விடியும்மா?’

கேள்வி நெஞ்சத்து அறையெங்கும் வியாபிக்க இரவைப் பகலாககி எழுகின்றுன்.

## மனிதன் தோன்றிய காலமெது?

மனிதன் உலகில் எப்போது தோன்றினுன்?

இதுவரையில் விஞ்ஞானிகள் மதிப்பிட்டு வந்துள்ளதைக் காட்டிலும் இரட்டிப்பு மடங்குக் காலத்திற்கு முன்பே மனிதன் உலகில் பிறந்து நடமாடி வந்திருக்கலாம்.

குறைந்தது 60,000 ஆண்டுகளுக்கு முன்பே மனிதன் பூமியில் இருந்தான் என்று உலகின் தலைசிறந்த விஞ்ஞானிகள் 50 பேருக்குமேல் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஹோமோ ஸேட்பியன்ஸ் என்று குறிக்கப்பெறும் சிந்திக்கும் திறனுள்ள மனிதன் இவ்வளவு நெடுங்காலத்திற்கு முன்பே இருந்தான் என்பது அவர்களது கருத்து. கீன்யா நாட்டின் புகழ்பெற்ற மனிதஇன வரலாற்று அறிஞர் டாக்டர் லூயிஸ் லீக்கி போன்ற சிலர், மனிதன் குறைந்தது ஒரு லட்சம் ஆண்டுகளுக்குமுன்பே இருந்திருக்கிறுன் என்று கருதுகின்றனர். மனித இன வரலாறு பற்றி ஆராய்ந்த நான்குநாள் உரைக்கோவை ஒன்று பாரிசில் இப்போது நடந்து முடிந்துள்ளது.

ஈழத் தமிழர் இன்புற்றிருக்க சீதன முறையை சீரியமுறையில் முன்னோர் வகுத்தார்

ஆண்களும் பெண்களும் ஆனந்த தம்பதிகளாகவும் முதலைக்காத்து வட்டியில் வாழவும் சீதனப் பணத்துடன் சிக்கனமாக தயக்கமின்றி வாழ்க்கையை வகுக்கவும்

**தம்பி அன் கோ**

நிரந்தர சேமிப்பிற் சேருங்கள்

ரூ. 3000/- தொடக்கம் ரூ. 10000/- வரை

வருடம் 12 சதவீதம் (12% P.A.) வட்டி

கொடுக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:-

(1) வட்டி ஒவ்வொரு மாதமும், முதற் போயா தினத்தில் திருநெல்வேலி ஆபீசில் கொடுக்கப்படும்

(2) முதலை எப்பொழுதும் 3 மாத அறிவித்தலில் எடுக்கலாம்.

முழுவிபரங்கட்கு:-

**தம்பி அன் கோ.,**

திருநெல்வேலி

வண்ணர்பண்ணை :-: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலுவையும் குத்துவாளும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கரீஞ:- அவர்தான் உண்மையான மெசியா என்று அண்ண நம்புகிறுர். (துக்கத்துடன்). ஆனல்......

மார்:- என்ன கரீஞ?

கரீஞ:-இதைப்பற்றி யாரிடமும் அண்ண மனம் விட்டுப் பேசுவதில்லை. பிடித்துக்கொண்டுபோய்த் தண்டித்துவிடுவார்களோ என்று பயம்,

மார்:- அத்தனை எதிர்ப்பு அவருக்கிருக்கிறதா?

கரீஞ:-ஆமாம் மார்த்தா. ஒருநாள் இந்தப் பரிசேயர்கள் அவரைச் சிக்கவைத்துத் தண்டிப்பதற்காகச் சீசர் சக்கரவர்த்திக்கு நாம் வரி கொடுப்பது இறைவனின் சட்டத்துக்குட்பட்டதா? அல்லது மாறுனதா? என்று கேட்டிருக்கிறுர்கள்,

மார்:- ம்... பிறகு......?

கரீஞ:- ஏன் அப்படிக் கேட்டார்களாம் தெரியுமா?

மார்:- சொல்லேன்.

கரீஞ:- வரி கொடுக்க வேண்டும் என்று அவர் சொன்னல் பொதுமக்கள் கோபப்படுவார்கள். வரி கொடுக்க வேண்டாம் என்றல் அதிகாரிகள் எதிர்ப்பார்கள்.

மார்:- உண்மைதான். ம்... அவர் என்ன சொன்ஞராம்?

கரீஞ:- அரசியல் சம்பந்தமான அந்தக் கேள்வியில் அவர் நன்ருக மாட்டிக்கொள்வாரென்று எல்லோரும் எதிர்பார்த்ததுதான் பிழைத்துவிட்டது.

மார்:- புதிர் போடாமல் சொல்லு கரீஞ.

கரீஞ:- அவர்களைப் பார்த்து அவர்களின் தெனியர்களைக் காட்டச் சொன்ஞராம் தெனியர்களை அவர்கள் காட்டியபோது அதிலிருக்கும் உருவமும் எழுத்தும் யாருடையது என்ருராம்.

மார்:- அது சீசருடையது என்று அவர்கள் சொல்லியிருப்பார்கள்.

கரீஞ:- அதைக்கேட்டு அவர், 'சீசருக்கு உரியதை சீசருக்குக் கொடுங்கள்; இறைவனுக்குரியதை இறைவனுக்குக் கொடுங்கள்' என்று சொல்லிவிட்டார்.

மார்:- ஆ! அற்புதமான பதில்.

கரீஞ:- பாவம் அதிகாரிகள், வாயடைத்துப் போய்த் திரும்பிவிட்டார்களாம். அவர் பேய்களையே ஓட்டியவரல்லவா?......

மார்:- அது எப்போது நடந்தது?

கரீஞ:- கலிலேயாவில் ஒரு முரடனுக்குப் பேய் பிடித்திருந்ததே. அம்மணமாகத் திரிந்தான் என்று சொன்ஞர்களே! ஒருநாள் அவரைக்கண்டு பாதங்களில் விழுந்து வணங்கிப், பேய்தன்னை விட்டுவிடச் சொல்லியதாம். அவர் பேயைத் துரத்திவிட்டிருக்கிறுர்.

மார்:- அவர் ஊமைகளையும், குருடரையும், முடவரையும், செவிடரையும் குணப்படுத்தியிருக்கிறுர் என்று மதலேஞ சொன்ஞள். ஜெருசலத்தில்கூட இப்போ நிறையப்பேர் இருக்கிறுர்களாம்.

கரீஞ:- இதென்ன பிரமாதம். பெத்தனியில் லாசரஸ் என்பவனை இறந்த நான்கு நாட்களுக்குப்பிறகு அவர் வந்து உயிர்த்தெழச் செய்திருக்கிறுர்.

மார்:- பொய் சொல்லாதே கரீஞ!

கரீஞ:- சத்தியமாக உண்மை மார்த்தா!

மார்:- நான் நம்பமாட்டேன்.

கரீஞ:- நான்கூடத்தான் ஆரம்பத்தில் நம்பவில்லை. ஆனல் என் அண்ணவே இதைக் கேள்விப்பட்டு பெத்தனிக்குப்போய் லாசரஸையும், அவனைப் புதைத்த கல்லறையையும் பார்த்துவிட்டு வந்தார்.

மார்- உண்மையாகவா?

(இந்நேரம் கோவில் மணியோசை கேட்கிறது.)

கரீஞ: கேள், உண்மை என்பதைப்போலத்திரிகால மணியடிக்கிறது. —நேரம் போனதே தெரியவில்லை. ... அப்போ வரட்டுமா...பிறகு வருகிறேன். (போகிறுள்)

## காட்சி: இரண்டு

நேரம்: பிற்பகல்.

**பாத்திரங்கள்:** யூதாஸ், கீரஸ், வேறு இருவர்.

ஒரு முக்காலியில் கூஜா வைக்கப்பட்டிருக்கிறது. சுவரில் போர்வையொன்று தொங்குகிறது. சுவர் மூலையில் ஒரு நீண்ட கோலிருக்கிறது. அதற்கெதிரே இருப்பது தானியப்பறை. அதனருகிலிருக்கும் கட்டிலில் யூதாஸ் அமர்ந்திருக்கிறுன். அவனது தலைமயிர் பிடரிவரை தொங்குகிறது. அடர்ந்த தாடி, இருளடைந்ததைப் போன்ற கண்கள். நீண்ட அங்கியை அணிந்திருக்கிறுன். அதன் கை 'தொளதொள'த்துத் தொங்குகிறது. பின்னப்பட்ட கம்பளிக்கயிறு இடுப்பைச்சுற்றி முடிச்சிடப்பட்டு அதன் குஞ்சம் வலப்புறமாகத் தொங்குகிறது.

அப்போது முழங்கால் வரையுள்ள அங்கியுடனும் சிறிதே அடர்த்தி குறைந்த தாடி மீசையுடனும் கூடிய கீரஸ் வருகிறுன்.

கீரஸ்: ஏ! யூதாஸ். அப்போதே வந்துவிட்டாயா?

யூதாஸ்: (தலையை மட்டும் ஆட்டுகிறுன்.)

கீரஸ்: உன் விஷயம் வெற்றி...பிறகென்ன?

யூதாஸ்: ம்...!

கீரஸ்: என்ன சோர்ந்துவிட்டாய். தப்பிவிட்டனரா?

யூதாஸ்: சே! யூதாஸ் மனம்வைத்சால் தோல்வியா?

கீரஸ்: என்ன நடந்தது என்றுதான் சொல்லேன்.

யூதாஸ்: புதிதாக என்ன நடக்கவேண்டும், நடந்தது நான் நினைத்ததைப் போலத்தான்.

கீரஸ்: அதைத்தானே கேட்கிறேன்.

யூதாஸ்: ஹஹ்...ஹஹ்...ஹா! காவல்காரர் என் பின்னலேயே வந்தார்கள். நான் நேரே தோட்டத்துக்குத்தான் போனேன்.

கீரஸ்: ஜெத்சமணித் தோட்டத்துக்கா?

யூதாஸ்: ஆமாம். அவர் தினமும் தியானத்துக்கு வரும் அந்தத் தோட்டத்துக்குத்தான். எதிர்பார்த்தபடியே அவர் அங்கிருந்தார்.

கீரஸ்: அப்போஸ்தலர்கள்...?

யூதாஸ்: பதினெருபேரும் இருந்தார்கள். அவர் அவர்களுடன் என்னவோ பேசிக்கொண்டிருந்தார். என்னேடு வந்த காவல்காரர்கள் அந்த இருட்டில், பன்னிரண்டு பேரில் அவர் யார் எனத்திகைத்தார்கள். என்னை மேலும், கீழும் பார்த்தார்கள். நான் உடனே முன்னல் சென்று 'குருவே வாழ்க' என்றேன். அவரைக் கட்டித்தழுவினேன். அவர் கன்னத்தில் ஒரு முத்தமிட்டேன். (குரல் கம்மி மூச்சுத் தடிப்பாக வருகிறது. ஒரேயொருமுத்தம்.

கீரஸ்: என்ன யூதாஸ்?

யூதாஸ்: (தலையைச் சாய்வாக மேலேயுயர்த்தி) ம்! உண்மையாகவே அவர் ஒரு மகான்தான்.

கீரஸ்: என்ன நடந்ததப்பா...?

யூதாஸ்: கீரஸ்! அப்போது அவர் மிகமெதுவாக, மற்றவர்களுக்குக் கேட்காமல் 'நண்பனே' என்று என்னைக் கனிவோடு பார்த்தார். அதை இப்போது நினைத்தாலும்...ஓ! அவர் எவ்வளவு கருணையுள்ளவர்...! 'என்ன நோக்கத்துக்காக வந்திருக்கிறுய்' என்ருர். -என் உடம்பெல்லாம் நடுங்கியது. 'முத்தம் கொடுத்து மனுமகனைக் காட்டிக்கொடுக்கவா வந்தாய்?' என்ருர். -நான் குனிந்துகொண்டேன். காவற்காரர்கள் ஓடிவந்தார்கள்... அதை நினைத்தால்.. (மௌனம்)

கீரஸ்: கோழையாக இருக்கிறுயே யூதாஸ்.

யூதாஸ்: (சிரித்து) சேச்சே! அதற்கில்லை; அவரை நினைத்தால் பாவமாக இருக்கிறது...அதுதான்.

கீரஸ்: அதுதானே பார்த்தேன். செய்வினை திருந்தச்செய் என்பார்கள்.

யூதாஸ்: ஹஹ்......ஹஹ்...ஹா! அவர்தான் எத்தனையோ அற்புதங்களைச் செய்தவராச்சே, உடனே தப்பியோடியிருக்கலாமல்லவா?

இந்நேரம் இன்னெருவன் வருகிறுன்)

வந்தவர்: என்ன ஒரே எக்காளமாயிருக்கிறது. (யூதாஸைப் பார்த்து) நீகுதூகலிக்கத்தான் வேண்டும்.

கீரஸ்: ஏன்.

வந்தவன்: யூதாஸ் இங்கிருப்பதையறிந்துதான் வந்தேன். இவ்வளவு காலம் பிடிபடாமலிருந்த அந்த நாசரத்துக் காரரைப்பிடித்துக்கொடுத்த யூதாஸ் சந்தோசப்படத்தானே வேண்டும்.

கீரஸ்: இன்றிரவு எல்லாக்கும் விருந்துவைக்கப் போகிறுன், யூதாஸ். (சிரிப்பு)—பிறகென்ன நடந்தது...அவரைக் கொண்டுபோய்விட்டனர்களா?

வந்தவன்: நாசரத்துப் போதகரைப்பற்றியா கேட்கிறுய்......கீரஸ்! அவரைப்பிடித்த நேரம் நானும் ஜெத்சமணிக்குப் போய்ப்பார்த்தேன்.

கீரஸ்: உண்மையாகவா......என்ன நடந்தது.

வந்தவன்: காவல்காரரிடம் அவர் பெரிய வீராப்போடு போஞர். 'யாரைத் தேடுகிறீர்கள்' எனக் கேட்டார். அவர்களும் லேசுப்பட்டவர்களா, ரோமானியரின் சாப்பாட்டைத் தின்று வளர்ந்தவர்களா என்ன......விறைப்பாகவே 'நாசரத்தைச் சேர்ந்த யேசுவை' என்ருர்கள் அவர் 'அது நான்தான்' என்ருர்.

யூதாஸ்: அப்படிச்சொன்னபோதுதானே அவர்களத்தனைபேரும் தரையில் விழுந்தார்கள்.

கீரஸ்: என்ன......உண்மையாகத்தாஞ

வந்தவன்: ஆமாமப்பா.

யூதாஸ்: அவரின் வாயிலிருந்து வந்த ஆவிபட்டு, வீசுபட்டதைப்போல விழுந்தார்கள் ......இப்படி மூன்றுமுறை நடந்தது.

கீரஸ்: ம்! பிறகென்ன நடந்தது?

வந்தவன்: 'என்னைத்தானே பிடிக்சவந்தீர்கள், அப்படியாஞல் சீடர்களை விட்டுவிடுங்கள்' என்று சொல்லிவிட்டுப் போஞர்.

கீரஸ்: குருவின் சிப்பந்தி மால்குஸ் காதை யாரோ வெட்டிவிட்டதாகப் பேசிக்கொள்கிறுர்களே.........அது எப்போ நடந்தது?

வந்தவன்: அதுவா......அவரின் கைகளைப்பிடித்துக் கயிற்ருல் கட்டிஞர்கள், அதைக்கண்டு ஆத்திரமடைந்த பீட்டர்தான் வாளை எடுத்து மால்குஸ்ஸின் வலது காதைத் துண்டித்துவிட்டார்.

கீரஸ்: எந்தப் பீட்டர் 'நீ பாறையாயிருக்கிறுய்', அந்தப் பாறையில் ஏதோ திருச்சபையைக் கட்டப்போவதாகச் சொன்ஞரென ஒரு தடவை சொன்ஞயே அந்தப் பீட்டரா யூதாஸ்?

யூதாஸ்: அவரேதான்.

கீரஸ்: அப்படியாஞல் நான் வரும்போது அவர் ஜானுடன் எங்கோ போவதைக் கண்டேனே.

யூதாஸ்: ஆமாம். மால்குஸ்ஸுக்கு காது வந்துவிட்டதால் பீட்டரைவிட்டுவிட்டார்கள்.

கீரஸ்: என்னது? – காதுவந்துவிட்டதா?

வந்தவன்:என்னப்பா, உனக்கு எதுவுமே தெரியாதா என்ன?

கீரஸ்: நான் பெத்தனிக்குப் போய்விட்டு இன்றுதானே வந்தேன்.

வந்தவன்: அந்த நேரத்தில் பலபேர் கூடிவிட்டார்களே....உன் தம்பிகூட வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ருனே. — ஓ மறந்தே விட்டேன்... உன் தம்பி வரச்சொன்ஞன்......நான் வரட்டுமா? அவன் காத்துக் கொண்டிருப்பான். (போகிறுன்)

(தொடரும்)

மு. கனகராசன்

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டியில் ஆறுதற் பரிசுபெற்ற நான்கு ஓரங்க நாடகங்களில் இதுவுமொன்று.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# தமிழ்நாடக உலகில் ஒரு 'பிரளயம்'

''ஒடுக்கப்பட்ட சமுதாயம் காலமெல்லாம் புலம்பிக் கொண்டே அடங்கியிராது! சமத்துவ உணர்வுகொண்டு சீறியெழுந்தால் பெரியதோர் பிரளயத்தை ஏற்படுத்தும்'' என்ற கருத்தினை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்பட்ட 'பிரளயம்' என்ற நாடகம் உணர்த்தியது.

வழிவழிவந்த மரபுக்கு அடிமைப்பட்டு, தாங்கள் பிறப்பிலேயே எளியவர்கள் என்ற நினைப்போடு வாழும் சீவல் தொழிலாளியான செல்லன்... 'காலம் மாறும், காலம் மாறும்' என்றுபார்த்துக்கொண்டிருந்தால் அது மாறுது, நாங்கள் தான் மாற்றவேண்டும் என்ற

''இந்தநாட்டுக்குத்தான் விதானையார் ராசா; அப்பு, எங்கடை வீட்டுக்கு நாங்கள்தான் ராசா...''

''ஆந்தையளுக்காவது இருட்டிலை கண்தெரியும்; உங்களுக்கு வெளிச்சத்திலும் இதயம் துடிப்பதில்லையா...''

என்பன போன்ற வசனங்கள் மனதைவிட்டகலப் பல நாள் செல்லும்.

நடிப்பில் மூவரைத்தான் பார்க்கலாம். வேலைக்காரனாக நடித்த சின்னத்துரையின் நடை, குரல், பாணி மூன்றும் ரசிகர்களை ஓயவிடாது சிரிக்கவைத்தன. தக்கவகையில் இவர் பயன்படுத்தப்பட்டால் நாடக உலகுக்கு நல்லதோர் நகைச்சுவை நடிகர் நிச்சயம் கிடைப்பார். செல்லனாக நடித்த 'ஹிட்லர்' அந்தப் பாத்திரமாகவே மாறிவிட்டார். விதானையாருக்குமுன்னால் அடங்கி ஒடுங்கி நடந்தபோதும்... பின்னர் தன்மகள் நிர்க்கதியாய் நிற்பதைக் கண்டு ஆவேசம்கொண்டு எழுந்தபோதும் ... அருமையான நடிப்பு! பொன்னம்பலமாக வந்தவர் க. பரராஜசிங்கம். தோற்றப்பொலிவும், விதானை மிடுக்கும் அபாரம். ஆரம்பத்தில் நகைச்சுவையாகவும், போகப்போக வில்லனாகவும் தன்மை மாறியபோது அனாயாசமாக நடித்தார்.

சுந்தரமாக நடித்த ஆனந்தராஜமாணிக்கம் நாட்டியத்தில் கைதேர்ந்தவராகையால் நாட்டியபாணி கலந்திருந்தது. இந்தியப்பாஷை இடைக்கிடை கலந்திருந்தாலும் நடிப்பில் மிகையிருந்தது. ராசாத்தி-ரஞ்சிதம் நடிக்க முன்வந்ததைப் பாராட்டலாம். வேறொன்று

—திரு—

மில்லை. ராஜனாக நடித்தவர் செ. மகேஸ்வரன். நடிப்பிலும் பார்க்க 'போஸ்' கொடுத்தது கூட! நல்ல கட்டங்களில் ரசிகர்களைச்சிரிக்க வைத்தார்.

இந்த நாடகத்தை அருமையாக 'டைரக்ட்' செய்திருக்கிறார் 'நிர்மலா' படத்தை டைரக்ட் செய்த எஸ். அருமைநாயகம். இமைப்பொழுதில்காட்சிகள் மாறியமையும், தொடர்ச்சி குலையாமல் இருந்ததும் அவரின் திறமைக்குப் போதுமான சான்றுகள். ஆனால் அவரே கவனிக்கத் தவறிய இரு பெரும் குறைகள்... கள்ளுக்கொட்டில் லாம்பு இரவும் பகலும் எரிந்துகொண்டிருந்தது; முதல் காட்சியில் கீழே வைத்துச்சென்ற கள்ளுப் பிளா அடுத்த காட்சியிலும் அப்படியேஇருந்தது. ஒரு கள்ளுக்கொட்டில்...... தொடர்ந்தாற்போல வீட்டு முகப்பு...... பனைமட்டை வேலி... பின்னால் மரங்கள்... இடையில் கட்டப்பட்டிருந்த ஓர் ஆடு... அவ்வளவு அருமையான காட்சியமைப்பு.

சாதிப்பிரச்னை, வேலையில்லாப் பட்டதாரிகள் பிரச்னை என்பன மிகவும் நுணுக்கமான முறையில் தொட்டுக்காட்டப்பட்டிருந்தன. பல்கலைக்கழக மாணவர்களின் முத்தமிழ்விழாவில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது.

டைரக்டர் அருமைநாயகம்-கதைவசன கர்த்தா பரராஜசிங்கம்; இருவரதும்கூட்டு நாடகஉலகுக்கு ஒரு புது ஒளி

## நாடக விமர்சனம்

உணர்வோடு வாழும்- சுந்தரம்... உயர்குடியில் பிறந்துவிட்ட ஒன்றுக்காகவே எல்லாரையும் ஆட்டிப்படைக்கலாம் என்று நினைக்கும் விதானையார் பொன்னம்பலம்... தகப்பனுக்குப் பயந்து தன் காதலியையே கைவிடும் ராஜன்.. தன்னுயிரைப் போக்கியாவது சாதிப்பேயை ஒழிக்கலாம் என்றுஎண்ணிய ராசாத்தி... பொன்னம்பலத்தின் வேலைக்காரன்... மூன்று விடுமுறைகால பல்கலைக்கழக மாணவர்கள்...

இவர்களைச் சுற்றிப் பின்னப்பட்ட கதைதான் 'பிரளயம்'!

ஒரு மணிநேர நாடகம். ஒரே 'செட்'டில் மிகவும் யதார்த்தமாக அமைக்கப்பட்டிருந்தது.

நகைச்சுவை வசனமாகட்டும், 'சீரியஸ்' வசனமாகட்டும் எல்லாம் நெஞ்சைத் தொட்டன. இதன் கதை வசனகர்த்தா க. பரராஜசிங்கம் ஒரு 'பிரளய'த்தையே ஏற்படுத்திவிட்டார் என்று சொல்லத்தோன்றுகிறது.

''என்ரை கத்தி இனி மேல் பாளை சீவாது; உங்களின்ரை தலையைத்தான் சீவும்.''

# சலிப்பைத் தராத — துப்பறியும் நாடகம்

கலா ஸ்டேஜ் அளிக்கும் 'அவளைக் கொன்றவள் நீ' என்ற துப்பறியும் நாடகம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது. ஏற்கனவே பல ரசிகர்களின் மனதைக் கவர்ந்த இந் நாடகம் மீண்டும் மீண்டும் சலிப்படையாமல் பார்க்கக் கூடியதாகவிருந்தது.

லெஸ்லி சான்ட்ஸ் (Leslie Sends) என்ற ஆங்கில மர்ம நாவலாசிரியரின் சம்திங் டு ஹைட் (Something To Hide) என்ற மர்மக் கதையைத் தழுவியே இந் நாடகத்தின் கதையமைப்பும், வசனங்களும் பின்னப்பட்டுள்ளன.

பல பெண்களுடன் தொடர்பு கொண்டுள்ள ஒரு எழுத்தாளன் தன் மனைவியை ஏமாற்றிப் பணம் பறிப்பதற்காகத் தானே ஒரு கொலையைச் செய்துவிட்டு அதை அவள் மீது சுமத்த முற்படுகிறான். தற்செயலாக நடைபெற்ற கார் விபத்தொன்றை வைத்துக்கொண்டே கடைசிவரைக்கும் கொலைகாரர் கண்டுபிடிக்கப்படாத நிலையில் கதையை இழுத்துச் செல்கிறார் ஆசிரியர். ஆனால் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரைத் துப்பறியும்படி விடுத்துஅவர் கடைசிவரைக்கும் பலவகைத் தந்திரங்களைக் கையாண்டு எழுத்தாளனின் நடத்தைகளையும் இறுதியில் அவனையே சுட்டுக் கொலைசெய்த மனைவியையும் கண்டுபிடித்து விடுகிறார். பாத்திரங்களின் தன்மைக்கேற்ப நாடகத்தில் சுவை மிக்கதும் விறுவிறுப்பானதுமான வசனங்கள் இடம்பெற்றுள்ளன.

துப்புத் துலக்க வருகின்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஓரளவு நகைச்சுவையாகவும் பேசித் தாம் சாதிக்க வேண்டியவற்றை வெகு லாவகமாகவே சாதித்து விடுகிறார். நாம் ஈழத்தில் யதார்த்தமாகப் பார்க்கும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் இப்படியெல்லாம் பேசுவாரா என்ற சந்தேகம் எழுந்தாலும் ஆங்கிலக்கதைத் தழுவல் என்பதால் இதுவும் ஒரு புதுப்பாணி – அத்தோடு மிக நன்றாகவும் இருக்கிறது என்று அமைதி கொள்ளலாம்.

நாடகக் கதையையே வழி நடத்தும் முக்கிய பாத்திரமான இன்ஸ்பெக்டராக கே. ஏ. ஜவாஹர் தோன்றி மிகவும் சிறப்பாகச் செய்தார். இருந்தாலும் சில இடங்களில் சற்று அதிகமாகவே கதைத்து விடுகிறார். ஆனாலும் மொத்தத்தில் இவரது நடிப்பு மனத்தைவிட்டு அகலாது.

**க. பேரன்**

எழுத்தாளராக வந்த எம். ஹுசேன் பாரூக், அவரது மனைவியாக நடித்த ஏ. ஜெயந்தி இருவரும் கனகச்சிதமாகத் தமது பாத்திர இயல்பிற்கேற்பச் செய்தார்கள்! தலைவர் தர்மலிங்கமாக நடித்த சி. எஸ். பரராஜசிங்கம், கராஜ் காரர் கரோலிஸாக வந்த பத்மநாதன் இருவரும் சொற்ப நேரமே மேடையில் தோன்றினாலும் இரசிகர்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பிடித்து விட்டார்கள். அழகேசன், ஜெயா ஆகியோரும் பரவாயில்லை. எழுத்தாளரின் காதலி இலட்சுமியாகவும் மறுபெயரில் மாலினியாகவும் நடித்தவரின் நடிப்பு அவ்வளவு தூரம் எடுபடவில்லை. இவர் இன்னும் நடித்துப் பழகவேண்டும். சோகத்தை வரவழைக்கவேண்டிய முக்கிய கட்டங்களிலெல்லாம் இவர் தன்னை மறந்து சிரித்து விடுகிறார்.

ஆங்கிலக்கதைக்கு நல்ல முறையில் வசனம் அமைத்த எம். எம். சுபியான், இசையமைத்த மொஹமட்சாலி, ஒலி, ஒளியமைத்த வி. வாமதேவன் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள். எமது யாழ்ப்பாணத்து நாடகங்களில் அல்லது நாட்டுக்கூத்துக்களில் மேடை முன்பாக மூன்று பெரிய மைக்குகளைக் கட்டிக் குறுக்கே தொங்கவிடுவது போலல்லாமல் 'மைக்' வைத்திருப்பதே தெரியாதபடி மிக நவீன முறையில் முக்கியமான நான்கு மூலைகளிலும் நடுவில் உள்ள பூச்சாடிக்குள்ளும் சிறிய மைக்குகளை வைத்து மிகவும் அழகாக ஒலியமைப்புச் செய்திருந்தார்கள். கலா ஸ்டேஜ் அமைப்பாளரும், தயாரிப்பாளருமான கதிர்காமத்தம்பி (தம்பி) காட்சியமைப்பையும் செய்தார் என்றால் சொல்லவா வேண்டும்?

தயாரிப்பாளரான தம்பியையும், உதவியாளரான கே. கே மதிவதனனையும் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஈழத்தில் தரமான துப்பறியும் தமிழ் நாடகங்களை உருவாக்கலாம் என்பதற்கு டைரக்டர் சுபேர் ஹமீட்டின் 'அவளைக் கொன்றவள் நீ' நல்லதோர் சாட்சியாகும்.

## தீபாவளிக்கு 'எப்ப விடியும்?'

நெல்லை க. பேரன் கதை வசனம் எழுதியுள்ள முற்றிலும் யாழ்ப்பாணச் சூழலையே மையமாகக் கொண்ட 'எப்ப விடியும்?' என்ற சமூக நாடகம் வெகுவிரைவில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றப்படவிருக்கிறது.

ஈழத்தின் பிரபல தமிழ் முன்னணி நடிகர்கள் இந் நாடகத்தில் பங்கு கொள்கின்றனர். தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இந் நாடகம் அரங்கேற்றப்படலாம் என அறிவிக்கப்படுகிறது.

## ''கலியாணக் கந்தப்பர்''

இலங்கை கலைச்சங்கத்து முதற்பரிசு பெற்ற நவாலியூர் சோ. நடராசனின் 'கலியாணக் கந்தப்பர்' என்ற நாடகம் 16-11-69ல் ஹாவ்லொக்டவுன் லும்பினி அரங்கில் நடைபெறவிருக்கிறது.

தமிழ் நாடக இயக்க நிதிக்காக இலங்கைச் சங்கீத நாட்டியசங்க ஆதரவில் மன்றுடி அரங்கினர் இந்நாடகத்தைத் தயாரித்தளிக்கிறார்கள். இந் நாடகத்தில் சோ. நடராசன், து- கந்தசாமி, த- கனகரத்தினம், டி- தர்மரத்தினம், ப- வடிவேல், கே- இரத்தினவேல், செல்வி கன்பி- எம்- ஜெயா, லீலாரஞ்சனி, எஸ்- கிருஷ்ணனந்தன், ஆர்- இராஜா. மாஸ்டர் மனோகர் ஆகியோர் நடிக்கின்றனர்.

# வெளிநாடுகளில் எம். ஜி. ஆர். ஏன் படப்பிடிப்புகளை நடாத்துகிறார்?

வெளிநாடுகளில் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் படப்பிடிப்பு நடத்த இருக்கிறாரல்லவா? இணைந்த கைகள் என்ற அவரது படத்துக்காகவே வெளிநாடு செல்கிறார் எம் ஜி. ஆருக்குச் சொந்தமான எம் ஜி. ஆர்! புரடக்ஸன்ஸார் தயாரிக்கும் இந்தப் படத்துக்கான வெளிப்புறக் காட்சிகளை எடுப்பதற்காக ஈரான், பாக்தாத் ஆகிய இடங்களுக்குச்சென்று படப்பிடிப்புகளை நடத்தப்போவதாக எம். ஜி. ஆர். தெரிவிக்கிறார்.

அவர் அளித்த பேட்டிவிபரம் வருமாறு:—

கேள்வி: ''இணைந்த கைகள், படத்திற்கு எந்த நாட்டில் எல்லாம் படப்பிடிப்பு நடத்தப்போகிறீர்கள்?

எம். ஜி. ஆர்.: ஈரான், பாக்தாத் ஆகிய இடங்களுக்குச்சென்று படப் பிடிப்பு நடத்தப்போகிறேன்.

கேள்வி: ஏன் இந்த இடங்களுக்குச் செல்கிறீர்கள்?

எம். ஜி. ஆர்.: ''இணைந்த கைகள்'' சினிமா, 'முஸ்லிம் சம்பந்தப்பட்ட உலக அமைப்புக் கொண்டது. இதில்வரும் காட்சி அமைப்புகள் முஸ்லிம்களின் கலாச்சாரம், வாழ்க்கை அமைப்பு ஆகியவைகள் தத்ரூபமாக இருக்கவேண்டுமென்று விரும்புகின்றேன். அதனால் முஸ்லிம்கள்வாழும் நாடாகிய ஈரான், பாக்தாத்தில் படப்பிடிப்புநடத்தத் திட்டமிட்டிருக்கிறேன்.

ஸ்ருடியோவில் 10 லட்சம் ரூபாய் செலவு செய்து 'ஷெட்' போட்டா[illegible]



ற்கையாக உள்ள அமைப்பு இருக்காது!

அதனால் வருகிற மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் வெளிநாடு செல்லத் திட்டமிட்டு இருக்கிறேன். அங்கு படப்பிடிப்பு அதிக அளவு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழநாடு' 10வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பெற்ற இலக்கியப் போட்டியில் ரூபா 500-00 பரிசு பெற்ற காவியம்.




எத்தனைதான் துன்பங்கள் வந்தபோதும்
    என்காதற் சித்திரமே உன்னை மறந்து
இத்தரையில் யான்வாழப் போவ தில்லை
    எனவேநல் ஆரமுதே ஏற்ற காலம்
சித்திக்கும் வரையென்னைக் காத்தி ருப்பாய்
    சீக்கிரமாய் வந்திடுவேன் சிறைவி டுப்பேன்
சத்தியமென் வார்த்தையிவை என்றே ரோலை
    சங்கிலியன் போக்கியபின் அமைதிகொண்டான்.

### மாயாதுன்னை உதவி வேண்டல்

திங்களொன்று சென்றபின்னோர் காலை நேரம்
    தேர்வேந்தன் மன்றத்தே யிருக்கும் போது
வெங்களிறு பலவாழும் சீதாவாக்கை
    விறல்மண்ணை ஆட்சிபுரி கின்ற மன்னன்
மங்காத வீரத்தால் மாற்ற ரஞ்சும்
    மாயாதுன் னையென்னும் மான முள்ளோன்
சங்கிலிய னுக்கெழுதி விட்ட வோலை
    தனையந்தச் சபையினிலே படிக்கலுற்றார்.

நல்லைநகர் தனிலாட்சி புரியுமீழ
    நற்றாயின் புத்திரனே வீரம் மிக்கோய்
எல்லையிலா வறிவாலும் ஆற்ற லாலும்
    இணையற்று விளங்கும்யாழ்ப் பாண வேந்தே
தொல்லைதந்த பறங்கியரைத் தொலைத்துக் கட்டிச்
    சுதந்திரத்தைக் காக்கின்ற சூர தீர
அல்லலுற்ற நேரத்தில் வழியி லாதுன்
    ஆதரவை வேண்டியிதை வரைகின் றேனே.

கோட்டையிலே ஆட்சி செய்த என்றன் மூத்தோன்
    கொலையுண்ட காரணத்தால் அவர்க்குப் பின்னர்
நாட்டையாள் கின்றவொரு வாரி சாக
    நானிருக்கப் பறங்கியர்கள் அதையெண் ணாது
ஆட்டுகிற பொம்மையினை யொத்தோ னை
    அண்ணர்மகள் புத்திரனை அரச னாக்கிப்
போட்டார்கள்; ஆகையினால் அவர்க ளோடு
    போர்செய்யப் புறப்பட்டு நிற்கின் றேன்யான்.

சங்கிலியே என்றனது அருமை நண்பா
    சண்டாள ரைஎதிர்க்க வெண்ணி டததே
இங்குள்ள சேனைபலம் போதா தானால்
    இனியதமிட் படைவந்தால் வெற்றி கொள்வேன்
சிங்களவர் செந்தமிழர் என்ற போதும்
    தேசத்தால் நாமொன்று பண்பா லொன்று
எங்கிருந்தோ வந்தவரை ஓட்ட வெங்கள்
    இருபேரின் கூட்டுறவும் சிறந்த தன்றோ.

புத்தபிரா னின்புனித சீலமிங்கே
    புறக்கணிக்கப்படுகிறது; சைவ மார்க்கம்
இத்தரையில் மாய்கிறது இஸ்லாம் நண்பர்
    இங்குவர அச்சமுறு கின்றார்; மேலும்
பத்தினிமார் கற்பினையோ சூறையாடப்
    பார்க்கின்றார்; பகற்கொள்ளை அடிக்கின் றார்கள்
எத்திசையும் புகழ்கின்ற எனது நண்பா
    எனக்குதவி கட்டாயம் செய்ய வேண்டும்.

மாயாதுன் னைவேந்தன் எழுதி விட்ட
    மடலைகண்ட சங்கிலியன் சபையை நோக்கிச்
சாயாத புகழ்பூத்த தமிழர் வீரம்
    தனைப் போற்றும் இவனுக்கு உதவ நாங்கள்
போயாக வேண்டுமா வென்று கேட்கப்
    பூரித்த செந்தமிழர் ஆமாம் என்றார்
ஓயாத பைந்தமிழர் உறங்கு வாரோ
    உருவியவா ளுடன்பயணம் தொடங்கி னார்கள்.

### பறங்கியர் சதி

மன்றாரில் தோல்வியுற்ற பறங்கிக் கூட்ட
    மாதலைவர் ஒன்றாகக் கூடி ஆய்ந்து
என்றாகும் எங்கள்நிலை இனிமே லிங்கே
    எவ்வாறு நாம் வணிகம் செய்ய லாகும்
தன்னுவியைக் கொடுத்தும் நாட்டைக் காக்கச்
    சங்கிலியன் என்றொருவன் இருக்கின் றானே.
தன்னாட்சிக் கங்காலும் நாங்கள் சென்றால்
    தலையிட்டுத் தண்டிக்கப் பார்க்கின் றானே.

மாயாதுன் னைக்குதவி செய்தான்; பின்னர்
    மகனென்றும் பாராமல் அரசைக் கவ்வ
ஓயாமல் முற்பட்ட விதிய னுக்கும்
    உதவிசெய முன்வந்தான் ஈழ நாட்டில்
வாயாது போலிருக்க தெங்கள் சூழ்ச்சி
    வந்தவழியே அனுப்பி வைப்பான் போலும்
நாயாக எமையெண்ணும் இவனை வீழ்த்த
    நல்லதொரு திட்டம்யாம் தீட்ட வேண்டும்

மண்பிடிக்க மறுக்கின்றான் மக்க ளுக்கு
    மதம்பரப்பத் தடுக்கின்றான் கப்ப லோடு
தண்ணீருள் நின்றாலும் வரிகேட் கின்றான்
    தரைக்குள்யாம் சென்றாலும் வரிகேட் கின்றான்
கண்டிமன்ன னேடீழ நாட்டி லுள்ள
    காவலர்கள் யாவரையும் எமையெ திர்க்க
அண்டிவிடு கின்றானே என்றார்; ஆங்கே
    அதிகாரி பிரகன்சா உரைக்க லுற்றான்.

சங்கிலியோ மாவீரன் ஆகை யாலே
    சண்டையிட்டு வெல்வதென்ப தியலா தப்பா
இங்கிவனைச் சூழ்ச்சியினால் வீழ்த்த லன்றி
    எவ்வழியு மில்லையிது முற்று முண்மை
அங்கவனை மறைவாக எதிர்ப்போ ரான
    அப்பாஅ முதலிபர நிருப சிங்கன்
எங்களது நட்பாளன் காக்கை வன்னி
    என்போரை யாங்கள்பயன் படுத்தல் வேண்டும்.

நன்றான திட்டமிது பிரகன் சாநீ
    நாளையே ஊர்காவற் றுறைக்குச் சென்று
அன்பாளன் காக்கைவன் னியனைக் கண்டு
    அவனோடு மற்றவரைச் சேர்த்துக் கொண்டு
தன்மான முள்ளதமிழ் யாழ்ப்பாணத்தைத்
    தவிடுபொடி யாக்குதற்கு முயல வேண்டும்
ஒன்றாக நாமிணைந்தால் வெற்றி யுண்டு
    உடனேபோ என்றார்கள் அவனுஞ் சென்றான்.

பறங்கியர்கள் திட்டத்தைப் பிரகன் சாபோய்ப்
    பாதகனும் காக்கைவன் னியனுக் கோத
அரசனையான் வீழ்த்துவதற் குதவி செய்தால்
    அவனுக்குப் பின்என்னை யாழ்ப்பா ணத்தின்
அரியணையில் ஏற்றிவைக்க வேண்டும்; ஆனால்
    அப்பா முதலிக்கோ மற்ற வர்க்கோ
தெரியாம லித்திட்ட மிருக்க வேண்டும்
    செய்வீரா என்னஇவன் சம்ம தித்தான்.

என்னுடைய திட்டமிவை யாகும் நீங்கள்
    இந்நாடு வந்தபுது வணிகர்போல
நன்றாக வேடமிட்டு நல்லூர் சென்று
    நாட்டினிலே வியாபாரம் செய்வ தற்கு
மன்னவனின் உத்தரவைப் பெறுதல் வேண்டும்
    மன்னரை வைத்தவனும் மறுத்தா னானல்
அன்னவர்க்கும் எங்களுக்கும் தொடர்பே யில்லை
    அவர்வேறு நாம்வேறு என்ன வேண்டும்.

என்னிடத்தே விசுவாசம் வைத்தே யுள்ள
    இராசாவை நான்நோக்கி உண்மை யுண்மை
மன்னாரில் தோற்றவர்கள் மாற்றா ரென்றும்
    மாண்புள்ளோர் நீங்களென்றும் கூறிவைப்பேன்
என்கருத்தை யேஅப்பா முதலி போன்றோர்
    எடுத்துரைப்பர் மன்னவனும் சம்ம திப்பான்
நன்மைதரும் திட்டமிது வென்று காக்கை
    வன்னியனும் சொல்லஇவன் எவ்வா றென்றான்.

நாட்டினிலே வியாபாரஞ் செய்வ தற்கு
    நல்லதொரு சந்தர்ப்பம் கிடைக்கு மானால்
காட்டினிலே யாருமெமைக் காணா வாறு
    கள்ளமதாய் ஆயுதங்கள் யாவும் சேர்த்து
கூட்டமாய் யாமெல்லாம் ஒன்று கூடிக்
    குறிப்பிட்ட நாளொன்றில் எதிர்பா ராது
ஆட்டிவைக்கும் சங்கிலியைத் தாக்க லாமென்(று)
    அறைந்திடவப் பிரகன்சா அபூர்வ மென்றான்.

இவ்வாறு தீயவர்கள் நல்லூர் சென்று
    இணையிலாச் சங்கிலியைப் பணிந்து கேட்க
ஒவ்வாத வன்னியனும் உறுதி கூற
    ஒழுங்கானோர் என்றப்பா முதலி சொல்ல
எவ்வாறோ மன்னவனும் சம்ம திக்க
    இழிந்தவர்கள் ஆனந்தக் கூத்தே யாடி
செவ்வாழைத் தோட்டத்தே புகுந்த மேதி
    செருக்குற்ற வாறெங்கும் திரிய லுற்றார்.

இரவெல்லாங் கப்பலிலே தங்க வேண்டும்
    இங்குபக லன்றியெந்த நேர மேனும்
வரக்கூடா தென்றமன்னன் ஆணை யாலே
    வருத்தமுற்ற பறங்கியர்கள் ஒருநாட் சென்று
அரசேயாம் தங்குதற்கும்; விற்கு மெங்கள்
    அரியபொருள் தமைச்சேர்த்து வைப்ப தற்கும்
உரிதான கொட்டில்சில போடு தற்கு
    உரிமைதர வேண்டுமென இரந்து பெற்றார்.

நாட்கள்சில உருண்டோடிச் செல்ல வோர்நாள்
    நல்லைநகர்க் காவலனும் வீர ரோடு
வேட்டையாடப் புறப்பட்டுப் போகும் போது
    வேறொருவர் தொடர்பற்ற பண்ணைக் காட்டில்
காட்சிதந்த கட்டடத்தைக் கண்டே, அதைக்
    கட்டியவர் யாரென்றான்; அறிந்த போது
கோட்டைகட்டு மளவிற்குப் பறங்கி யர்க்குக்
    கொடுத்ததார் உரிமையெனக் குமுறி நின்றான்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தீண்டாமை... பரிசுத்தப்...

பாரமார்த்திகம் என்று சொன்னால், அதற்கு அடையாளமாக இந்த உலக வாழ்க்கையினின்று ஓடிப் போய்விட வேண்டுமென்பதுஅல்ல. இந்த உலகத்திலிருந்துகொண்டே எல்லோரிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். எல்லோருக்காகவும் தொண்டு செய்யவேண்டும். '' யஸ்மின் ஸர்வாணி பூதானி ஆத்மைவாபூத் விஜாநத'' அதாவது உன்னை நீ நேசிப்பதைப்போல் பிறரையும் நீ நேசிக்கவேண்டும். இதற்கு நிபந்தனையில்லை. இதற்குச் சம அந்தஸ்தும் சுதந்திரமும் இருக்க வேண்டும். இந்த நிலைமை ஏற்பட வேண்டுமானால் சுதந்திர புருஷர்கள் பலர் அடங்கிய ஒரு தனி சமுதாயம் அமையவேண்டும். இந்தச் சமுதாயத்தில் உலகத்தின் பல ஜாதியினரும் அடங்கியிருக்க வேண்டும். இவர்கள் ஜாதி, மதம், செல்வம் அதிகாரம், வகுப்பு, தேசம் முதலிய விஷயங்களில் ஏற்பட்டிருக்கிற தடைகளைக் கடந்தவர்களாயிருக்க வேண்டும்.

### எல்ல: மனிதர்களுக்கும் சமஉரிமையுண்டு

ஒரு பிரிவினரோ, அல்லது ஒரு ஜாதியினரோ மற்றொரு பிரிவினருடைய அல்லது ஜாதியினருடைய அழிவின் மீது தங்களை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று பார்ப்பார்களேயானால் —உதாரணமாக ஜெக்கர்களுடைய அழிவின்மீது நிலச்சுவான்தார்களும் தொழிலாளர்களுடைய அழிவின் மீது முதலாளிகளும் வாழப் பார்ப்பார்களானால், அவர்கள் அந்தப் பிரிவினர் அல்லது ஜாதியினர் ஜனநாயகமற்ற ஒரு முறையை அனுஷ்டிக்கின்றனர் என்றுதான் கொள்ளவேண்டும். அவர்கள் தங்களுடைய நியாயமற்ற செயலை, ஆயுத பலத்தின் துணைகொண்டுதான் காப்பாற்றிக் கொள்ளக்கூடும். சமுதாயத்தின் மீது ஆதிக்கஞ் செலுத்திக் கொண்டிருக்கிற பிரிவினர் எங்கே தங்களுடைய ஏகபோக உரிமைகள் இழக்கப்பட்டுப் போகுமோவென்று அச்சப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒடுக்கப்பட்ட பிரிவினர், தங்களுடைய நியாயமான கோபத்தையெல்லாம் அடக்கி வைத்துக்கொண்டு இருக்கின்றனர். இயற்கைக்கு விரோதமாயுள்ள இந்த நிலைமையை நியாயத்தைக் கொண்டுதான் மாற்றமுடியும். அப்படிப்பட்ட நியாயம் எது? எல்லா மனிதர்களுக்கும் சம உரிமையுண்டு என்பதை அங்கீகரிப்பதுதான் இத்தனை நூற்றாண்டுகளாகவும் மானிட சமுதாயமானது. மானிட சகோதரத்துவத்தை லட்சியமாகக் கொண்டு சென்றிருக்கின்றது. இப்பொழுது உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் முற்போக்கான பல இயக்கங்கள் தோன்றுகின்றன. நீதியின் லட்சியம் என்னவென்பதைப் பற்றி ஒரு புதிய மனப்பான்மை ஏற்பட்டுள்ளது. மானிட சமுதாயத்தின் பெரும்பா

லோர், தாங்கள் ...
கச் சுரண்டப்பட...
உணர்ந்து வரு...
அப்படிச் சுரண்...
னின்று விடு...
எல்லோடும் ச...
பெறவேண்டுமென...
ணம் இவர்களின...
த்து வருகிறது.
டைய தேவைக...
பட்டுக்கொண்டே...
றன என்பதையு...
கள் தெரிந்துகொ...
கிறார்கள். இவை...
எதைக் காட்...
தன்னை முன்னுக்...
விடாமல் பின்னுக்...
துக்கொண்டிருக்கி...
பாடான சக்திகள்...
தங்கள் முதல...
லாம் சாசுவதமா...
ந்து கொண்டு
எதிர்த்து நிற்...
சாதாரண மனித...
வப்பொழுது செ...
ற்...களை... காட்...

### பயமுறுத்தலைப்... பயமின்றி எதி...

சில விசேஷ...
ளுக்கு நாம் ...
முக்கியத்துவம் ...
பேசிவிடுகிறோம்.
காரணம் அந்தச்...
களை நாம் விபரீ...
யில் பார்ப்பதுதா...
சொன்ன பிற்...
மூட்டுச் சந்துக...
கள் முதலியவற்...
றுண்டுகள் கண...
கத்தில் பொதுவ...
போக்கின்படி ...
நடைபெறுகின்ற...
தப்போக்கு என்...
னணியோடு
வைத்துப் பார்...
னால், அவை— ...
பிற்போக்குகள்
இந்தப் பின்னண...
பாகந்தான் என்...
படும். ஆனால் இ...
சரிவரத் தெரிந்து...
தில்லை. மானிட



# …மையை ஒழித்து இந்துமதத்தைப் …ப்படுத்த வேண்டும்’

…தாங்கள் அதிகமா …ண்டப்படுவதாக …து வருகிறார்கள். …ர் சுரண்டப்படுவதி… …விடுதலைபெற்று …டும் சமஅந்தஸ்து …ண்டுமென்கிற எண் …வர்களிடையே வலு …ருகிறது. தங்களு… தேவைகள் அதிகப் …கொண்டே வருகின் …ன்பதையும் இவர் …ரிந்துகொண்டு வரு… …. இவையெல்லாம் … காட்டுகின்றன? …முன்னுக்குப் பாக …பின்னுக்கே இழுத் …ண்டிருக்கிற முரண் … சக்திகள், நிர்ப்பந் … முதலியனவெல் …சுவதமாக வளர் …ண்டு வருவதை … நிற்பதற்காகச் …ன மனிதன் அவ் …ழுது செய்கிற முய… … காட்டுகின்றன.

**…த்தலைப் …றி எதிர்ப்பவர்**

…விசேஷ சம்பவங்க… …நாம் அதிகமான …துவம் கொடுத்துப் …கிறோம். இதற்குக் … அந்தச் சம்பவங் …ம் விபரீத திருஷ்டி …ப்பதுதான். மேலே … பிற்போக்குகள், … சந்துகள், சேதங் …தலியவற்றை, நூற் …ள் கணக்காக உல… …பொதுவாக எந்தப் …ப்படி காரியங்கள் …றுகின்றனவோ அந் …கு என்கிற பின் …டு பொருத்தி … பார்ப்போமா …வை — மேற்கண்ட …குகள் முதலியன …பின்னணியின் ஒரு …ன் என்பது புலப் …ஆனால் இதனை நாம் …தெரிந்து கொள்வ …மானிட சமுதாயம்

தொடர்ந்து செய்து கொண்டு வந்திருக்கிற முயற்சிகளைப் பற்றுதலின் றிப் பார்ப்போமானால் நாம் ஆச்சரியமும் திகைப்பும் அடைவோம். அடிமைகள் சுதந்திர புருஷர்களாகி வருகிறார்கள். மாறுபட்ட மதக் கொள்கையுடையவர்கள் இப்பொழுது எரிக்கப்படுகிறார்களில்லை. பிரபுக்கள் தங்

காரம் கொண்ட ஜாதிய, தேசிய எழுச்சிகள் ஆகியவற்றை உலகத்தில் காண்கிறோம். இப்படியெல்லாம் இருந்தும், அகில உலகத்திலும் பரவி நிற்கும் தன்மையுடைய ஜனநாயக பரம்பரையை நாம் பார்க்காமற் போனால் நாம் குருடர்கள் தான். பரம ஏழைகளும் கூடப் போதியளவு ஆகா

**டாக்டர். எஸ். ராதாகிருஷ்ணன்**

கள் உரிமைகளை ஒப்புக்கொடுக்கிறார்கள். அடிமைகளாகவே வாழ்ந்து வந்தவர்கள் அந்த அவமானகரமான வாழ்க்கையிலிருந்து விடுதலை அடைகிறார்கள். பணக்காரர்கள் தங்களிடம் பணம் இருப்பதற்கு மன்

ரம், வெளிச்சம், காற்று அனுபவிக்க உரிமை பெற வேண்டும். அவர்களுடைய வாழ்க்கையில் நம்பிக்கை, பெருந்தன்மை, அழகு முதலியன விளங்க வேண்டும். இப்படிப்பட்டவர்கள் நிறைந்த ஓர் உலகத்தை சமை

## புதிய உலகத்தைச் சமைக்க ஓயாது உழைத்தவர்களில் முதன்மையானவர் மகாத்மா

ணிப்புக் கேட்கவேண்டியவர்களாகவிருக்கிறார்கள் ஆயுத பலத்தோடு கூடிய ஏகாதிபத்தியங்கள் சமாதானத்தின் அவசியத்தைப் பற்றி முழக்கம் செய்கின்றன. மானிட சமுதாயம் ஒன்று சேரப்போகிறதென்கிற கனவுகளும் காணப்படுகின்றன. ஆம் இப்பொழுதுகூட அதிகாரத்திலுள்ளவர்களின் பேராசை. கீழ் மக்களின் வன்மபுத்தி, நயவஞ்சகர்களின் பொய்மைகள், அகங்

க்க அநேக மகான்கள் ஓயாமல் உழைத்துக் கொண்டு வருகிறார்கள். அவர்களிலே முதன்மையானவர் சிலர் அவருள் ஒருவர் காந்தியடிகள். சமீபகாலத்தில் அழிவு ஏற்படக்கூடும் என்று பயமுறுத்துகிறபோது, அதற்காக எதிர்காலத்தில் ஏதோ நன்மையுண்டாகப் போகிறதென்று சமாதானஞ்செய்துகொண்டு இந்தப் பயமுறுத்தலை அவர் எதிர்க்காமல் இருப்பதில்லை. உறுதியான

கொள்கையுடையவருடன் சேர்ந்துகொண்டு தீமைகளைப் போக்கவும், ஆபத்துக்களைத் தடுக்கவும் நேரிய முறைகள் என்னென்ன உண்டோ அவைகளையெல்லாம் அவர் கையாளுகிறார். அவரைப் பொறுத்தமட்டில், ஜனநாயகம் என்பது சாதாரண ஒரு சொற்றொடரல்ல. அது சமுதாயத்தின் உண்மை நிலையை எடுத்துக்காட்டும்ஒரு கருவி. தென்னாபிரிக்காவிலும், இந்தியாவிலும் பொதுஜன நன்மைக்காக அவர் செய்திருக்கும் காரியங்களைப்பற்றி நாம் சரியாகத் தெரிந்து சொள்ள வேண்டுமானால் சாதாரண மனிதனிடத்தில் அவர் செலுத்தும் அன்பை அறிந்து கொள்ளவேண்டும்.

### பொதுஜன சாத்வீக மறுப்பியக்கம்

ஜெர்மனியில், யூதர்களை நாஜிகள் நடத்தும் முறையைக் கண்டு நாகரிக உலகம் கலங்கிப்போயிருக்கிறது. உலகத்தில் மீண்டும் ஜாதித்துவேஷம் கிளம்பியிருப்பதைக் கண்டு தாராள மனப்பான்மை கொண்ட அநேக ராஜதந்திரிகள் தங்கள் வருத்தத்தைத் தெரிவிப்பதோடு இதனைக் கண்

டித்தும் வருகிறார்கள். ஆனால் இதில் ஆச்சரியமானதும், திகைக்கக்கூடியதுமான விஷயம் என்னவென்றால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த ஜனநாயக நாடுகளிலும், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலும் வசிக்கும் அநேக ஜாதியினர், தங்கள் ஜாதி காரணமாக அரசியல் விஷயத்திலும் சமுதாய விஷயத்திலும் பல சங்கடங்களை அனுபவித்துக் கொண்டிருப்பதுதான். காந்தியடிகள் தென்னாபிரிக்காவில் இருந்தபோது, அங்கு இந்தியர்கள் பெயரளவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சுதந்திரப் பிரஜைகளாக இருந்தபோதிலும், அநேக குறைகளுக்குட்படுத்தப்பட்டிருப்பதைக் கண்டார். அங்கிருந்த கிறிஸ்தவப் பாதிரிக் கூட்டமும் அரசாங்கமும் சேர்ந்து ஐரோப்பியரல்லாத மற்ற ஜாதியினருக்குச் சம உரிமை வழங்க மறுத்துவிட்டன. இந்த அநீதமான நிர்ப்பந்தங்களை எதிர்த்துப்போராட காந்தியடிகள் பொதுஜன சாத்வீக மறுப்பியக்கத்தை ஆரம்பித்தார். மனிதர்கள் என்ற முறையில் எல்லோரும் சம அந்தஸ்துள்ளவர்களே; ஜாதி, நிறம் காரணமாக ஏற்படுத்தப்பட்டுள்ள செயற்கைப் பிரிவுகள் அநியாயமானவை. அதர்மமானவை என்ற கொள்கைகளை ஸ்தாபிக்கஅவர்போராடினார். இந்திய சமுதாயத்திற்கு அதன் கேவல ஸ்திதியை விளக்கிக்காட்டினார் தன் மதிப்பும் கௌரவமும் தனக்கு உண்டு என்று அஃது உணரும்படி செய்தார். இந்தியர்களுடைய நன்மையைக் குறித்துமட்டும் அவர் பாடுபடவில்லை. ஆபிரிக்க சுதேசிகள் சுரண்டப்படுவதையும் அவர் அங்கீகரிக்கவில்லை. அப்படியே இந்தியர்கள் புராதன நாகரிகப் பெருமையுடையவர்கள் என்ற காரணத்திற்காக விசேஷ கௌரவத்தோடு நடத்தப்படவேண்டுமென்பதையும் அவர் அங்கீகரிக்கவில்லை. இந்தியர்களுக்கு விரோதமாக அனுஷ்டானத்

திலிருந்த சில வெறுக்கத்தக்க சட்டங்கள் இப்பொழுது எடுத்துவிடப்பட்டிருக்கின்றன என்பது வாஸ்தவம். இருந்தாலும் இன்னமும்கூட இந்தியர்கள் பல கேவலமான நிர்ப்பந்தங்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இந்த நிபந்தனைகளைச் சகித்துக்கொண்டு போகிற இந்தியர்களுக்கு இது பெருமையும் இல்லை; இவைகளை விதிக்கும் அரசாங்கத்திற்கு இது கௌரவமுமில்லை.

### மகாத்மாவின் மகத்தான நன்கொடை

இந்தியாவில்காந்தியடிகள் கொண்டுள்ள நோக்கம் என்னவென்றால் தேசத்திலுள்ள வேற்றுமைகளையும், பிணக்குகளையும் ஒழிக்க வேண்டும்; அவர்கள்தேவைகளை அவர்களே பூர்த்தி செய்துகொள்ளுமாறு பாமர ஜனங்களைப் பழக்கப்படுத்தி விடவேண்டும்; அரசியல், பொருளாதாரம், சமுதாயம் முதலிய விஷயங்களில் ஆண்கள் அடைந்திருக்கிற அந்தஸ்திற்குப் பெண்களையும் உயர்த்த வேண்டும்; தேசத்தைப் பல பிரிவுகளுக்குள்ளாக்கி இருக்கிற மதத்துவேஷங்களை அகற்றவேண்டும்; தீண்டாமையை ஒழித்து இந்துமதத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டும். இந்துமதத்திலிருந்துஇந்தத் தீண்டாமைக் களங்கத்தை அகற்றும் விஷயத்தில் அவர் அடைந்திருக்கிற வெற்றியானது, மானிடசமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக அவரால் அளிக்கப்பட்ட மகத்தானதொரு நன்கொடையாகும். தீண்டாதார் என்று சொல்லிக்கொண்டு ஒரு சிலர் இருக்கிறவரையில், அவர்களில் காந்தியடிகளும் ஒருவர்.

“நான் மறுபிறப்பெடுப்பேனாகில், ஒருதீண்டாதானாகவே பிறக்க விரும்புவேன். அப்பொழுதுதான் அவர்களுடைய துயரங்களிலும் அவர்களுக்கிழைக்கப்படுகின்ற அவமானங்களிலும் நான்

[12-ம் பக்கம் பார்க்க]


நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும் அறவே ஒழிக்க உபயோகியுங்கள்

‘என்றெக்ஸ்’ 20

என்றின் என்னும் பொருளின் வலுமிக்க உருவம்




நெற் பீடைக் கிருமிகள் எத்தனையோ. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வகையான, விலையுயர்ந்த கிருமிநாசினிகள் சிபார்சு செய்யப்படுகின்றன. ஆனால் நெற் பயிரைத் தாக்கும் எல்லா வகைக் கிருமிப் பீடைகளையும் சிக்கனமாக அறவே அழிக்க வல்லதென்று நிரூபிக்கப்பட்ட கிருமிநாசினி ஒன்றுதான் உண்டு. இத்தகைய சஞ்சீவி மருந்தே ‘என்றெக்ஸ்’ 20. இது நெற் கிருமிப் பீடைகள் யாவற்றையும் போகத்துக்குப் போகம், வருடத்துக்கு வருடம் வெகு செம்மையாகக் கட்டுப்படுத்த வல்ல கிருமிநாசினியெனப் பயிர்ச் செய்கையாளர்கள் மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளார்கள். சேற்று நில நெற்காணிகளிலும் மேட்டு நிலக் காணிகளிலும் இலங்கையிலும் நெல் விளையும் உலகின் எல்லாப் பாகங்களிலும் இவ்வாறு நிரூபிக்கப்பட்டிருக்கிறது.


‘என்றெக்ஸ்’ 20 முத்திரிக்கையிட்ட, கலப்படஞ் செய்ய இடமளிக்காத 16 திரவ அவுன்ஸ் போத்தல்களிலும் 1, 4, 45 கலன் கலங்களிலும் கிடைக்கும்.

உங்கள் நெற்பயிரை எல்லா வகையான கிருமிப் பீடைகளிடமிருந்தும் காப்பாற்றுவதற்கு பயிர் 10-14 நாள் வளர்ச்சியடைந்திருக்கும் பருவத்தில் நன்றாக ‘என்றெக்ஸ்’ 20 தெளிக்கத் தொடங்குங்கள். பின்னர் மாதம் ஒரு முறை தெளித்து வரவும். 2 கலன் நீருக்கு 1 திரவ அவுன்ஸ் ‘என்றெக்ஸ்’ 20 வீதம் கலந்த 32-40 கலன் தெளி திரவத்தை ஓர் ஏக்கருக்குத் தெளிக்கவும். இதற்காகும் செலவு, உபயோகிக்கும் அளவுப் பிரமாணத்தையும் கொள்வனவு செய்யும் அளவையும் பொறுத்து, ஏக்கருக்கு ஒரு முறைக்கு ரூ. 6/- முதல் ரூ. 10/- வரை அமையும். பீடைகளின் தொல்லையற்ற ஆரோக்கியமான பயிரும் அமோக விளைச்சலும் கிடைப்பதற்கு இது அற்ப செலவே.

ஷெல் ரசாயனப் பொருட்கள் SHELL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணல் இல்லறத்தில் இதயத்தைத் தொடும் சம்பவங்கள்



அன்னை கஸ்தூரிபாய் அண்ணலின் கொள்கைகள் செயல்படவேண்டும் என்பதற்காகத் தன் நலனைத்தியாகம் செய்தவர். அண்ணலினிடத்து ஆழ்ந்த அன்புகொண்ட அன்னை தனது இல்லற வாழ்வில் அவரின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக பெரும் கஷ்டத்தை அனுபவித்தவர். பல தடவைகளில் இருவருக்குமிடையே வாக்குவாதங்களும் பூசல்களும் தலைதூக்கத் தவறுவதில்லை. இத்தகைய சம்பவங்கள்சில நம் உள்ளத்தைத் தொடுவன.

### சபர்மதி ஆச்சிரம வாழ்க்கை

ஆபிரிக்காவில் இருந்து தனது குடும்பத்தாருடன் தாயகம்திரும்பிய மகாத்மா சபர்மதி நதிக்கரையில் 1915-ம் ஆண்டு ஆச்சிரமமொன்றை அமைத்து அங்கு குடும்பத்துடன் தங்கினுர்.

இச்சத்தியாக்கிரக ஆச்சிரமத்தை ஆரம்பித்த குறுகிய காலப்பகுதியில் ஊர்ப்பிரமுகர் ஒருவரிடமிருந்து ஒரு தீண்டப்படாதவா குடும்பம் காந்தியடிகளின் ஆச்சிரமத்தில் சேரவிரும்புவதாகக் கூறிக் கடிதம் வந்தது. துதாபாய் அவரதுமனைவிதனிபெஹன், அவர்களது குழந்தை லட்சுமி ஆகியோரடங்கிய அக்குடும்பத்தை அண்ணல் அன்போடு ஏற்றுக்கொண்டார். இது இன்று நமக்குச் சாதாரணமான விஷயமாகலாம். ஆனுல் அன்று இது அவருக்கு வீட்டிலும் வெளியிலும் பெரும் எதிர்ப்பைக் கொண்டுவந்தது.

இத்தீண்டாதார்குடும்பத்தைச் சமமா நடத்திஅவர்களோடு சேர்ந்துண்பதையும், உணவு சமைப்பதையும் ஆச்சிரமத்திலுள்ளோரும் வெளியில் உள்ளவர்களும் எதிர்த்தனர். இதனுல் இவ்வாச்சிரமத்திற்கு அளிக்கப்பட்ட நிதியுதவிகளெல்லாம் நிறுத்தப்பட்டன.

அன்னை கஸ்தூரிபாய் அண்ணலின் இச்செயலால் பெரும் அருவருப்படைந்தார். மகன் ஹரிலால், மனைவியுடன் ஆச்சிரமத்தை விட்டு வெளியேறினுர். இவைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அன்னை கொதித்தெழுந்தார். அண்ணலின் செயலைக் கண்டித்தார். இதைக்கண்டு ஆத்திரமடைந்த அண்ணல் ''ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும் நீ பல்வேறு இன, மத மக்களோடு ஒன்ருக வாழவில்லையா? அவர்கள் சமைத்த உணவை உண்ணவில்லையா? இங்கு ஏன் பெருங்கூச்சல் போடுகிருய்'' எனக் கேட்டார்.

அன்னை கஸ்தூரி இதைக் கேட்டு அடங்கிப்போய்விடவில்லை. ''அந்நாடுகள் அன்னியநாடுகள். அங்குள்ள நிலைமை வேறு; இங்குள்ள நிலைமை உங்களுக்குத்தெரிந்

(11 ம் பக்கம் பார்க்க)

## பாபுஜியும் சரோஜியும்

ஒருசமயம் காந்தி ஜெயந்தி அன்று காந்தியடிகளுக்குப் பணமுடிப்பு அளிப்பதற்காக ஆயிரக்கணக்கான ரூபாய் வசூலாயிருந்தது. அந்தப் பணமுடிப்பைச் சுட்டிக் காட்டி ஸ்ரீமதி சரோஜினிதேவி ''தங்களிடம் கொடுக்காமல் இதை எடுத்துக் கொண்டு நான் ஓடிவிட்டால் நீங்கள் என்னசெய்வீர்கள்?'' என்றுமகாத்மாவிடம் கேட்டார்.

அதற்குக் காந்தியடிகள் ''இந்தமாதிரி வேலைகளுக்குத் தாங்கள் மிகவும் லாயக்கானவர்கள் தான் என்று நான் தெரிந்து கொள்வேன்'' என்று சொல்லிச் சிரித்தார். கூட இருந்தவர்கள் கொல்லென்றுசிரித்து விட்டார்கள்.

## காந்திஜியின் 'சோப்'

நாம் எல்லோரும் உடம்பின் அழுக்கைப் போக்குவதற்குசோப்பைப் பயன்படுத்துகிறுேமல்லவா? அண்ணலும் அழுக்கைப் போக்க ஒருவகை 'சோப்'பை உபயோகித்தார். அது என்ன தெரியுமா? அதுதான் எலுமிச்சங்காய். சுதேசிப் பொருள்களையும் எளிமையையும்விரும்பும் மகாத்மா குளிப்பதற்குசோப்பை ஒரு நாளும் பாவித்ததில்லை. காலையில் எண்ணெய் பூசி ஸ்நானம்செய்யச் செல்லும் அண்ணல் உடம்பெங்கும் எலுமிச்சம் பழத்தையே தேய்த்துக் குளிப்பார். இப் பழச்சாற்றைப் பூசி ஒரு துணியால் உடம்பை அழுக்குப் போகத் தேய்த்துக் குளிப்பார். சோப்பின்றிஇவ்வாறு ஸ்நானம் செய்யும் அண்ணல்உடல்மினுமினுப்போடு எந்நேரமும் அழகாக விளங்கியது.

## பயம் வேண்டாம்

பெண்கள் முக்கியமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம் பயமின்றி இருப்பது எப்படி என்பதே. பயம் இல்லாத ஒரு பெண் தனது புனிதத் தன்மையே தனக்குள்ள சிறந்த கேடயம் என்பதை அறிந்திருப்பாளாயின் அவளை மானபங்கப்படுத்திவிட முடியாது. இது என் திட்டமான கருத்து. மனிதன் எவ்வளவுதான் மிருகத்தனத்துடன் இருந்தாலும் ஜொலிக்கும் அவளது புனிதத்தன்மையின் கனலுக்கு முன்னுல் அவன் வெட்கித் தலை குனிவான்.

— காந்திஜி.

## அண்ணலுக்கு அஞ்சலி




நேற்று அண்ணல் காந்தியின் நூருவது பிறந்த தினம். உலகெங்கும் அவரது நூற்ருண்டு விழாக் கொண்டாடப்படுகிறது. மங்கையராகிய நாமும் சுதந்திரப் பறவைகளாகச் சகல துறைகளிலும் முன்னேற வேண்டுமென்பதும் அம்மகாத்மாவின் பேரவா. சுதந்திரத்தின் தந்தையான அவரின் நூற்ருண்டு நிறைவையொட்டி இன்று 'குடும்பச்சுடர்' அவரின் நினைவொளியாகச் சுடர் விடுகிறது. அவர் தம் கருத்துக்கமைய நங்கையர் தம் வாழ்வை அமைத்து அவர் நினைவு உலகுள்ளளவும் நிலைக்கச் செய்வோமாக!

குடும்பச் சுடர்

தயாரிப்பு — குணம்

# சென்றவிடமெல்லாம் சேவையின் சின்னமானுர் திருமதி பண்டிட்

நாம் கொண்டாடும் காந்தி நூற்ருண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் காலஞ்சென்ற பாரதப்பிரதமர் ஜவஹர்லால் நேருவின் சகோதரியான திருமதி விஜயலட்சுமி பண்டிட் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைப் பதவியை வகித்த முதல் பெண்மணியாவார். இதனுல் பாரதத்துக்கு மட்டுமன்றி உலகின் பெண் சமுதாயத்துக்கே பெருமை தேடித்தந்த பெருமை இவரைச் சாரும்.



இளமையிலேயேகாந்தியக் கொள்கைகளில் ஊறிய திருமதி விஜயலட்சுமி பண்டிட் மகாத்மாகாந்தியின் இயக்கங்களிலெல்லாம் பங்கு கொண்டு அவருடன் பலதடவை சிறைக்குச்சென்ருர்.

### கூறையாகக் கதர்ஆடை அணிந்தார்

அண்ணல் காந்தியோடு நெருங்கிய தொடர்புடைய இவர் அண்ணலின் எளிமையான வாழ்க்கையையே தானும் கைக்கொள்ளவிரும்பித் தனது திருமணத்தின் போது அன்னை கஸ்தூரிபாயினுல் நெய்யப்பட்ட சாதாரண மிக எளிமையான கதர் ஆடையையே கூறைப்புடவையாக அணிந்தார் பிற்காலத்தில் பல்வேறு நாடுகளில் இந்திய தூதுவராகக் கடமையாற்றிய பொழுதும் இவர் அந்நாடுகளின் நாகரிகங்களையோ அல்லது அந்நாடுகளில் ஆடம்பரவாழ்க்கையையோ விரும்பவில்லை. இந்தியப் பண்பாட்டைக் காப்பாற்றிச் சென்றவிடமெல்லாம் சேவையின் சின்னமாக விளங்கினுர்.

### பலதடவை சிறைவாசம்

காந்திஜியின் ஒத்துழையாமை, சட்டமறுப்பு இயக்கங்களில் பங்குபற்றி சிறைக்கும் பலதடவை சென்ற விஜயா அங்குசும்மாவிருக்கவில்லை. அங்கிருந்த கல்வியறிவற்ற பெண்குற்றவாளிகள் பலருக்கு கல்வி புகட்டினுர். இவர்களுக்கு வகுப்புகள் நடத்தியதோடு நின்றுவிடாமல் இவர்களின் குழந்தைகளுக்கு பாலர் வகுப்புகளைத்தானே ஒழுங்கு செய்து அப்பச்சிளம்பாலகர்களையும் அறிவுச்சுடராக்கினுர், விஜயா.

### உலகப்புகழ்பெற்றவர்

1944-ம் ஆண்டு தனது கணவரான ரஞ்ஜிற்பண்டிட் இறந்த பின்னர் உலகநாடுகள் பலவற்றிலும் இந்தியத் தூதராகக் கடமையாற்றிய இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவராக இன்றுவிளங்குகிறுர். ஐக்கிய நாடுகள் நிறுவனத்தலைமைப் பதவியை மட்டுமன்றி 1965-ல் அவுஸ்திரேலியாவின் கவர்னராகவும் கடமையாற்றி அவுஸ்திரேலியாவில் சமாதானத்தை நிலைநாட்டினுர்.

இத்தகைய பெரும்பதவிகளையெல்லாம் வகித்து அண்ணல் காட்டியவழி கடமையே கண்ணும் கருத்துமாய்க்கொண்டு சேவை செய்தவரும் செய்துகொண்டிருப்பவருமான விஜயா நாம் கொண்டாடும் காந்தி நூற்ருண்டுவிழாவில் கலந்துகொள்வது எமக்குக் கிடைத்த அரியதொரு வாய்ப்பாகும.

## பெண்ணின் ஆயுதங்கள்

உள்ளத்தில் புனிதமாக இருக்கும் பெண்ணுக்கு, கடவுள் தன்னைக்காக்கக் கடமைப்பட்டிருக்கிறுர் என்ற நம்பிக்கையும் இருக்க வேண்டும். தன்னைக் காக்க ஆயுதங்களை நம்பியிருப்பது சரியல்ல. அன்பு விதியை மேற்கொண்டிருப்பவருக்கு ஆயுதங்கள் தேவையேயில்லை. அவளுடைய அஹிம்சை, அவளுடைய அன்பு ஆகிய இரண்டுமே அவளுடைய ஆயுதங்கள்.

—காந்திஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### மாணவ மணிகளே!

எம்மிடம் வந்து சேரும் ஏராளமான கட்டுரைகளை அவதானிக்கும்போது, மாணவமணிகள் மாணவ மலரில் வைத்துள்ள அதிக ஈடுபாட்டை உணரக்கூடியதாகவிருக்கிறது. விசேஷமாக பல விஞ்ஞான ஆய்வுக்கட்டுரைகளை மாணவர்கள் அனுப்பியுள்ளனர். அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்! முன்னேற்றக்கருத்துக்களுக்கு எப்போதும் முதலிடம் கிடைக்கும்.

தொடர்ந்து, மாணவர் மலரில் பிரசுரமாக வேண்டும் என்று நீங்கள் விரும்பும் புதுப்புது அம்சங்களையும், யோசனைகளையும் எமக்கு எழுதுங்கள். நிச்சயம் அவற்றைப் பரிசீலனை செய்து உங்கள் மலருக்கு புதுமணம் அளிப்போம்.

- காசி

# அண்ணலின் இல்லறத்தில்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ததுதானே'' என்றார். அன்னையின் சொற்கள் எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலாயிற்று. ஆத்திரமடைந்த அண்ணல் ''கணவனை இழந்த எனது சகோதரிக்கு இங்கு விருப்பமானால் இன மதவேறுபாடின்றி எனது கொள்கைகளுக்கு அடங்கி இருக்கலாம் அல்லாவிடில் எங்கு சென்றென்றாலும் மாவரைத்துப் பிழைத்தாலும் எனக்குப் பரவாயில்லை எனக்கூறியது உனக்கு நன்றாக நினைவிருக்கலாம். இதையே உனக்கும் திருப்பிக் கூற விரும்புகிறேன் நாம் இருவரும் சினேகமனப்பான்மையோடு ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிவோம்'' என்றார்.

தனது இல்லற வாழ்வில் இதுவரை பிரிந்து போகும்படி அண்ணல் கூறியது கிடையாததலால் கஸ்தூரிபாய் இதைக் கேட்டதும் செய்வதறியாது மரம்போலாகி கண்ணீர் உகுத்தார். எனவே மேலும் கதையை வளர்க்கவிரும்பாது அவர் குறிக்கோள்களை நிறைவேற்றத்தான் கஷ்டப்படத்தயாரானர்

### பிரிவை விரும்பாத அன்னை

எத்துணைக் கஷ்டத்தை அனுபவித்தபோதும் பிரிவென்ற சொல்லையே கேட்க விரும்பாத அன்னை இச் சொல்லை ஒரு தடவை அண்ணல் வாயிலிருந்து ஆபிரிக்காவில் இருக்கும்போதும் கேட்டுப் புழுவாய்த்துடித்தார்.

### ஆபிரிக்க சம்பவம்

ஆபிரிக்காவில் டேர்பன் நகரில் மேற்கத்தியமுறையில் அமைந்த ஒரு பங்களாவில் அண்ணல் வசித்தார். இருமாடிகளைக் கொண்ட இவ்வீட்டில் முதல்மாடியில் கால் கை முகம் கழுவுவதற்குப் பயன்படுத்திய நீர் வெளியேற வழியில்லை. ஆதலால் அந்நீரை அதற்குரிய பாத்திரத்தில் சேகரித்துக் கீழ்ப்பகுதிக்குக்கொண்டு வந்து வெளியேற்ற வேண்டும். இவ்வேலையை அன்னையே செய்தார். அண்ணலுக்கு மட்டுமா செய்தார்? அண்ணலின் இலிகிதரான பஞ்சாமா ஜாதியைச்சேர்ந்த ஒருவருக்கும்செய்யவேண்டியிருந்தது. அண்ணலின் வற்புறுத்தலின் பேரில் இச் சேவையை மேற்கொண்ட அன்னை கஸ்தூரிபாயின் உள்ளம் ஆத்திரத்தாலும் அவமானத்தாலும் குமுறியது. ஒவ்வொருநாளும் கண்ணீர் தாரைதாரையாக வழிய இச்சேவையைச் செய்தார்.

இதைப் பல தடவை கவனித்த மகாத்மாவுக்கு ஆத்திரம் பொங்கியெழுந்தது. ''உனது இத்தகைய சாகசச் செயலை என்னால் இனி மேலும்பொறுக்கமுடியாது'' எனப்பெருங்கூச்சலிட்டார். அன்னை அடங்கினாரா இல்லை. பதிலுக்கு அவரும் கூச்சலிட்டார். ''வீட்டை நீங்களே கவனித்துக் கொண்டு என்னைப் போக விடுங்கள்'' என்றார்.

மலைகுலையினும் நிலைகுலையாத மகாத்மா அன்னையை கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு வாயிலில் உள்ள இரும்புக்கதவண்டை விரைவாகச்சென்றார். அன்னையை அவர் வெளியில் தள்ளப் போகும் சமயம் ''உற்றார் உறவினர் இல்லாத ஒரு அன்னிய நாட்டில் என்னை இவ்வாறு வெளியில் தள்ள உங்களுக்கு வெட்கமில்லையா? நான் எங்கு போவேன். உங்களுக்கு மனைவியானதற்காக நீங்கள் சொல்வதற்கெல்லாம் நான் அடிபணிய வேண்டுமா? உங்களுக்கு அறிவுணர்ச்சி என்பதேயில்லையா? தயவுசெய்து கதவை அடையுங்கள். வீதியில் செல்பவர்களுக்கு நாம் காட்சிப் பொருளாக வேண்டாம்', எனக் கண்ணீருக்கு மத்தியில் கதறி முடித்தார். தனது ஸ்திரமான நிலையினின்றும் தளரவில்லையெனினும் அன்னையின் இந்த நியாயவாதம் அவரைத் தலைகுனியச் செய்தது. தன் செயலை நினைத்து வருந்திய அவர் அன்னையை அழைத்துக்கொண்டு வீட்டினுள் சென்றார்.

மேற்கூறிய இரு சம்பவங்களும் அன்னை கஸ்தூரிபாயை கவலைக்கடலில் ஆழ்த்தியவையாகும். மகாத்மா தனது குறிக்கோள்களையும், இயக்கங்களையும் செயல்படுத்துவதற்குத் தனது இல்லறவாழ்வில் மேற்கூறியன போன்ற பல துயர சம்பவங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இத்தகைய துயர் உற்றபோதும் அன்னையும் அண்ணலைப் பிரிய விரும்பவில்லை. கருத்தொருமித்த இத்தம்பதிகள் இன்பத்தில் மட்டுமன்றித் துன்பத்திலும் ஒருவரையொருவர் இணைபிரியாதே வாழ்ந்தனர்.

கஷ்டத்தை அனுபவிக்கும் எண்ணற்றவர்களுக்கு தைரியத்தோடும், அன்போடும் தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தை நடாத்த அண்ணலினதும், அன்னையினதும் இல்லறம் ஒரு சிறந்த வழி காட்டி.

# உங்களுக்குத் தெரியுமா?

—நெல்லை க. பேரன்

தபாலதிபர் பரீட்சை, மாணவ ஆசிரியர் பரீட்சை போன்ற அரசாங்கப்பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு உதவும்பொருட்டும் ஏனைய மாணவர்களின் நலன்கருதியும் 'உங்களுக்குத் தெரியுமா'என்ற பகுதியில் கேள்வி பதில்கள் மாணவர்மலரில் தொடர்ந்து வெளியிடப்படும். தொகுத்து அனுப்புபவர்:நெல்லை க:பேரன்.

**விணுக்களும் — விடைகளும்**

**சட்டமறுப்பியக்கத்தின் தந்தை யார்?**

ஹென்றிடேவிட்தொரோ.

**எட்டுத்தொகை எனப்படுவது யாது?**

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

4 சமய குரவர் சரித்திரம்- கா. சுப்பிரமணிய பிள்ளை.

5. தண்டியலங்காரம்- தண்டி.

6. நன்னூல் காண்டிகையுரை- ஆறுமுகநாவலர்.

7. நன்னூல்-பவணந்தி முனிவர்.

## பத்துப் பாட்டு எது ?

**பத்துப்பாட்டு எது?**

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை,மலைபடுகடாம்.

**மடக்கை வாய்பாடுமுறை கண்டுபிடித்தவர் யார்?**

ஜோன் கெப்ளர்.

**கொழும்புத்திட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது? அதன் நோக்கம் என்ன?**

1950.தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்காக.

**சில நூல்களும் — எழுதியவர்கள் பெயர்களும்:**

அ நான்மணிக் கடிகை- விளம்பிநாகனார்.

ஆ இனியது நாற்பது- மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார்.

இ இன்னாநாற்பது - கபிலர்.

ஈ கார் நாற்பது - மதுரைக்கண்ணன் கூத்தனார்.

உ களவழி நாற்பது- பொய்கையார்.

ஊ திணைமொழி ஐம்பது- கண்ணஞ் சேந்தனார்.

எ தக்கையாகப் பரணி- ஒட்டக்கூத்தர்.

ஏ கலிங்கத்துப் பரணி- செயங்கொண்டார்.

ஐ கொக்கோகம் - வரதுங்க பாண்டியன்.

ஒ பிரபுலிங்கலீலை - துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

ஓ. மக்கள் நூறுண்டுஉயிர் வாழ்வதெப்படி?- மறைமலை அடிகளார்.

ஔ. கிறித்தவமும் தமிழும்-மயிலை சீனி வேங்கடசாமி.

ஃ. சுக்கிரநீதி சுரோசனை- பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்.

1. புலவர் புராணம்- மகான் வண்ணசரபந்த தண்டபாணி சுவாமிகள்

2. தில்லைத் திருவாயிரம்- மகான் வண்ணசரபந்த் தண்டபாணி சுவாமிகள்.

3. பழனித் திருவாயிரம்- மகான் வண்ணசரபந்த தண்டபாணி சுவாமிகள்.

1. ஜேர்மன் பட்ட பலூனைக் (German Kite Baloon) கண்டு பிடித்தவர் யார்? பாசிவால்.

2. ரெப்டோன்வாயுவைக் கண்டுபிடித்தவர்கள் யாவர்? டபிள்யு. ராம்சேயும், எம். டபிள்யு. ரவேர்சும்.

3. மந்திரவிளக்கு Magic Lantern) கண்டுபிடித்தவர் யார்? அட்டனேசியஸ் கேச்சர்.

**சில இலங்கை எழுத்தாளர்களும் அவர்கள் எழுதிய நூல்களும்:**

1. எஸ். பொன்னுத்துரை- வீ, தீ.

2. செ. கணேசலிங்கன்- 'தரையும் தாரகையும்'

3. செ. கதிர்காமநாதன்- 'கொட்டும் பனி'.

4. மகாகவி- 'கண்மணியாள் காதை'.

5. இ. நாகராஜன்-சிலம்பு சிரித்தது.

6. நா. க. தங்கரத்தினம் (நகுலன்) -இப்படி எத்தனை நாட்கள்?

7. வ. அ. இராசரத்தினம் தோணி.

8. ரசிகமணி கனக செந்திநாதன் -'ஈழத்து இலக்கிய வளர்ச்சி'.

9. கலாநிதி க. கைலாசபதி- பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்.

10. வி. செல்வவிநாயகம்- தமிழ் இலக்கிய வரலாறு.

(தொடரும்)

# சமுத்திர ஆராய்ச்சியில் இலங்கை விஞ்ஞானிகள்

அனுப்பியவர்

--ச. க. தனபாலசிங்கம்—

சமுத்திரவியல் ஆராய்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்ட இலங்கையரான இரு புவியியல் வல்லுநர்கள் பாராட்டுக்குள்ளாகியிருக்கின்றனர். தென் இந்தியாவின் முனையில அமெரிக்க சமுத்திரவியல் ஆராய்ச்சிகள் நடைபெற்றன. மின்சாரம், காந்தம் ஆகியவற்றின் மாறுபாடுகளை அறியவே மேற்படி ஆராய்ச்சிகள் நடைபெற்றன.

பன்னிரண்டு நாடுகளைச் சேர்ந்த 85 விஞ்ஞானிகள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டனர். அவர்களுள் இலங்கையைச் சார்ந்த புவிபௌதிகவியலாளர் மாக்ஸ் ரணசிங்க, புவிச்சரிதவியலாளர் வி. எஸ். பாலே திரன் ஆகிய இருவருமே பாராட்டுகளைப் பெற்றுள்ளனர்.

சாந்தியாகோவிலுள்ள கலிபோர்னியா பல்கலைகழகத்தின் சமுத்திரவியல் துறை இத்தகைய ஆராய்ச்சிகளுக்கு 8 கப்பல்களை வைத்திருக்கிறது. இந்து சமுத்திரம், பசுபிக் சமுத்திரம், அத்லாந்திக் சமுத்திரம் ஆகிய பெருங்கடல் ஆராய்ச்சிப் பணிகளுக்காக 'ஆர்கோ' என்ற கப்பல் அனுப்பப்பட்டது. கடந்த ஜனவரியுடன் இக்கப்பல் ஒரு லட்சம் மைல்களுக்கு மேல் பிரயாணம் செய்து ஆராய்ச்சிகளை நடாத்தியிருக்கிறது. இந்து சமுத்திர ஆராய்ச்சிப் பணிகளுக்கு வேண்டிய நிதியை அமெரிக்க கடற்படை ஆராய்ச்சிப் பிரிவினர் கொடுத்துள்ளனர். அமெரிக்கத் தேசிய விஞ்ஞான அறநிலையமும் பொருள் உதவியிருக்கிறது.

கடற்படுகையின் தன்மைகளையிட்டும் அவற்றின் செறிவுகளையிட்டும் ஐந்தரை மாதங்கள் ஆராய்ச்சிகள் நடைபெற்றன. பேராசிரியர் டாக்டர் சார்ள்ஸ் கொக்ஸ் 'ஆர்கோ' மின்சார, காந்த மாறுபாடுகளையிட்டு நடாத்திய ஆராய்ச்சிகளுக்கு தலைவராகக் கடமையாற்றினர். 'இலங்கையைச் சார்ந்த திரு. ரணசிங்க, திரு. பாலேந்திரன் ஆகிய இருவரும் இந்த விஞ்ஞான ஆராய்ச்சிப் பணியில் மாபெரும் உதவியினைச் செய்திருக்கின்றனர்'' என்று பேராசிரியர் கொக்ஸ் குறிப்பிட்டார்.

கடலுக்குக் கீழ் உள்ள பாறைகள், பூமியின் அயன மண்டலம் உருவாக்கும் மின் காந்த சக்தியின் ஊடுருவலால் அடையும் மாறுதல்களையும் விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர். வங்காள விரிகுடாவில் மிகப் பிரமாண்டமான அடையல் செறிந்திருப்பதாக விஞ்ஞானிகள் கண்டனர். இமாலய மலையிலிருந்தே இந்த அடையல் கங்கை நதியுடன் சேர்ந்து கடலில் வந்து படிந்துவிடுகிறது என்பதை அறிந்தனர். பிரமபுத்திரா ஆறும் போதுமான அளவு அடையலைக்கடலில் சேர்த்திருக்கிறது.

### மழையே மழையே வருவாயே

ஏங்கும் முகத்தைப் பார்ப்பாயே
தேங்கும் வரட்சி தீர்ப்பாயே
தாங்கி நம்மைக் காப்பாய் நீ
தரித்திரம் தீர்த்துப் புரப்பாய் நீ

★

உனது வரவால் நல் உயிர்களெல்லாம்
உவக்கும் உலகில் மகிழ்வோங்கும்
வளரும் வறுமை மறைந்திடவே
மழையே நீயே பொழிவாயே

★

பொழிவாய் மழையே கெதியாக
புரியும் தொழில்கள் விரிவாக
இழிவாம் வாழ்வு இனிமையுற
இன்றே பொழிவாய் மழையே நீ.

—கிரான்ஜீவன்—


### கொண்டாவன நாடு

இந்தியாவுடன் ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்கள் இணைந்து ஒரே நிலப்பிரதேசமாக இருந்திருக்கவேண்டும் என்ற நம்பிக்கைக்கு 'ஆக்ரோ' ஆராய்ச்சியின் பயனாகச் சில சான்றுகள் கிடைத்திருக்கின்றன. 10 முதல் 15 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இவை இணைந்து ''கொண்டாவன நாடு'' என 'வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்று கொள்ளப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[இன்று அகில உலகவிமானப்பயணத்தை மிகவிரைவாகவும், எளிதாகவும் சொகுசாகவும் ஆக்கிவிட்ட ''ஜெட்'' இயந்திரத்தைக் கண்டுபிடித்த ஃபிராங் விட்டிலைப்பற்றியகதை இது.]


## ஃபிராங்க் விட்டில்—2




விமான மோட்டிகளுக்கு, பயிற்சியளிக்கும் அதிகாரியாகப் பதவி உயர்வுபெற்ற விட்டில், ஹெண்டன் என்னுமிடத்தில் இன்னொரு அதிகாரியுடன் சேர்ந்து பல மயிர்க் கூச்செறியும் சாகஸச் செயல்களைச் செய்துகாட்டினர். பழைய 'மொடல்' விமானங்களையே ஓட்டிக் கொண்டிருந்தாலும் விட்டிலுக்கு எப்போதும் 'ஜெட்' என்ஜின் நினைவுதான்.




கனவு நனவாகவில்லையே என்ற ஏக்கம் ஒருபுறமும். திடீரென ஒரு நாள் இரு விமானப்படை நண்பர்கள் விட்டிலின் வீட்டுக்கு வந்து, 'ஜெட்' என்ஜின் சம்பந்தமான ஆராய்ச்சிக்குத் தேவையான பண முதலீடு செய்யத் தயாராயிருப்பதாகக் கூறவே, புதிய உத்வேகத்துடன் தீவிர ஆராய்ச்சியில் இறங்கினுன்.




பவர்-ஜெட் லிமிட்டெட் என்ற கம்பெனி ஒன்று நிறுவப்பட்டு, முதல் ஜெட் என்ஜின் 1937-ம் ஆண்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. கட்டுப்பாடில்லாமல் என்ஜின் பாய்ந்து கிளம்பியது. தீப்பிழம்புகள் வெளியேறின. தொழிலாளர்கள் பயந்து பறந்தோடினுர்கள். நல்லவேளையாக, விட்டில் தனது 'ஜெட்' என்ஜினைக் கட்டுப்படுத்தினுர்.



1940-ம் ஆண்டு, இரண்டாம் உலக யுத்தத்தின் போது, விமானப்படைத் தளபதிக்குத் தனது ஜெட் என்ஜினைக் காண்பித்தார் விட்டில். அவருக்குத் திருப்தி ஏற்பட்டுவிடவே, முதல் 'ஜெட்'என்ஜின் பரீட்சார்த்தமாக விமானமொன்றில் பொருத்தப்பட்டது.




'ஜெட்' என்ஜின் தொழிற்சாலையை எதிரிகள் எந்த நேரமும் தாக்கிச் சேதப்படுத்திவிடுவார்கள் என்றஞ்சி விட்டில், தொழிற்சாலை அலுவலகத்திலேயே தங்கி, இரவு பகலாக, கையில் துப்பாக்கியுடன் காவல்காத்து வந்தார்.

விமானப்படைத் தளபதி சர். ஹியூ டவ்டிங், ஜெட் தொழிற்சாலையைப் பார்வையிட வந்தார்.





ஜெட் என்ஜின் ஒன்றை இயக்கிக் காட்டியபோது, அது வந்த வேகத்தில் அதன் அருகில் ஆவலுடனும், அக்கறையுடனும் பார்த்துக்கொண்டிருந்த விமானப்படைத்தளபதியையும் ஒருபுறம் தள்ளி விட்டுக் காயப்படுத்தியது.

1941-ல் ஜெட் என்ஜின் பற்றிய தனது கனவைக் கட்டுரையாக வடித்து 13



ஆண்டுகளின் பின்னர்தான் ''குலொஸ்டர் விட்டில் ஈ 28'' என்ற முதல் ஜெட் விமானம் பறக்கவிடப்பட்டது. கனவு நனவான இந்த நாள் விட்டிலின் வாழ்க்கையிலேயே ஒரு பொன்னுள்.

ஆனல் வியாபார ரீதியாக 'ஜெட்' என்ஜின் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்த பல



வருடங்கள் கடந்தன. அதன் பின்தான் விட்டிலின் பெயர் உலகப்புகழ் பெற்றது. இப்போது 60 வயதை எட்டிப்பிடித்துவிட்ட ஏயர் கமோடர் சர். ஃபிராங்க் விட்டில், தான்கண்டுபிடித்த ஜெட் என்ஜின், ராட்சஸ விமானங்களில் பொருத்தப்பட்டு பறக்கவிடுவதைக் கண்டு மகிழும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறுர்.

# தீண்டாமையை ஒழித்து இந்துமதத்தை....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பங்கு கொள்ளமுடியும். அப்படிப் பங்கு கொள்வதன் மூலம், என் விடுதலைக்கு முயற்சி செய்வேன்; அவர்களையும் அவர்களுடைய பரிதாபகரமான நிலைமையிலிருந்து விடுதலை செய்வேன்.'' இது. காந்தியடிகளின் வாசகம். காணமுடியாத கடவுளிடத்தில் பக்தி செலுத்துகிறேமென்று சொல்லிக்கொண்டு அதே சமயத்தில், அந்தக் கடவுளிடமிருந்தே தோன்றிய மக்களிடத்தில் கொடுமையாக நடந்து கொள்வது முன்னுக்குப்பின் முரணை செயலாகும் காந்தியடிகள், தம்மை ஒரு வைதிக இந்து என்று சொல்லிக் கொள்வதிலேதான் பெருமை கொள்கிறுர் அப்படியிருந்தாலும், ஜாதிப் பிரிவினுல் ஏற்படுகிற அநேக கட்டுப்பாடுகள், தொந்தரவுகள் முதலியவைகளையும் தீண்டாமையாகிற சாபக்கேட்டையும், கோயில்களில் நடைபெறுகிற அக்கிரமங்களையும், கால்நடைகளுக்கும் மற்றப்பிராணி உலகத்திற்கும் இழைக்கப்படுகிற தீங்குகளையும் கண்டிக்கிறவர் அவரைப்போல வேறு யாரும் கிடையாது அவர் கூறுகிறுர்: ''நான் பூரண சீர்திருத்தவாதி. ஆனுல் அந்தச் சீர்திருத்தத்திலே எனக்கேற்பட்டுள்ள உற்சாகமானது இந்துமதத்தின் சாராம்சங்களை ஒதுக்கித்தள்ளிவிடுமாறு என்னைச் செய்யவில்லை.''

### சுயேச்சதிகாரத்தை எதிர்க்கக்காரணம்

இன்று அவர், சுதேச மன்னர்களின் சுயேச்சதிகாரத்தை ஏன்எதிர்க்கிருரென்ருல், அந்த மன்னர்களின் ஆட்சிக்குட்படுத்தப் பட்டிருக்கும் லட்சக்கணக்கான பிரஜைகள் மீது கொண்ட அன்புதான் காரணம். கொஞ்சம் தாராளமனப்பான்மையோடு விஷயங்களை நோக்குகிற யாரும், சுதேச சமஸ்தானங்களில் எல்லாம் ஒழுங்காக நடைபெறுகின்றனவென்று சொல்லமாட்டார். பிரிட்டிஷ் உரிமைகளின் பிரதிநிதியாகக் கல்கத்தாவிலிருந்து வெளியாகும் 'ஸ்டேட்ஸ் மன்' பத்திரிகை எழுதியிருக்கும் சில வாக்கியங்களை இங்கு எடுத்துக் காட்டுகிறேன்: ''சுதேச சமஸ்தானங்கள் பலவற்றுள்ளும், திடுக்கிட்டுப் போகும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னுல், அது தனிப்பட்டவர்களைக் குறை கூறுவதாகாது. மனிதசுபாவத்தின் குறைபாடுகள்தான் அது. அங்குநிலச்சுவான்தார்களாயிருக்கிறவர்கள், அவர்கள் நல்லவர்களாயிருந்தாலும் கெட்டவர்களாயிருந்தாலும் எவ்வித சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டவர்களல்ல; அவர்களுக்கு உயிர் கொடுக்கவும், உயிர் வாங்கவும் அதிகாரமிருக்கிறது. அவர்களுடைய பேராசைக்கும் கொடுமைக்கும் எவ்வித தடையும் கிடையாது. எந்த உடன்படிக்கைகள் இந்த அற்பக்கொடியர்களைப் பாதுகாத்து வருகின்றனவோ, அந்த உடன்படிக்கைகள் திருத்தியமைக்கப் படாவிட்டால், பாதுகாப்புக்குத் தகுதியில்லாதவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பது தனது கடமையென்று மேலரசாங்கம் (பிரிட்டிஷ் அரசாங்கம்) கருதிக்கொண்டிருக்குமானுல், என்றேனும் ஒருநாள், அசைவற்ற ஒரு பொருளை, எதிர்க்கமுடியாத தொரு சக்தி எதிர்த்து நிற்கும். அப்பொழுது ஏதேனுமொன்று தூள்தூளாகிப் போய்விடும்.'' மெதுவான வளர்ச்சிதான் எல்லாப் புரட்சிகளுக்கும் காரணம் காந்தியடிகள், சுதேசமன்னர்களிடம் தாம் கொண்ட ஒரு விசுவாசம் காரணமாக, அவர்களை விழித்துக் கொள்ளுமாறும், அவர்களுடைய விவகாரங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ளுமாறும் கூறுகிறுர். எனவே, சுதேசமன்னர்கள் தங்களுடைய சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி முறையை ஏற்படுத்திக் கொடுப்பதால் தான், தாங்கள் சேமமாயிருக்கமுடியும். தாங்கள் தப்பிப் பிழைக்கலாம்என்பதை அதிக காலதாமதம் ஏற்படுவதற்கு முன்னர் அறிந்து கொள்வார்களென்று நம்புகிறேன். ஏனென்ருல் பிரிட்டிஷ் அரசாங்கம்கூட, அதற்கு எவ்வளவோ பலம் இருந்தபோதிலும் மாகாணங்களில் இந்தப்பொறுப்பாட்சி முறையை ஏற்படுத்திக் கொடுக்கும்படியான அவசியத்துக் குட்பட்டிருக்கிறது. (தொடரும்)

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்தநாணயமுள்ள ஸ்தாபனம்
ராணி ஆபரண மாளிகை
224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையை எடுக்கிறோம்; படிக்கிறோம்: ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு வேறு அலுவலைக் கவனிக்கிறோம். ஏதோ சில செய்திகள் நம் சிந்தனையில் ஒட்டுகின்றன மற்றவை தொடர்பற்று விடுகின்றன.

கண்டியில் ஒரு கம்பனியில் வேலைபார்க்கும் திரு. இரா. கனகரத்தினம் இப்படியல்ல; சிந்தனையுடன் மட்டும் செய்தியை ஒட்டிவைக்கவில்லை. செய்திகளை ஆல்பத்திலேயே ஒட்டி வைத்து விடுகிறார் இவருக்கு இந்த விஷயத்தில் கைகொடுத்து உதவுபவர் இவரது மனைவி திருமதி பவளராணி.

# தமிழர் வரலாறு தயாரிக்கும் தம்பதிகள்

'இச் செய்திக்கோர்வையின் 10 பக்கங்களை ஒழுங்கு செய்ய சுமார் 3 மணித்தியாலங்களும் அதனை ஒட்டி முடிக்க 4 மணித்தியாலங்களும் ஒரு தொகுப்புநூலை உருவாக்க ரூபா 35-ம் செலவாகின்றன. தன் அன்றுட வாழ்வில் நான்குமணித்தியாலங்களை இப்பணிக்குச் செலவிடும் என் மனைவிக்கு இந்த முயற்சியில் பெரும்பங்குண்டு.'.

தமது வரலாற்றுத் தயாரிப்புப் பற்றி இப்படிக் கூறினார் திரு. இரா கனகரத்தினம்.

அவர் சேகரித்து வைத்திருந்த செய்திக்கோர்வையை மெதுவாகப் புரட்டிக் கொண்டே இதெல்லாம் எதற்காகச் சேகரித்து வைக்கிறீர்கள் என்றேன்.

தான் அணிந்திருந்த மூக்குக்கண்ணாடியை இடது கையால் ஒருமுறை உயர்த்திக் கொண்டே 'திருக்கோணேஸ்வரம், பாடல்பெற்ற தமிழர் பெரும்பதி என எதிர்காலச் சந்ததியினரிடம் கூறிப் பாருங்கள். விழுந்து விழுந்து சிரிக்கப் போகிறார்கள்!' என்றவர் சிறிதுநேர ஓய்வுக்குப்பின் 'தொடர்பான சரித்திர வரலாறு அற்ற இந்த ஈழத் தமிழ் மக்களின் இழி நிலையை ஒழித்து 1955-ம் ஆண்டின்பின் இலங்கை அரசியலில் ஏற்பட்ட தாக்கத்தைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள புதிய சகாப்தத்தை, எதிர்கால சரித்திர ஆசிரியர்கள் மறைத்தும், திரித்தும் எழுத இடங் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தினால் உருவாகியதுதான் இத் தொகுப்பு நூல்கள். ஈழத்தமிழர் சுதந்திரப் போராட்டமென்பது அரசியல் மட்டும் உள்ளடங்கவில்லை. பொருளாதார, சமய, கலை, கலாச்சார குடியுரிமைச் சுதந்திரங்களையும், தாழ்த்தப்பட்டோர் என்பவரது விடுதலைக்கான போராட்டங்களையும் உள்ளடக்கியதாகும், தொடர்பாகப் பேசியதால் ஏற்பட்ட தாக்கத்தால் பெரியதொரு மூச்சை விட்டார் திரு. கனகரத்தினம்.

இளமை வயது (36), புஷ் ஷேர்ட், நீலநிற லோங்ஸ், இதனுள் இருந்து தாய்மொழி (தமிழ்மொழி) ஆர்வம் இப்படி வேலை செய்கிறதா? என்னால் நம்பமுடியவில்லை.

தாய்மொழி மறக்கும் புதிய நாகரீகத்திலிருந்து தப்பிச்சென்று கொண்டிருக்கும் கனகரத்தினம் இந்தத்தமிழினத்தொண்டுக்காக எத்தனையோ பத்திரிகைக் காரியாலயங்களுக்குக் களைக்கக் களைக்கச் சென்று கொண்டிருக்கிறார். தமது தொண்டிற்காக எங்கள் காரியாலயத்திற்கும் சென்ற வாரம் படியேறி வந்தபோது பேச்சுக்கொடுத்தேன். அப்போது வெளியானவைதான் இவை.

தமிழ் ஊறும் குரும்பசிட்டி இவரிடத்தே இந்த ஆர்வத்தை ஊட்டி இப்படி அலையவைத்திருக்கிறது. இல்லாவிட்டால் கண்டியில் பெரஹறாவைப் பார்த்துவிட்டுப் பேசாமல் இருந்திருப்பாரே! கண்டியில் தாம் வேலைசெய்யும் ஸ்தாபனத்தின் பெருமையை அவர் வாய்மலரச் சொன்னது அவரது நன்றி உணர்வை வெளிப்படுத்தியது.

சுமார் 15வருடகாலமாக, தமிழர் வரலாறுபற்றி பத்திரிகைகளில் வெளிவரும் சம்பந்தப்பட்ட செய்திகளையெல்லாம் கத்தரித்து எடுத்து ஒட்டிச் சேகரித்து வைத்து அதனைப் பிறர் இலவசமாகவே படிப்பதற்கு வகை செய்துவரும் திரு. கனகரத்தினம் இப்பொழுது தாம் சேர்த்து வைத்திருக்கும் நூறு தொகுதிகளுடன் மேலும் சேர்ப்பதில் முயற்சியைக் கூட்டியிருக்கிறார்.

தமிழன், வரலாறு தயாரிக்க சொந்த உழைப்பின் பணத்தைச் செலவிட்டு நேரக்கணக்குப் பாராமல் தியாகம் செய்துவரும் திரு-கனகரத்தினத்திடம் தமிழர் வாழ்வு சிறந்து அவர்களது வரலாறு மதிப்புப் பெற என்ன யோசனை கூறுவீர்கள் என்று கேட்டேன்.

பெண்மை கலந்த நாணத்துடன் சிரித்தார் சொல்லுங்கள் என்றேன்.

'நாற்பது மேடையில் பேசுவதைவிட நான்குமணி நேரம் தமிழர் ஒவ்வொருவரும் தமிழுக்காக மனப்பூர்வமாக ஒத்துழைத்தால் தமிழர் வரலாறு சிறக்கும் என்றார்.

உங்களது விருப்பம் 'தமிழர் வரலாறு முறையாகத் தொகுக்கப்பட வேண்டும்' உங்களது தமிழர் வரலாறு தொகுப்புகளை என்ன செய்யஉத்தேசம்' என்றேன்.

முறையாகத் தொகுத்தபின் இலங்கையிலுள்ள நல்லதொரு நூல் நிலையத்திற்கு அன்பளிப்பாக வழங்க உத்தேசம் என்றார் திரு. கனகரத்தினம்.

—கணேஷ்.

## பத்திரிகை முரசம்

'இதனால் சகலமான ஜனங்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால்......' என்று பறையறைவிக்கும் வழக்கம் எந்த நாட்டில் எப்போ ஏற்பட்டதோ, எனக்குத் தெரியாது. சரித்திர நிபுணர்களைக் கேட்டால் தெரியலாம்; ஆனால் நம் நாட்டில் இது வெகு காலமாய் இருந்துவருவதாகவே தோன்றுகிறது. சின்ன வயதில் பாட்டி சொன்ன பல கதைகளில் இந்தத் தமுக்குக்காரன் வருவான். இந்தப் பறையறைவிக்கும் வழக்கம் என்றைக்குத் தோன்றியதோ அன்றைக்கே பத்திரிகைத் தொழிலுக்கு ஒருவித அஸ்திவாரம் போட்டாயிற்று என்று சொல்லலாம்.

அச்சு, தபால், தந்தி, ரெயில், விமானம், போட்டோ, ப்ளாக் செய்தல், கல்வி, அரசியல் சூழ்நிலை எல்லாம் சேர்ந்து, பத்திரிகைத் தொழிலை இன்று வெகுதூரம் வளர்த்திருக்கின்றன. வளர்த்தனவோ, அமுக்கினவோ; வெகுதூரம் வீங்கச் செய்துவிட்டன. பலவிதமான பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. பல தரமான நிலைகளில் நடக்கின்றன. செய்திப் பத்திரிகைகள் இலக்கியப் பத்திரிகைகள், பொழுதுபோக்கான பத்திரிகைகள், தொழிற் பத்திரிகைகள். அபிப்பிராய விமர்சனப் பத்திரிகைகள், விளம்பரப் பத்திரிகைகள், பிரசார இயக்கப் பத்திரிகைகள், 'ப்ளாக் மெயில்' பத்திரிகைகள் இப்படி எல்லாம் எத்தனை எத்தனையோ ரகமான-தரமான பத்திரிகைகள் நடக்கின்றன. இப்படிப்பட்ட எண்ணற்ற வகையான பத்திரிகைகளில் எது நல்லது, எது கெட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்? விஞ்ஞானத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அதில்கூட சாதாரண மக்களுக்கெல்லாம் புரியக்கூடிய அம்சங்களைமட்டுமே விவரித்து விஞ்ஞானப் புதுமைகளைச் சொல்லும் அழகான பத்திரிகைகள் முதல், நிபுணர்களுக்கே புரியும் நுட்பமான சிக்கலான செய்திகளைத் தாங்கிய திட்டமான பத்திரிகைகள்வரையில் பல படியில் பல ரகங்கள் இருக்கின்றன.

பத்திரிகைத் தொழில் முறையிலும் நிலையிலுமோ பிரமாதமான - பிரமாண்டமான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. ஒரு புறம், குடிசைத்தொழில் மாதிரிப் பல பத்திரிகைகள் நடக்கின்றன மறுபுறம் ராட்சச ஆலைத்தொழில்மாதிரிப் பல பத்திரிகைகள் நடக்கின்றன. குடிசைத் தொழில் ரகப் பத்திரிகைகளில் அசோகாபாக்கையும் நஞ்சன்கூடு பல்பொடியையும் போல் பேரளவில் வளர்ந்துவிட்டவைகளும் உண்டு பெருந்தொழிலாய்த் தொடங்கி நடக்கும் பத்திரிகைகளில், உள்ளுக்குள்ளே உளுத்துப்போய் ஆட்டம் எடுத்தவையும் உண்டு.

—''சரஸ்வதி''யில் தி. ஜ. ர

## போதனைகள் . . .

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

பது சத்தியாக்கிரகத்தின் இரகசியமாகும். இது புதியதொரு கண்டுபிடிப்போ அல்லது புதிய நுட்பமோவல்ல, ஆனால் பழைய தர்மசாஸ்திர போதனைகளை விளங்கிக்கொள்வதும் அவற்றின் உண்மையில்ஸ்திரமான நம்பிக்கை கொள்ளுதலுமாகும். கடவுள் நம்பிக்கையற்றவருக்கும், கண்ணுக்குத் தெரிகின்ற இந்த உலகிலே காணப்படுபவைகளோடு திருப்தியடைந்துள்ள ஒருவருக்கும் சத்தியாக்கிரகம் உரியதல்ல. அழகிய ஊற்றுப் பேனா ஒன்று இருக்கலாம். ஆனால் அதனுள் மையில்லாவிடில் அல்லது நீரினால் அது நிரப்பப்பட்டிருப்பின் எழுதாது; எழுதவும் பயன்படாது. எனவே நாம் காந்தி நூற்றாண்டைக் கொண்டாடும் பொழுது அவரது போதனைகளையும் அவர் செயல்களின் படிப்பினைகளையும் நினைவு கூர்ந்தறிந்து அவைகளைச் சாதனைகளாக்க வேண்டுமேயன்றி அம்மகாத்மாவை பழையதொரு குழப்பமான மார்க்கத்தை மாற்றியமைக்கச் சாதாரணமானதொரு கருவியை (அஹிம்சையை) உருவாக்கியவர் எனக்கருதக் கூடாது. அவர் ஒன்றையும் புதிதாக உருவாக்கவில்லை அவர் இறைவனின் பிரதிநிதி ஆதலால்தான் மகாத்மா என அழைக்கப்படுகிறார்.


பேர்மிட்
தேவை இல்லை !

ஒரு குறிப்பிட்டளவு

டேவிட்பிரவுண்

770 ரக ட்ராக்டர்கள்

ரூ 18,750க்கு மட்டும் கிடைக்கும்.

அத்தோடு

டேவிட்பிரவுண்

880 ரக ட்ராக்டர்கள்

ரூ. 20 500க்கு உண்டு.

BROWNS GROUP B G ESTABLISHED 1875

இந்த மகத்தான சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள். எழுதுங்கள், போன் செய்யுங்கள் அல்லது அருகாமையிலுள்ள டேவிட்பிரவுண் வியாபாரியைச்சந்தியுங்கள் அல்லது எங்களை நேரடியாகப் பாருங்கள்.

ரோலண்ட்ஸ்(ட்ராக்டர்ஸ்)லிமிட்டெட்

HOUSE OF R ROWLANDS

103, டரட் ரோட், கொழும்பு 7 :: போன்: 25871-8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மைப் பேற்றுக்காக ஏங்கி ஏங்கி

விழிகளைக் குளமாக்காதீர். இதோ.........

# புத்திர தோஷத்திற்கு நிவர்த்தியுண்டு

பாரசிக மன்னர் ஷாவுக்குப்பட்டத்துக்கு வரக்கூடிய வாரிசு, அதாவது ஆண்மகன் ஒன்றைப்பெற்றுக் கொடுக்கத் தவறியதால் தமது முன்னைய அழகிய மனைவி சுரையா கைவிடப்பட்டாள் சுரையாவுக்குப்பின்னர் அவர் மணந்து கொண்ட அரசி பாரா அந்தக் குறையைத் தீர்த்து, இன்று பாரா பட்டத்து ராணியாகத் திகழ்கிறார்.

காதலித்துக் கைப்பிடித்த கட்டழகி சுரையாவைவிட்டுப்பிரிவதற்கு மனமில்லாமல் மன்னர் ஷா உலகின்பல பாகங்களிலுமுள்ள படுத்துவவிற்பன்னர்களிடம்மனைவியை அழைத்துச் சென்று பரிசோதனைகள் பலநடத்தியும் தாய்மைப் பேறுக்கு வழியில்லையென்று அவர்கள் அனைவரும் கைவிரித்ததன் பேறு கிடைக்காத பெண்கள் விழிகளைக் குளமாக்கி வேதனைப்பட்டுக்கொண்டிருக்காமல், வைத்தியத்துறையின் உதவியைமட்டும்நாடுவதுடன் நின்றுவிடாமல் தெய்வநம்பிக்கையையும் கடைப்பிடிக்கவேண்டியது அத்தியாவசியம்.

நீண்டகாலமாக மக்கட்பேறு இல்லாது மனம் வெதும்பிக் கொண்டிருக்கும் இல்லத்தரசிகள் பலர் செவ்வாய் விரதத்தை முறையாக அனுட்டித்ததன் மூலம் பிள்ளைப்பேறு அடைந்து பெருவாழ்வு வாழ்ந்துகொண்டிருப்பதை எனது 42 வருட சோதிடத்துறை அனுபவத்தில் கண்டிருக்கிறேன்.

## சோதிடம் கூறுவதென்ன?

மக்கட்பேறு இல்லாமைக்

சோதிடக் கலாநிதி

— திருமலை க. வேலுப்பிள்ளை —

பின்பு, சிம்மாசனத்து வாரிசு வேண்டுமென்ற பாரசீகக் கோட்பாட்டை மீறமுடியாத நிலையில் பிரிவு ஒன்றுதான் இதற்கான வழி என்ற நிர்ப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டே பாராவை வாழ்க்கைத் துணைவியாக்கவேண்டிய இக்கட்டான நிலையில் தள்ளப்பட்டார்.

அழகிசுரையாவின் அவலநிலையில், தாய்மைப்பேறு இல்லாத காரணத்தினல் கரும்பாக இனிக்கவேண்டிய இல்லறவாழ்க்கையையே வேம்பாக்கி வேதனைத் தீயில் தினமும் வெந்து சாம்பலாகிக்கொண்டிருக்கிறார்கள், பல குடும்பத்தலைவிகள். விஞ்ஞானம் துணை நிற்காத பல கட்டங்களில் நமது சமயத்துடன் சம்பந்தப்பட்டவிரத முறைகள் கைகொடுத்திருப்பதை நாம் கதைகளாகப் படித்திருக்கிறோம்; அனுபவ ரீதியாகவும் பார்த்திருக்கிறோம். பெண்மைக்கே பெருமையைத் தேடித்தருவது தாய்மைப் பேருகும். இப்குச் சோதிடத்துறையில் பல காரணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் சில இறுதிவரை புத்திர சந்தானம் இல்லையென அறுதியிட்டுக் கூறினலும் கூட, பெரும்பாலானவைதோஷப் பார்வையினலேயே ஏற்படுகின்றன என்று வலியுறுத்தப்படுகின்றது. எனவே இவ்வித சந்தர்ப்பங்களில் தோஷ நிவர்த்திக்கான வழிமுறைகளை மேற்கொள்ளின் விமோசனம் உண்டு என்பது மறுக்க முடியாததாகின்றது. தகுந்த விரதம் அனுஷ்டிப்பதன் மூலம் தோஷ சாந்தி ஏற்பட முடியும்.

உதாரணமாக:

(அ) ஐந்தாமிடத்தைச் சுபர்பாராதிருக்க அதற்குடையோனுடனவது தனியாவது அதில் ராகுவிருக்க நாகதோஷத்தால் புத்திரரில்லை. அதற்கு உடனே நாகப்பிரதிஷ்டை செய்தால் புத்திரருண்டாவர்.

(ஆ) கேத்திர கோணத்தில் சுபக்கிரகங்களின் பார்வையில்லாதிருந்தால் மைந்தரில்லை. ஆனுல் செபம், ஓமம் இவைகளால் புத்திரருண்டாவர்.

(இ) ஐந்தாம் வீட்டுக்குடையோன் ஆறுக்குடையவனேடு சேர்ந்து நல்லோர் பார்வை பெறுதிருந்தால் சத்துரு சாபத்தால் மகவில்லையாம்.

(ஈ) ஐந்தில் ஆகூியயாகஐந்தாம் வீட்டிலிருந்து சுபர் பாராமல் பாவிகள் பார்க்கத் தெய்வ சாபத்தால் கர்மமேலிட்டு ஓமகர்மஞ் செய்ய பிள்ளையில்லையாம்.

தோஷங்களின் காரணமாக மக்கட்பேறு இல்லாமற் போவதற்கு மேற்குறித்த வண்ணமும், மேலும் பல விளக்கங்களும் சோதிடத்துறையில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வித தோஷங்கள் நிவர்த்தியாகி, மக்கட்பேறு அடைவதற்குத் தகுந்த விரதங்கள் மேற்கொள்ளப்பட்டால் தகுந்த பலனுண்டு என்பது எனது அனுபவவாயிலாகக் கண்ட உண்மையாகும். அவ்விரத முறைகளில் ஒன்றுன - பல பெண்கள் பயனடைந்துள்ள செவ்வாய் விரதத்தின் விதிமுறைகளைக் கீழே தருகிறேன்.

## விரதத்தின் விதிமுறைகள்

வீட்டிலிருக்கும் பூஜை அறையிலோ அல்லது தனித்தமான பிரத்தியேக அறையிலோ விரதம் ஆரம்பிக்கும் முதல் செவ்வாய் வாரத்தில் சுத்தம் செய்யப்பட்ட புதிய மட்பாண்டத்தை ஒரு உறியில் தொங்கவிடவேண்டும். இந்த உறி அறுந்து விழாதிருக்கவேண்டி உறியைக் கம்பியுடன் இணைத்துத் தொங்கவிடுவது விரும்பத் தக்கது. அத்துடன் அவ்வறையில் அம்மனின் உருவப்படமொன்றும் வைக்கப்படவேண்டும். (பிற மதத்தவர்கள் தங்கள் இஷ்டதெய்வத்தின் படத்தை வைக்கலாம்) விரதம் ஆரம்பிக்கும் பெண் அன்று அதிகாலையில் நீராடிசலவைசெய்யப்பட்ட சுத்தமான ஆடை அணிந்து அம்மனை அல்லது தங்கள் இஷ்ட தெய்வத்தை நினைவில் நிறுத்தி, பானையின் கீழ் நிறைவிளக்கேற்றி, பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் படத்துக்குத் தீபதூபங் காட்டி, கையில் ஒரு பிடி பச்சையரிசி எடுத்து, பானையை மும்முறை வலம் வந்து அதன்பின் பிடியரிசியைப்பானைக்குள்போடவும். அடுத்து எச்சம் விழாதபடி மட்பாண்டத்தின் வாயைச் சுத்தமான துணியால் மூடிக்கட்டிவிடவும். அன்று உபவாசமிருந்து மாலையில் சர்க்கரை அமுது படைத்து விளக்கேற்றிச் சாப்பிடவும். இதைத் தொடர்ந்து 21 செவ்வாய் வாரம் வரை இம்முறையை அனுஷ்டித்துவரவும். இடையில் ஏதாவதொரு செவ்வாய் வாரத்தில்மாதவிடாய் ஏற்பட்டால் அன்று நீராடி உபவாசம் மேற்கொள்ளலாமே தவிர பிடியரிசியை மட்பாண்டத்துக்குள் போடக்கூடாது. அவ்வாரத்துக்கான பிடியரிசியை அடுத்த செவ்வாய் வாரத்தில் இரண்டு பிடியரிசியாகச் சேர்த்து மட்பாண்டத்துக்குள் போடலாம்.

22-வது செவ்வாய் வாரத்தில் அரிசி அடங்கிய அந்த மட்பாண்டத்தை உறியிலிருந்து எடுத்து, அம்மன் கோவிலிலோ அல்லது பிற மதத்தவர்கள் தங்கள்இஷ்ட தெய்வத்தின் ஆலயத்திலோ பொங்கவைத்து அதில் கிடைக்கும் பிரசாதத்தை வீட்டுக்குக் கொண்டுவந்து 21 உருண்டைகளாக்கி, 21 மஞ்சள் திரிகள்கொளுத்தி, விரதமனுஷ்டிக்கும் பெண் உட்கார்ந்தநிலையில், தாய்

(15-ம் பக்கம் பார்க்க)

## நாவலர் . . .

[4ம் பக்கத் தொடர்ச்சி]

வேலைபார்ப்பது சரியில்லையென்பது ஒன்று. மற்றது, பாதிரிமார் உபதேசிமார், 'கற்றிகிஸ்ற்', 'பைபிள் ஆமன்' கிறிஸ்த ஆசிரியர், சமயம்மாறிக் கிறிஸ்தவராக வந்தோர் ஒருங்கு சேர்ந்து சைவர்களைக் கிறிஸ்தவராக்கும் முயற்சிகளில் ஈடுபட்டும், சைவத்தைத் தூஷித்தும் வரும்பொழுது அதனைத் தடுக்க யாரும் முன்வந்து உழைக்காதிருக்க தான் பண்டிதர் தொழிலும் ஆசிரியர் தொழிலும் பார்த்துக் சொண்டுமிருப்பது உகந்ததல்லவென்று கருதியது.

கலாநிதி ஒரு தீர்க்கதரிசி. அவர் நாவலரைப்பார்த்துச் சொன்னர், ''தலைக்கு மேலே கைகாட்டும் சைவருக்காக நீர் கத்திக்கத்தி மண்டைவெடித்துக் கடைசியிலே இறப்பீர்'' என்று. அப்படியே நடந்ததென்று பெருமான் தமது கடைசிப் பிரசங்கத்தில் சொன்னர்.

மேற்குறிப்பிட்ட இரு பெரும் தியாகங்கள் பெருமானின் பெருந்துறவென லாம். துறவைமேற்கொண்ட அவர் சைவத்துக்காகவும் தமிழுக்காகவும் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார்.

(தொடரும்)


முதலாவது ஆண்டு நிறைவு விழா

கடந்த ஓர் ஆண்டு காலமாக எமக்கு நல்லாதரவு தந்துதவிய ரஸிகப்பெருமக்களுக்கும் மற்றும் அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். வருங் காலத்திலும் உங்களின் நல்லாதரவை தந்துதவும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.
அனேக ரஸிகப் பெருமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் திரையிடுகிறோம்.

ஸ்ரீ காலிங்கன் தியேட்டர்
இணுவில்
சிவாஜி— கே. ஆர். விஜயா
நடித்த
கந்தன் கருணை
(ஈஸ்ட்மென்ட் கலர்)

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி—நிர்மலா
சௌகார் ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்


91வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனேகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி
நடித்த
விஜயா சுரேஷ் கம்பைன்ஸ்



குழந்தைக்காக
கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!
மாதர்களுக்கு அரைக்கட்டணம்.

யாழ் - வின்ஸர்
தினசரி — 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர். - ★ ஜெயலலிதா
நம்பியார், நாகேஷ், ஷீலாதேவி, அசோகன்
நடிக்கும்
புதியபூமி

இப்பொழுதுநடைபெறுகிறது
வெலிங்டன்
[யாழ். நகர்]
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (கொழும்பு)



ரவிச்சந்திரன் ★ ராஜ்ஸ்ரீ
நாகேஷ்★அசோகன்★ஸ்ரீரஞ்சனி
வசந்தா ★ மனேகர்
நடித்த
ஐரிஸ் மூவிஸாரின்
நீயும் நானும்

இன்று மட்டும்
வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி6-30, இரவு10-00
பிரிபோயா, போயா 2-30மணி
N.T.ராமராவ் - அஞ்சலிதேவி
நடித்த
பால நாகம்மா

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
பிரிபோயா, போயா 2-30
சிவாஜி - கண்ணம்பா - கிரிஜா
நடித்த
மனேகரா
(புதிய கொப்பி)

REGAL JAFFNA
Daily 4-45, 7-00, 9-45
Poya, Prepoya 4 shows
Fredrick Stafford,
Jean Seberg
in
THE LOOTERS

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7, & 9-45p.m
Poya, Prepoya 4 Shows
With the greatest constellation of stars ever eight assembled including Yul Brynner, Trevor Hawart, Omar Sharis
in
Ian Steming's
THE POPPY
IS ALSO A FLOWER
(Eastman color)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சோதிடம் உண்மையா, பொய்யா?

# முற்பிறவி பற்றிய சந்தேகங்கள்

சோதிடத்தில் முழு நம்பிக்கையுள்ளவர்கள், முற்றிலும் நம்பிக்கை இல்லாதவர்கள் என்ற இருசாராரையும் விட, சோதிடத்தை நம்பலாமா விடலாமா என்று இருதலைக்கொள்ளி யெறும்பு போலத்தத்தளிக்கும் மூன்றாவது பிரிவினரும் இருக்கிறார்கள். இவர்கள் பரிதாபத்துக் குரியவர்களானாலும் உண்மையில் இவர்கள்தான் விவேகிகள். இதுதான் சரி, இதுதான் பிழை என்று கண்ணை மூடிக்கொண்டு எதையும் தீர்மானித்துவிடாமல், தங்கள் சொந்த அனுபவத்தாலும் பிறருடைய அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் எடைபோட்டு சரி பிழை பார்ப்பதில் இவர்கள் முற்படுவார்கள். எவ்வித முடிவுக்கும் வராமலேயே அவர்கள் களைத்துப்போய் விடுவதுமுண்டு. ஏனென்றால், சோதிடம் உண்மையா, பொய்யா என்று நிரூபிப்பது இலகுவான காரியமல்ல.

இவர்களுடைய மனப்பாங்கு எப்படிப்பட்டதென்பதை சிறிது ஆராய்வோம்.

உலகத்திலேஎத்தனை வேற்றுமைப்பட்ட ஜன்மங்கள் இருக்கின்றன. ஒருவன் பணக்காரன். மற்றவன்தரித்திரன். ஒருவன் அறிவாளி. மற்றவன் முட்டாள். அழகன் - குருபி, பலசாலி - நோஞ்சான், கண்ணியவான்-கபடன், தர்மவான்-லோபி, கலைஞன் - மிலேச்சன், இப்படி எத்தனையோ மாறுபட்ட பிறவிகள். ஒருவன் பிறப்பில் தரித்திரனாயிருந்து பின் செல்வந்தனாகிறான். மற்றவன் பிறப்பில் செல்வந்தனாயிருந்து பின் தரித்திரனாகிறான். படித்துப் பட்டம் பெற்றவன் தெருவில் அலைகிறான். கையொப்பம் போடத்தெரியாதவன் குபேர பதவியிலிருக்கிறான். அழகனுக்கு குரூபியும், கலைஞனுக்கு மிலேச்சியும், சாந்தமுள்ளவனுக்கு மூர்க்கம் பிடித்தவளும், நேர்மையுள்ளவனுக்கு நேர்மையற்றவளும், இதற்கு நேர்மாறாகவும் தம்பதிகள் சேருகிறார்கள். கண்ணியமும் நேர்மையும் கடமைப் பொறுப்பும் கருணையுமுள்ளவன் கஷ்டப்படுகிறான். இதற்கு மாறான குணங்களுடையவன் மஹாராஜனாயிருக்கிறான்.

## வி. என். பி.

இவ்விதமான வேற்றுமைகள் எதனால் ஏற்பட்டன? ஒருவன்முற்பிறப்பில்செய்துகொண்ட பாவ புண்ணியங்களினால்தான் என்று சிலர் கூறுகிறார்கள். முற்பிறப்பு என்பதை சிலர் நம்புவதில்லை. அது உண்டா இல்லையா என்பது கரைகாண முடியாத இன்னொரு மர்மம். சரி, முற்பிறப்பு இருக்கிறது தான் என்று வைத்துக் கொள்வோம். முற்பிறப்பில் செய்த பாவத்துக்குத் தான் இப்பிறப்பில் கடவுள் என்னைத் தண்டிக்கிறார் என்று ஒருவனுக்கு எப்படித் தெரியும்? முற்பிறப்பு நினைவு இருந்தால் அல்லவா தெரிய முடியும்? சாகும்போதே அந்தப் பிறப்பின் ஞாபகங்கள் அடியோடுஅற்றுப்போகின்றன. பின் எவ்வாறுதான் ஒருவன் அதை அறிந்துகொள்வது. 'சோதிடர் சொல்வார், அவர் என்ன கடவுளா? பெரும் சித்தஞானியாகிய பட்டினத்தாரே 'முற்பிறப்பில்செய்த தீவினையோ வந்து மூண்டதுவே!' என்று ஒன்றும் தெரியாமல் புலம்புகிறார்.

பூனை பால் குடிக்கும்போது ஒன்று 'சுள்' என்று போட்டால்தான் அது இனிமேல் பாற்சட்டியில் வாய் வைக்காது பால்குடித்தபடியால் தான் அடிவிழுந்தது என்று அதற்குத்தெரிந்து விடும். பூனை பாலைக் குடித்துவிட்டு வெளியே வந்து படுத்திருக்கும்போது அதைப்போட்டு அடிஅடியென்று அடித்தால் அதற்குத் தெரியுமா? தண்டனை என்ன தவறுக்காக வழங்கப்படுகிறதென்று தெரிந்தால்தானே தண்டனை பெறுபவன் மறுபடியும் அந்தத்தவறை இழைக்கமாட்டான். முற்பிறப்பில்என்ன தவறு செய்தோம் என்பது தெரியாமலிருக்கும்போது அதற்காக இப்பிறப்பில் எம்மைத் தண்டிப்பது கடவுளுக்கு அடுக்குமா? தவறு என்னவென்று தெரியாத நிலையில் மீண்டும் மீண்டும் ஏழேழு பிறவிகளிலும் அத்தவறைச் செய்வோமல்லவா? ஒருவேளை தவறு இன்னதுதான் என்று சொல்வதற்குத்தானே கடவுள் சோதிடர்களைப் படைத்தார்? அப்படி எண்ணுவது முட்டாள்தனமல்லவா?

இதுபோலத்தான் நல்வினைக்கும். முற்பிறப்பில் என்ன புண்ணியம் செய்ததற்காக இப்பிறப்பில் கடவுள் நமக்குக்கருணை காட்டுகிறார் என்று தெரிந்தாலல்லவா மீண்டும் அந்த நல்வினையைப் புரிந்து ஈடேற்றம்பெற ஏதுவாகும்?

நல்வினை என்றால் தெரியாதா? பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்து தானதர்மம் செய்து ஒழுக்க சீலர்களாய் விளங்குவதுதான் நல்வினை, இதற்கு விரோதமானது தீவினை. இது தெரியாதா? என்று சிலர் கேட்கலாம். தெரியும், ஆறறிவுபடைத்த மனிதருக்கு தெரியும். முற்பிறப்பில் புல்லாயோ பூண்டாயோ பூனையாயோ பிறந்திருந்தால் எப்படித் தெரியப்போகிறது?

சரி, அப்படி நல்வினை, தீவினை பயன்களின்படிக்கு காரியங்கள் நடக்குமாயிருந்தால் சோதிடம் இதற்குள் ஏன் குறுக்கிடவேண்டும்? நடப்பது நடக்கும்தானே? குறிப்பு ஏன் எழுதவேண்டும். நாள் நட்சத்திரம் ஏன் பார்க்கவேண்டும், பஞ்சாங்கம் எதற்காக? சோதிடம் பார்த்துவிட்டால் நடக்கவேண்டியது நடவாமற்போய்விடுமா? வாழ்க்கையில் எத்தனையோ தடவைகளில் நாம் எதிர்பார்ப்பது நடப்பதில்லை, எதிர்பாராதது நடந்துவிடுகிறது. சோதிடரிடம் போகாமல் நடப்பது நடக்கட்டும் என்று பேசாமல் இருந்துவிடலாமல்லவா?

பலர் புரட்டாதி சனி விரதம் பிடிக்கிறார்கள். இது சனி பகவானை வழிபடுவதாம். எள் எண்ணெய் எரிக்கிறார்கள். அர்ச்சனை செய்கிறார்கள். இப்படிச்செய்தால் சனிபகவானின் கிருபையை பெறலாமாம். சனியன் கோளாறு செய்கிறார். அவரை வழிபட்டுத் திருப்திப்படுத்தவேண்டும் என்று சொல்லித்தந்தவர் சோதிடர். சோதிடத்தில் நம்பிக்கையில்லாதவர்களை சனியன் சற்றுக்கூடுதலாகத்துன்புறுத்துமா?- எள்எண்ணெய் எரிப்பவர்களுக்கு சற்று சலுகை காட்டுமா?

சனியும் பூமியைப்போல சூரியனைச்சுற்றிவந்துகொண்டிருக்கும் ஒரு கிரகம். கோடானுகோடி மைல்களுக்கப்பால் இருக்கிறது. பூமியில் வசிக்கின்ற எம்மை அது எவ்வாறு தாக்கமுடியும். கோயில்களில் சனிக்கு சிலை வைத்திருக்கிறார்கள். சனி கிரகத்துக்கு அதிபதியின் சிலை. பூமியும் ஒரு கிரகம். பூமிக்கு அதிபதி யார்? அவருடைய சிலை எப்படிப்பட்டதாயிருக்கும்?

இந்த விதமாகத்தானே சோதிடத்தில் அரைகுறை நம்பிக்கையுள்ளவர்கள் மூளையைக் குழப்பியடித்துக் கொண்டே இருப்பார்கள். இன்னொரு வழியிலும் அவர்களுடைய சிந்தனை ஓடும்.

சிலவேளைகளில் சோதிடம் உண்மையாகவே தோன்றுகிறது. ஏழு செவ்வாய்க்காரரின் கல்யாணங்களில் சொத்தைவிழுவதைக் காண்கிறோம் ஏழரைச்சனி பிடித்தவன் அலைவதைப்பார்க்கிறோம். வெள்ளி திசைக்காரன் சடுதியாகப் பணத்தில் மிதப்பதைக் காண்கிறோம் ஆனால் எல்லோருக்கும் ஏழரைச் சனி துன்பம் செய்வதில்லையே. எல்லோருக்கும் வெள்ளிதிசை பணத்தைக் கொடுப்பதில்லையே! இதென்ன கூத்து? ஒருவேளை சோதிடர் ஏமாற்றுப்பேர்வழியோ? அல்லது ஜாதகன் பிறந்த நேரம் சரியாகக் குறிக்கப்படவில்லையோ?

1962இலோ எப்பவோ எட்டுக் கிரகச் சேர்க்கை நடந்தது, உலகத்துக்குப் பதினொரு வருடங்களுக்குக் கெடுதி என்று சோதிடர்கள் சொன்னார்களே! அது உண்மைதானா? நேரு, கென்னடி, ... ... போன்ற தலைவர்கள் மறைந்ததும், சுகர்ணோ போன்றவர்கள் பதவி இழந்ததும், ஆபிரிக்கத் தலைவர்கள் தாறுமாறாக கொலை செய்யப்படுவதும், இஸ்ரேல் யுத்தம் தொடங்கியதும், கொலை முதலிய குற்றங்கள் அதிகரிப்பதும், பல நாடுகளில் பஞ்சம் ஏற்பட்டதும் இதன் பலன் தானோ? எட்டுக்கிரகங்கள் சேர்ந்தபடியால்தான் இவையெல்லாம் நடந்தனவா? அப்படிச் சேராவிட்டால் நடந்திராதா?

கென்னடிசோதிடம்பார்த்திருந்தால் டலஸுக்குப் போகாமல் வீட்டிலிருந்து உயிர்தப்பியிருக்க முடியுமா? ரொக்கட்டில் உலகைச்சுற்றி விண்வெளி வலம் வந்த முதலாவது வீரன் ககாரின் கேவலம் ஒரு விமான விபத்திலா சாகவேண்டும்? அவன் அப்படிச் சாகவேண்டியது அவனுடைய தலையெழுத்தா? சோதிடம் பார்த்திருந்தால் அந்த விமானப் பயணத்தை நிறுத்தி உயிரைக் காப்பாற்றியிருக்கலாமா?

வானத்தில் பறந்துசென்ற விமானம் திடீரெனத் தீப்பற்றிக்கொண்டு நொருங்கி விழுந்ததில் நூற்றுக்கணக்கானவர் மரணமடைந்தார்கள் என்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். அப்படியானால் அந்த நூற்றுச்சொச்சப் பேர்களுக்கு ஒரே நாளில் ஒரே நேரத்தில் மாரகம் சம்பவிக்கவேண்டுமென்று கோள்கள் திட்டம்போட்டிருந்தனவா? நூறுபேர் தான்போகட்டும். ஹிரோஷிமாவிலும், நாகஸாகியிலும் அணு குண்டு வெடித்தபோது லட்சக்கணக்கானவர்கள் ஒரே கணத்தில் மாண்டார்களே! இவர்கள் எல்லோருக்கும் ஜாதக பலன் ஒரே மாதிரியாய் இருந்ததா?

(தொடரும்)

## இது 'விதேசி' வேண்டாம்

மகாத்மாகாந்தி இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபொழுது யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார். அவர் யாழ் நகரில் தங்கியிருந்த சமயம் ஒரு திங்கட்கிழமையன்று அவரைக் காணவேண்டும் என்று ஆவல்கொண்ட யாழ்ப்பாணத்துச் சாமியார் என்று யாவராலும் அழைக்கப்படும்யோகர் சுவாமிகள் அண்ணலுக்குண்ண 'அப்பிள்' பழங்களும் கொண்டு சென்றார். திங்கட்கிழமை மௌன விரதமாதலால் காந்தி, யோகர்சுவாமிகளோடு உரையாடவில்லை. எழுத்திலேயே "உங்களைப்பற்றி நான் நன்றாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று உண்ணாவிரதம் ஆதலால் உங்களோடு பேச முடியவில்லை" எனத் தெரிவித்தார்.

சுவாமிகள் தான் அவருக்கெனக்கொண்டு சென்ற அப்பிள் பழங்களை ஏற்று உண்ணுமாறு கேட்டுக் கொண்டார். அப்பிள் பழங்களைக் கண்ட அண்ணல் அவை 'விதேசி' பொருள் எனவும் 'விதேசி'ப் பொருட்களைத் தான் வெறுப்பதாகவும் கூறி அவற்றைப்பெற மறுத்து விட்டார்.

## புத்திர

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பேறடைந்த ஒரு சுமங்கலியைக்கொண்டு தலைசுற்றி எரியும் தீபத்தை அகற்றி அவ்வுருண்டைகளைத் தானமாக வழங்கவும். இதனால் புத்திரதோஷ நிவர்த்தியுண்டாம். முக்கிய குறிப்பு: விரதம் அனுஷ்டிக்கும் பிரதி செவ்வாய் வாரமும் இச்சாபத்தியமாக நடந்துகொள்ளுவது அவசியமாகும்.

## இ. தி. மு....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வஸ்கொடகாமாவோ இபுன்பட்டுடாவோதான் இலங்கைக்கு முதலில் வந்த உல்லாசப் பிரயாணி என்பது பொலநறுவைப் பிரதிநிதியின்கருத்து. அழகி சீதாதான்இலங்கைக்கு வந்த முதல் உல்லாசப் பிரயாணி என்பது ராஜாங்க அமைச்சரின் கருத்து.

நல்லகாலம் சீதா கள்ளத்தோணியில் வந்தார் என்று யாரும் சொல்லவில்லை.

சிலமாதங்களுக்கு முன்னர் சிங்களத்தில் ஒரு ராமாயணநாடகத்தை ஒருவர் புதுமுறையில் எழுதியிருந்தது நினைவுக்கு வருகிறது. ராமரின் மனைவியான சீதா, இராவணனின் அழகிலும் ஆண்மையிலும் மயங்கி இராவணனை வற்புறுத்தி இராவணனுடன் இலங்கைக்கு வந்தாள் என்பதுதான் அந்த நாடகாசிரியரின் கற்பனை. இதைப்பற்றி ஆட்சி மன்றத்தில் யாரும் பேசாதது மகிழ்ச்சி.

விஜயனும் அவனதுசகாக்களும் இலங்கைக்கு வந்த உல்லாசப் பிரயாணிகளா?

0 0 0

## எது நல்லது?

"நரி வலம்போனால் நல்லதா, இடம்போனால் நல்லதா?' என்று ஒருவன்கேட்டதற்கு "வலம் போனாலென்ன இடம்போனாலென்ன, மேலே விழுந்து பிடுங்காமல் போனால் நல்லது" என்று பதிலளித்தானாம். நமதுநாட்டில் வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதும் பின்னர் வேலைநிறுத்தம் தோல்வியா வெற்றியா என்று கணிப்பதும் வேலை நிறுத்தம் தொழிலாளருக்கு வெற்றியா அரசாங்கத்துக்கு வெற்றியா என்று ஆராய்வதும்நரி வலம்போனால் நல்

(16-ம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்கு

மூட்டைகளுடன்கூடிய கதிரைகள், வாங்குகள் உடன்விற்பனைக்குண்டு. தியேட்டர் சொந்தக்காரர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும்.

—(விளம்பரம் அல்ல)

## அண்ணலின் அன்றாட கடைசி அலுவல்

காந்தியடிகளின் தினசரி வாழ்வில், இரவில் குறித்த நேரத்தில் தவறாது நடைபெறும் நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. அதாவது அன்றைய கடைசி அலுவல் கூட என்றும் சொல்லலாம்.

அண்ணல் தாம் தூங்கப்போகுமுன் ஆசிரம ஏற்பாடுகளை முதலில் விசாரிப்பார். பின்னர் ஒவ்வொரு பைசாவிற்கும் வரவுசெலவுக் கணக்குக் கேட்பார். அதைக் கேட்க ஒரு நாளும் தவறவேமாட்டார்!

இதுவே அன்றைய நிகழ்ச்சிகளுக்குமுற்றுப் புள்ளி. அதற்குப் பின்னரே அண்ணல் படுக்கையில் வந்து அமர்வார். துளசி மாலையை எடுத்துக்கொண்டு ராம ஜெபம் செய்வார். ஜெபமாலையை உருட்டிக்கொண்டே தூங்கி விடுவார்.


## வெற்றுச்சாக்குக் கேள்விப்பத்திரம்

எங்கள் சங்கத்திலிருக்கும் சுமார் 8000 வெற்றுச் சாக்குகளுக்குக் கேள்விப் பத்திரம் கோரப்படுகிறது.

உரிய விண்ணப்பப்பத்திரத்தை ரூபா 2/- கொடுத்துச் சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் ரூபா 250/- வைப்புப் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் "வெற்றுச் சாக்குக் கேள்விப்பத்திர"மெனத் தபால் உறையின் மேல் எழுதி 10-10-69 மாலை 4 மணிக்குப் பிந்தாது சங்கக் கந்தோரில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப் படல்வேண்டும்.

க. கணபதிப்பிள்ளை,
பொதுமுகாமையாளர்,
அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

அளவெட்டி,
30-9-69. 1775

## வரிவிளம்பரம்

### தேவை

யாழ்ப்பாண எல்லைக்குள் 3 பரப்புக் காணியுடன் எல்லா வசதியுமுள்ள புதிய வீடுஒன்றுவிலைக்குத் தேவை. விபரங்களுக்கு விளம்பர இல: 1437, 'ஈழநாடு' மே/பா, யாழ்ப்பாணம். 1437

40, 45 வயதுடைய கொழும்பு வீதிகள் நன்கு தெரிந்த திறமையான கார்ச் சாரதி தேவை. விண்ணப்பிக்கவும் 27/5, கனல்றோ, கொழும்பு-1. 1447

### விற்பனைக்கு

கிளிநொச்சியில் இருக்கும் ஒரு பிரபல அடைவுகடை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல: 1426, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1426

### வாடகைக்கு

கிளிநொச்சி, கரடிப்போக்கு சந்தியில் இரண்டு கடைகள் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 1444


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மகாத்மா மணிமொழிகள்!

யுத்தம் பிழையானது. அது தணிக்க முடியாததும் நினைக்கமுடியாத கொடூரமானதுமென்பதை நான் அறிகிறேன். யுத்தம் விலக்கப்படவேண்டுமென்பதையும் அறிகிறேன். இரத்தப் பெருக்காலும் கபடத்தாலும் பெற்ற சுதந்திரம் சுதந்திரமாய் இராதென்பதை நன்கு உணருகிறேன்.

0 0 0

எனது ஒத்துழையாமை பகைமையில் வேரூன்றியிருக்கவில்லை. அன்பில்தான் வேர் விட்டிருக்கிறது. இது எனது சமயக் கோட்பாட்டின் முதற்பொருளாய் உள்ளது.

0 0 0

நிலைத்த சமாதானத்தை அடையமுடியாதென்று நம்பிக்கையீனப்படுவது நம் மனித இயல்பில் உள்ள தெய்வத்தன்மையில் நம்பிக்கையீனப்படுவதாகும்.




### இந்திராவுக்கு யுதாண்ட் செய்தி:

# "மகாத்மாவின் கொள்கை உலகத்துக்கு ஏற்றவை"

## அல் அக்ஸாவும்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

வெற்றிக்கும் எடுத்துக்காட்டல்லவா?

இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கையில்மாற்றம் ஏற்படுமென்பதை ரபாத் மகாநாட்டுக்குச் சென்று திரும்பிய அமைச்சர் பக்ருதீன் அலி அகமத் தெரிவித்திருக்கிறார். இந்த மாற்றம் எப்படியிருக்குமென்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

### ஆமதாபாத் சம்பவம்

காந்திமகான் பிறந்த குஜராத் மாநிலத்தின் தலைநகரான ஆமதாபாத்தில்ஓர் அற்ப விஷயம் காரணமாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் ஏற்பட்ட கலவரம் நூற்றுக்கணக்கான உயிர்களைப் பலிகொண்டபின் இப்போதுதணிந்து வருகிறது கலகத்தை அடக்கவும் அமைதியை நிலைநாட்டவும் குஜராத் அரசாங்கமும்இந்தியமத்திய அரசும் எடுத்த நடவடிக்கைகளில்யாரும்குறைசொல்வதற்கிடமில்லை. இந்தியாவின் முன்னாள் உதவிப் பிரதமரும் பம்பாய் ராஜ்யத்தின் முன்னைய முதலமைச்சருமான மொரார்ஜி தேசாய்குஜராத்தில்அமைதி நிலவுவதற்காக இன்னமும் உண்ணாவிரதம் இருந்துவருகிறார். 1946-ம் ஆண்டில் இந்திய - பாகிஸ்தான் பிரிவினைக் கிளர்ச்சியின்போது ஆரம்பமான இந்து முஸ்லிம் கலவரம் காந்தி மகானின் உயிரைப் பலிகொண்டபின்னரும்கூட முற்றாக ஒழியவில்லை. இடையிடையே இது பல இடங்களிலும் தலைகாட்டத்தான் செய்கிறது. வெள்ளையர் இந்திய உபகண்டத்தை விட்டு வேண்டாவெறுப்பாக வெளியேறியபோது உருவாக்கிவிட்டுச்சென்றசூழ்நிலைஇது.

ஆனாலும் காந்தி மகானின் நூற்றாண்டு ஜெயந்தி கொண்டாடப்படும் இச்சமயத்தில் காந்திமகான்பிறந்த மாநிலத்தில், அவர்தம் காலமெலாம் உழைத்த வகுப்பு ஒற்றுமை குலைந்து கலவரம் ஏற்பட்டு உயிர்ப்பலி ஏற்படக்காரணம் என்ன? வெளியாரின் தூண்டுதல்தான் என்ற சந்தேகம் இந்தியாவில் தெரிவிக்கப்படுகிறது இதுபற்றி ஆராயவும் இந்திய அரசு நடவடிக்கை எடுக்கிறது. இந்தியாவில் எது நடந்தாலும் சிலர் பாகிஸ்தான்மீது குற்றஞ்சாட்டுவதும் பாகிஸ்தானில் எது நடந்தாலும் சிலர் இந்தியாமீது குற்றஞ்சாட்டுவதும் புதிய விஷயமல்ல. இது வெள்ளையர் செய்துவைத்து விட்டுப்போன புண்ணியம்.

கட்சி அரசியல்முறையையுடைய ஜனநாயக அமைப்பைக்கொண்ட நாடுகளில் அதுவும் இன்னமும் பரீட்சார்த்த நிலையிலிருக்கின்ற ஆசியநாடுகளில் இனக்கலவரம் ஏற்படுவது ஏன்? ஆசியாவில் வகுப்பு ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய மலேஷியாவிலேயே இனக்கலவரம் தொடங்கி பல உயிர்களைப்பலிகொண்டு விட்டதே! ஆசியாவில் ஜனநாயக ஆட்சியமைப்பை இன்னமும் சரிவரப் பின்பற்றிவரும் நாடுகள் இந்தியா, இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர் ஆகியவைதாம். இந்த நாடுகளில் ஒன்றிலாவது இனக்கலவரம் ஏற்படாமலில்லை. ஆசியாவில் ஜனநாயகம் தோற்றுவிட்டதா? ஆசியநாடுகள்அன்னியர் அளித்துவிட்டுச் சென்ற அரசியல் அமைப்பைக் கைவிட்டு தமக்கு ஏற்ற தமது சூழ்நிலைக்கேற்ப புதிய அரசியல் அமைப்புமுறையை உருவாக்கவேண்டிய நிலை வந்துவிட்டது.

### தேவை

வவுனியாவில் உள்ளஸ்தாபனமொன்றுக்குமோட்டார் உதிரிப்பாக விற்பனையில் 3 வருட அனுபவமுள்ள ஒரு விற்பனையாளர் தேவை. 8-10-69க்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1092 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1092

பெயின்ற் இரும்பு வியாபாரத்தில் தேர்ச்சிபெற்ற ஒரு காஷியர் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். பிணைப் பணம் ரூபா 1000/- சூரியப் பிரகாஷ் ஸ்ரோர்ஸ், வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 1451

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## "வரலாற்றிலே ஒரு சிறந்த மனிதர்" என ரஷ்யா புகழ் அஞ்சலி

**'மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகள் உலகத்துக்கே பொருந்தக்கூடியவை' என்று ஐக்கியநாடுகள் சபைப் பொதுக்காரியதரிசி திரு. யுதாண்ட் இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்-**

'உலக வரலாற்றிலேயே ஒரு சிறந்த மனிதர்'' என்று சோவியத்ரஸ்யா புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளது.

நூற்றுக்கு மேற்பட்ட உலக நாடுகள் மறைந்த அண்ணல் காந்திஜியின் நூற்றாண்டு விழாவை நேற்று கொண்டாடின. இலங்கையில் நாடெங்கிலும் காந்தி நூற்றாண்டுவிழா நேற்று கொண்டாடப்பட்டன.

### புதுடில்லியில்

நேற்று அதிகாலையிலிருந்தே புதுடில்லியிலுள்ள ராஜ்காட்டுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் திரள் திரளாகச் சென்று காந்திமகான் சமாதிக்கு அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தனர். மலர்ச் செண்டுகளையும், மலர் வளையங்களையும் சாத்தி அஞ்சலி செலுத்தியவண்ணமிருந்தனர்.

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியும், ராஷ்டிரபதியும் இந்நிகழ்ச்சிகளை காலையில் ஆரம்பித்து வைத்தனர். திருமதி இந்திரா நூலால் நூற்ற துணியை அண்ணலின் சமாதியில் சாத்தினார். உபராஷ்டிரபதி பாட்டக், தலாய்லாமா ஆகியோரும் இதனையடுத்து மலர்ச்செண்டுகளைச் சாத்தினர்.

### எல்லைக்காந்தி

எல்லைக்காந்தி கான் அப்துல்கார்கான் சிவப்பு ரோஜாக்களாலான மலர் வளையத்தைச் சாத்தினார்: பின்னர் தலாய்லாமா ராஷ்டிரபதி ஆகியோருக்குமிடையில் எல்லைக் காந்தி அமர்ந்துகொண்டு தியானித்தார்.

பின்னர் மக்கள் கூட்டம் விஜயகாட்டுக்குச் சென்று மறைந்த பிரதமர் சாஸ்திரிக்கு அஞ்சலிசெலுத்தினர்.

### தமிழ் நாட்டில்

சென்னை மெரினா கடற்கரையிலுள்ள காந்திசிலைக்கு முன்பாக நேற்றுக் காலை ஆயிரக்கணக்கான மக்களும், சிறுவர் சிறுமியர்களும் கூடி அஞ்சலி செலுத்தினர். காலை 8-10 மணிக்கு தமிழகமுதல்வர் திரு முகருணாநிதி கொடியை ஏற்றிவைத்தார். காந்தியின் கொள்கைகளை பின்பற்றுவோமென தமிழக முதல்வர் முன் மக்கள் சபதமெடுத்துக்கொண்டனர்.

சென்னைக்கு காந்திஜி வந்திருந்த போது பஸ்ஸில் பயணம் செய்ததைசித்தரிப்பது போன்று பஸ்பவனி ஒன்றும் இடம்பெற்றது. சென்னையில் காந்தி மியூஸியம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செனட் சபைத் தலைவர் திரு ஏ ரத்நாயக்கா, திரு மைத்திரிபாலசேனநாயக்கா ஆகியோரும் உரைநிகழ்த்தினர்

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கிழக்கு ஜெர்மன் சென்றிருப்பதால், இவ் விழாவில் கலந்துகொள்ளவில்லை அவர் அனுப்பிய செய்தி விழாவில் வாசிக்கப்பட்டது

## இ. தி. மு. க

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

லதா, இடம்போனால் நல்லதாஎன்பதைப்போன்றவைதான். யாருக்குவெற்றி யாருக்குத் தோல்வி என்பதல்ல. ஏற்கனவே வாழ்க்கைச் செலவு உயர்வுப் பளுவைச் சுமக்கமுடியாமல் அவதிப்படும் பொதுமக்களை மேலும் மேலும் பாதிக்கும் வேலைநிறுத்தங்கள் நடைபெறுமலிருந்தாலே போதும்.

தேர்தலை எதிர்பார்த்து எல்லாக்கட்சிகளும் இயங்கும் இச்சமயத்தில் அவசரகாலநிலைமையும் அத்தியாவசிய சேவையும் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதும் பொது வேலைநிறுத்தத்துக்கு ஆயுத்தம் நடப்பதும் நல்லதா? இந்தப் [illegible]

### கூவீப் முடிவுகள்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22 | Z | 0706 | 29 | Q | 0631 |
| 16 | Q | 0598 | 03 | T | 0164 |
| 15 | H | 0511 | 14 | Q | 0249 |
| 23 | U | 0421 | 33 | X | 0914 |
| 15 | T | 0933 | 14 | Q | 0578 |
| 09 | A | 0729 | 23 | S | 0958 |
| 31 | L | 0642 | 42 | H | 0235 |
| 31 | Q | 0012 | 12 | V | 0672 |
| 29 | O | 0533 | 01 | F | 0246 |
| 20 | J | 06 7 | 30 | K | 0046 |
| 07 | N | 0032 | 08 | F | 0047 |
| 06 | M | 0581 | 01 | M | 0974 |
| 19 | D | 0341 | 30 | W | 0740 |
| 35 | N | 0630 | 24 | D | 0316 |
| 26 | C | 0142 | 33 | M | 0183 |
| 18 | C | 0465 | 03 | Y | 0880 |
| 30 | O | 0649 | 22 | W | 0393 |
| 16 | W | 0724 | 47 | G | 0101 |
| 02 | H | 0925 | 14 | M | 0939 |
| 13 | U | 0603 | 31 | O | 0008 |
| 35 | H | 0019 | 19 | J | 0760 |
| 40 | V | 0633 | 07 | U | 0921 |
| 03 | Y | 0351 | 16 | U | 0868 |
| 01 | O | 0267 | 35 | J | 0395 |
| 35 | M | 0686 | 32 | D | 0617 |
| 43 | S | 0498 | 42 | Z | 0923 |
| 24 | X | 0334 | 05 | N | 0353 |
| 36 | N | 0585 | 25 | E | 0981 |
| 29 | C | 0736 | 37 | U | 0103 |
| 12 | O | 0629 | 07 | P | 0435 |
| 19 | L | 0724 | 19 | X | 0649 |
| 31 | X | 0843 | 32 | N | 0097 |
| 27 | V | 0577 | 18 | N | 0721 |
| 34 | O | 0783 | 26 | M | 0816 |
| 22 | Y | 0679 | 23 | O | 0595 |
| 08 | M | 0192 | 25 | J | 0570 |

### மரண அறிவித்தல்

இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. முருகேசு அருணாசலம் காலமாகிவிட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், குமாரசாமி (றப்பர் ஆராய்ச்சி நிலையம் அகலவத்த), போதரத்தினம், சரோஜினிதேவி கனகரத்தினம், லீலாதேவி ஆலாலசுந்தரம் (ஆசிரியை செங்குந்த இந்துக் கல்லூரி), இசைஞானி சுந்தரலிங்கம் (ஆசிரியை), யோகாம்பிகை, ருக்மணிதேவி (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), போதராணி, கமலாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் (3-10-69) வெள்ளிக்கிழமை காலை ஒன்பது(9-00) மணியளவில் சைவமுறைப்படி நடைபெறும். 56/1, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 1093

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org